732

பார்ப்பாரூர்

காஜா அலாஉத்தீன்

காரண சரித்திரம்

★

மு. ஹ. அப்துர்ரஹ்மான் மரைக்காயர்

★

வெளியிட்டோர்:
...ஹம்மது கௌது மரைக்காயர்,
...தறுகா ட்ரஸ்ட்டி.

Q7:332
N56
111235

பார்ப்பாரூர்

காஜா அலாஉத்தீன்

காரண சரித்திரம்

★

மு. ஹ. அப்துர்ரஹ்மான் மரைக்காயர்

★

வெளியிட்டோர்:
வா. ஹ. முஹம்மது கௌது மரைக்காயர்,
தறுகா ட்ரஸ்ட்டி.

முதற்பதிப்பு: நவம்பர், 1956.
பிரதிகள் 1000.
பதிப்புரிமையுடையது.

கிடைக்குமிடம்:
வா. ஹ. முஹம்மது கௌது மரைக்காயர்,
கவர்ன்மென்ட் காஜி,
நாகப்பட்டினம்.

அச்சிட்டோர்:
தாரா அச்சகம், நாகப்பட்டினம்.

வேண்டுகோள்.

சோதரீர்! அஸ்ஸலாமு அலைக்கும், வ ரஹ்மதுல்லாஹி, வ பரகாத்துஹு. தென்னிந்தியாவிலுள்ள பிரபல்ய புண்ணிய ஸ்தலங்களுள் **பார்ப்பாரூரும்** ஒன்று. **ஸையிதினு காஜா ஷைகு அலாவுத்தீன் ஹஸனீ ஷிஷ்தீ (ரலி)** ஆண்டவர்கள் இறுதியாக அவ்வூரில் அடக்கமாகி சுமார் மூன்றரை நூற்றாண்டுகளாகின்றன. அந்த **தறுகா** ஆதியில் எங்கள் முன்னோர்களால் கட்டப் பெற்றபடியே, எவ்வித மாற்றமுமின்றி யிருந்து வருகிறது. இவ்வமயம் சீர்கேடடைந்திருக்கும் **வாலை**களை மட்டும் மராமத்துச் செய்வதானால் எளிதாகப் பார்த்து விடலாம். ஆனால், **தறுகா** பழங்கால கட்டிடமா யிருக்க, **வாலை**களைப் புதுப்பிப்பது அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை. **தறுகா கட்டிடமும் புதிய முறையில் நிருமாணிக்கப் பெறல் வேண்டும்; வாலைகளும் ஜன சஞ்சாரத்திற்குத் தகுந்த விதமாகத் திருத்தி யமைக்கப் பெறல் வேண்டும்.** அப்படியானல் இக்கைங்கரியத்திற்குப் பெருந் தொகை தேவைப்படும். இதற்கு **தறுகா**வின் நிதி போதுமானதா யில்லை. எனவே, தரும சிந்தை யுள்ளவர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு, புதிய முறையில் நிருமாணிக்க முடிவு செய்துள்ளேன்.

காஜா ஆண்டவர்களது சரிதை அரபியில் மௌலிதாக மட்டில் இருந்து வருகிறதே யல்லாது, தமிழில் இதுவரை வெளிவராதது பெருங்குறையே. இக்குறை நீங்கவும் **தறுகா** கட்டிட நிதிக்காகவும் நண்பர் ஜனப் மு. ஹ. **அப்துர்ரஹ்மான் மரைக்காயர்** அவர்களால் தயாரிக்கப் பெற்றுக் கையெழுத்துப் பிரதியாயிருந்த இச்சரிதையைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துப் பொருளீட்டவும் அச்சிடலானேன். இந்த **துஹ்பா**வைப் பெற்றுத் தங்களாலானதைச் செய்து **காஜா** ஆண்டவர்களது கிருபா கடாட்சத்தைப் பெற்றேகப் பிரார்த்திக்கின்றேன்.

நாகை,
6—10—56.

வா. ஹ. முஹம்மது கௌது மரைக்காயர்,
தறுகா ட்ரஸ்ட்டி.

அட்டவணை.

		பக்கம்
	மதிப்புரை.	... 1
	முன்னுரை.	... 8
1	துதி.	... 26
2	தலைமுறை.	... 27
3	'முரீது' வழி.	... 30
4	பிறப்பு.	... 32
5	பஹாஉத்தீனுக்கு ஊழியம் புரிந்தது.	... 33
6	குருவைத் தேடிச் சென்றது.	... 35
7	'வலி'க்குக் கொம்பு முளைத்தது,	... 37
8	'முரீது' பெற்றது.	... 39
9	சற்குருவின் உபதேசம்.	... 40
10	சற்குருவின் 'வபாத்'தும் பகுதாது பிரயாணமும்	42
11	கௌதுல் அஃலமை தரிசித்தது.	... 43
12	நாகூர் நாயகரைச் சந்தித்தது.	... 46
13	மக்கா யாத்திரை	... 48
14	ககீரைக் காப்பாற்றியது.	... 50
15	மதீனாவுக்குச் சென்றது.	... 52
16	சிரந்தீபுக்குச் சென்றது.	... 54
17	'அசா'வைப் பாதுகாக்க வைத்துச்சென்றது.	... 55
18	சிகந்தர் மாளிகைக்குச் சென்றது.	... 57
19	'காபிர்'கள் இஸ்லாத்திலானது	... 60
20	அதிவீரராமபட்டணம் வந்தது.	... 62
21	அம்பர் வரவழைத்தது.	... 63
22	இஸ்மாயீலுக்குப் பெண் பேசியது.	... 65
23	முடம் தீர்ந்தது.	... 69
24	பற்கொம்பு மரமானது.	... 71
25	கோவில் கதவடைப்பு.	... 73
26	நாகூருக்குச் சென்றது.	... 77

		பக்கம்
27	'அசா'வால் ஆறு பிளந்தது.	... 82
28	புகை ரதம் இறங்கியது.	... 84
29	எருது உயிர் பெற்றது.	... 85
30	இராஜபுத்திரர்கள் இஸ்லாமானது.	... 87
31	குஷ்டம் தீர்ந்தது.	... 89
32	'பாலாபூர்' 'வபாத்து'.	... 91
33	இஸ்மாயீல் கனவு கண்டது.	... 93
34	சகோதரர்கள் சந்தித்தது.	... 94
35	'கப்ரு'விலிருந்து உத்திரவு பிறந்தது.	... 96
36	'கப்ரை'த் தோண்டியது.	... 99
37	குருடும் பைத்தியமும் நீங்கியது.	... 100
38	அதிவீரராமபட்டணத்தில் அடக்கியது.	... 104
39	'தறுகா'வுக்கு யானை வந்த வரலாறு.	... 105
40	மண்டம் நகர்ந்தது.	... 108
41	சந்நியாசி சுகம் பெற்றது.	... 110
42	தென்னந் தோப்பு பாழானது.	... 111
43	ஆற்றில் விழுந்த கத்தி வீட்டிலிருந்தது.	... 113
44	பெட்டி சமைந்தது.	... 114
45	பார்ப்பாரூருக்கு வந்தது.	... 115
46	மண் மாரி பெய்தது.	... 116
47	அதிகாரி மகன் சுகமடைந்தது.	... 119
48	கள்வர்கள் குருடானது.	... 123
49	மாது மதம் மாறியது.	... 125
50	உப்பு மண்ணானது.	... 128
51	இறுதி 'வபாத்து'.	... 129
52	'தறுகா' கட்டியது.	... 132
53	மரித்த மகவு உயிர் பெற்றது.	... 135
54	கணக்குத் தீர்த்தது.	... 138
55	பல இடங்களில் அடங்கியது பற்றிய விபரம் பார்ப்பாரூர்ப் பிரார்த்தனைப் பதிற்றொன்று.	146

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	6	திறனுடே	திறனேடு
20	21	அன்வா ஹிர் — ரஹ்மான்	அன்வாரிர் — ரஹ்மான்
24	9	(8—10—35)	(8—8—38)
30	7	ஸைதுல்	ஸையிதுல்
34	9	அலாஉத்தீான!	அலாஉத்தீனே!
57	12	மிருமும்	மிருகமும்
58	15	சொல்லுங்கள்	செல்லுங்கள்
61	3	விடுத்வம்	விடுத்தம்
70	17	சொல்லுங்கள்	செல்லுங்கள்
77	20	நாயககம்	நாயகம்
,,	22	கோத்கிரத்திலுள்ள	கோத்திரத்திலுள்ள
78	18	துழைந்ததும்	நுழைந்ததும்
80	1	அலிம்	ஆலிம்
112	11	நலல	நல்ல
,,	8	நிவைவேற்ற	நிறைவேற்ற

மதிப்புரை

பிஸ்மில்லாஹி.

கல்விமான்களே!

உலக ரட்சகர் நபிகள் பிரான் **முஹம்மது முஸ்தபா றஸூலெ கரீம்** (ஸ-ம்) அவர்களின் அருமைத் திரு மகளார் **பாத்திமா ஜஹ்ரு** (ரலி) அவர்களின் உன்னத உதரத்தின் வழியாக, இந்த உலகத்தில் மனிதர்கள் நடந்து கொண்டு வர வேண்டிய கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பொறுமை, நிறை யோர்ப்புக் கடைபிடி என்ற வீரத்துவ முதலிய சாதனங்களை இன்னின்னவாறென்று நடத்திக் காட்டுவதற்குப் போதிய முன்மாதிரியாக ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி), ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) இருவர்களும் இரண்டு சூரியச் சந்திரர்கள் புதிதாய்த் தோற்றரவானாற் போல் உதயமானார்கள். இவர்களின் அருமை பாட்டனார் நபிகள் பிரான் (ஸ-ம்) அவர்களின் சொல் செயல்களையும், தங்கள் தகப்பனார் அலீ-யிப்னு-அபீதாலிபு (ரலி) அவர்களின் வெற்றி வீரத்தையும் வழுக விடாமல் இவ்வுலகினர் அறிய நடத்திக் காட்டி வந்த முதல் சந்ததியான மாணிக்கங்கள் இவ்விருவருமே யாவர்.

இந்த இரண்டு மாணிக்கங்களும் தந்தை அலீ (ரலி) அவர்களின் முதுகந்தண்டில் ஜனகமான காலத்தில், நபிகள் நாயகம் (ஸ–ம்) அவர்கள், தங்கள் அருமை மருமகனுராகிய அலீ (ரலி) அவர்களை விளித்து, "அலியே! நுமது முதுகந்தண்டில் இரண்டு சந்ததிகளை 'அல்லாஹுத்தஆலா' அமைத்து வைத்துள்ளான்; அவைகள் இரண்டும் என் சந்ததியாக இருக்கும்" என்று சொன்னதாக 'உலமா'க்கள் சொல்லுகிருர்கள். இன்னும், "இவ்விரு குழந்தைகளும் எனது இரண்டு கண்மணிகளாகும்" என்று நபிகள் திலகம் (ஸ–ம்) அவர்கள் கூறியிருப்பதாகவுங் கூறப்படுகிறது. இத்தகைய பெருமைவாய்ந்த **இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன்** (ரலி) அவர்களின் மகத்துவங்களை அதிகரித்துப் பேசவும் வேண்டுமா? இவ்விருவர்களின் பூர்வ வரலாறறிந்த கல்விமான்கள் நன்கறிவரென்றே விடுகிறேன்.

'ஸையிதுஸ்–ஸாதாத்து" வழிவாரென்று இவ்வுலகினர்கட்கு அடைவு தர வந்த பெருமை மிக்க மனிதர்கட்கெல்லாம் முதற் பூண்டாய் விளைந்தவர்கள் இவ்விருவர்களுமே என்பதற்கு, மேற் கூறிப் போந்த அருமை வாக்கே சான்று பகரப் போதரும். இவ்விருவர்களுள் முன்னேதரர் ஷாம் நாட்டின் 'கலீபா' தனத்திற்காக முஆவியா (ரலி) வின் கொடிய மகன் யஜீது என்பவனுல் நச்சிடப்பட்டு மறைந்து பட்டனர். பின்னேதரர் யஜீதைச் சேர்ந்த கூபாக்களின் ஒரு பகுதியாரின் கொடிய படையெழுச்சியால் கர்பலாவின் கண், மறப்போர் செய்து மாண்டு பட்டனர் என்பதும் சரிதை ஆதரமாக விளங்கப்படுகிறது. இங்ஙனம் வெற்றித் துவஜத்தை உலகினர் காணப் பறக்க விட்ட இவ்விரண்டு வீர புருஷர்களின் வம்மிச வழிவாராக வந்தவர்களே, இன்று உலகத்துப் பல பாகத் தரைகளில் அனேக முளைகளாக அடங்கி

மறைந்தருளி நிற்கும் 'ஔலியா'க்கள் 'அக்தாபு' களென்போர்கள்.

இப்பெரியார்கள் மக்களுக்கும் மாக்களுக்கும் இருவுலகத்துச் சாதனங்களை அடக்கியருள வல்லவர்களாதலின், இவர்கள் ஆயுள் காலத்திலும் மறைந்து நிற்குங் காலத்திலும் மனிதர்கட்கு என்னென்ன நலனைச் செய்து வந்தார்கள்? செய்து வருகிறார்கள்? என்பதை யறிவதற்கு, அன்னவர்களோடு நேரிற் கண்டும் கைபிடைப் பெற்றும் தெளிவுபட வைத்திருந்த பூர்வ அபூர்வ அற்புதாதி வரலாற்றுடையாரிடமிருந்து பிற்காலத்தினர்களில் புலவர்களும் 'உலமா'க்களும் தேடி யணித்து பாரிய கிரந்த ரூபமாய் வெளியிட்டு வைத்திருப்பதைக் கொண்டு தான் அவர்களை நன்கறிந்து ஒழுக வேண்டியதாக இருக்கிறது. இன்னும் இப்படிப்பட்ட அற்புதப் பொக்கிஷங்களைத் திறந்து மகமைச் செய்து வரும் 'வலீ' மார்கள், 'குத்துபு' மார்களின் பூர்வ வரலாற்றுப்படிகள் கர லிகிதமாய் அனேகத் திசைகளிலுள்ள அனேக மக்களிடமிருந்து கொண்டுதான் இருக்கின்றன. அக்கர லிகிதப்படிகள் பலவாறு சிதைந்து, வெட்டுப் பூச்சிகளால் ஏட்டோடு எழுத்துக்கள் துண்டிக்கப்பட்டும் செற் கூட்டங்களால் அரியுண்ணப் பட்டும் பலவாறு சிலவாருய்த் துகள் பட்டிருப்பினும், அஃது எங்கள் முன்னோர் தேடி வைத்த முதலென அவர்கள் வைத்துக் கொண்டிருப்பார்களே யன்றி, சரித்திரக்காரர்கட்குக் கொடுத்தேனும் பயனடையார். கல்லிடை மணிப் போல் மறைந்து நிற்கும் அனேகப் பெரியார்களின் சரிதைகள் இப்படிப்பட்ட புண்ணியவான்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டதால் தான் அன்னவர்களின் அற்புதாதி காரணங்கள் மிகுதமாய் வெளிக் கறியாமல் உள்ளே அமிழ்ந்து கிடக்கின்றன வென்பதற்குப் போதிய மறைவென்ன இருக்கிறது?

இங்ஙனம் மறைந்திருந்த சரிதைகளில் **நாகையைச்** சார்ந்த **பார்ப்பாரூரில்** அடங்கி விளங்கும் **ஸையிதினு காஜா ஷைகு அலாஉத்தீன் ஹஸனீ சூிஷ்தீ (ரலி)** அவர்களின் சரிதையும் ஒன்ருகும். இவர்கள் பார்ப்பாரூர் முடிவாக **பதினெரு** ஸ்தலங்களில் அடங்கிப் பல அற்புதாதி காரணங்களைச் செய்து வருகிருர்கள் என்பதை இந் நூலாசிரியர் தமக்குக் கிடைத்துள்ள ஆதார மட்டிற்குச் சுருங்க விளக்குகின்ருர். **காஜா** ஆண்டகையவர்கள் 'ஸையிது' வம்மிச வாழையடி வாழையானவர்களென் பதை இச்சரித்திர தலைமுறை யத்தியாயம் மிகத் தெளிவாய் விளக்கும்.

இப்புண்ணிய பேறுடையப் பெரியாராகிய **காஜா** ஆண்டகை அவர்களின் சரிதைகளிற் சில, அறபியில் அவர்கள் பேரில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் 'மௌலூது-ஷரீபி'ல் அறபி கற்ற 'மௌல்வி'கள் அறிந்து கொள்ளும் ஆவலுடைத்தாய் அமைக்கப் பட்டிருக்கின்றனவன்றி, தமிழறிந்த தமிழ் நாட்டினர் அறிந்து கொள்ளும் ஆவலுடைத்தாய், தமிழில் அவைகளை ஒழுங்குபட யாரும் எழுதி வைத்திருப்பதாகத் தெரியவில்லை. இத்தகையக் குறைபாடொன்றை விலக்கி வைப்பது இக்கால சரித்திரக் காரர்கட்கு சாத்தியமான காரியமாமா? இல்லை; அஃது அசாத்தியமே யாயினும், அக்குறை யொன்றை நிவர்த்திப்பது நங்கடமையி லொன்ருமென்று, பொது நல வூழிய புலன் கண்டாரும் இரங்கோனில், உலகத்திடையே மிகப் போற்றத் தக்கதாய் வெளி வந்து கொண்டிருந்த **"உதய சூரியன்"** என்ற அபிதானப் பத்திரிகைக் கோர் மாஜி ஆசிரியரும் எனக்குமோர் அன்புறும் நண்பருமான நாகை **மு. ஹ. அப்துர் – ரஹ்மான் மரைக்காயர்** அவர்கள், பலவாறு பலபல விடங்களுக்குச் சென்று, பல்லோரல்லாத சில்லோரிடங் கண்ட ஆதரவுகளை மிகப் பிரயாசையோடு

பெற்றுக் "கலை யூழியமே தன் கடமை" என்ற நாமத்தை இவ்வுலகறிய நாட்டி, **காஜா** ஆண்டகையவர்களின் அருட் பெருக்கையும் நாம் அடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் இச்சரிதையை ஒழுங்குபட எழுதி வெளியிட்டு வைக்க முன் வந்தனர்.

நண்பர் மு. **ஹ. அப்துர் – ரஹ்மான்** அவர்கள், தமக்குக் கிடைத்த சரிதை ஆதரவு அளவுக்கு இந்நூலை கரலிகிதமாய் ஒழுங்குபட எழுதி, நாகூரில் என் மாட்டு வந்து, "**நாவலீர் !** வெகு நாட் பரியந்தம் தமிழறிந்தார் ஆவலை தீர்க்கக் கிடைக்கொண்ணு திருந்த நம் **பார்ப்பாரூர் காஜா ஆண்டகை** அவர்களின் அபூர்வ வரலாற்றினை நான் மிக்க பிரயாசையுடன் தேடியணைத்து, இதோ வெளியிடுவதற்கு ஒன்று படுத்தியுள்ளேன்; தாமும் இதனைக் கண்ணுற்றுக் களிப்பது நலமென்ன விழைகிறேன்," என்று என் பார்வைக்களித்தனர். நான் மிக மரியாதையுடனும் பிரியத்துடனும் பெற்று, அக்கர லிகித முதற்படியை ஆதி முதல் அந்தம் வரையில் படித்துப் பார்த்து மிக மகிழ்ந்தேன். இத்தமிழ் நாட்டின் கண் மிகப் பிரக்கியாதி பெற்றுப் பெரும் புலவர் பெருந்தகையாய் விளங்கி மறைந்த எனது அரிய தந்தையார் **வா. குலாம் காதிறு நாவலர்** அவர்கள் தமது ஆயுள் காலத்தில் இப்படிப்பட்ட பெரியோர்களின் வரலாறுகளைப் புராணமாகவும் வசன காவியமாகவும் எத்தனையோ நூல்களை இத்தமிழ் நாட்டினர்கட்குப் பயன் தரத்தக்க விதமாய் வெளியிட்டு வைத்துள்ளார்கள். அப்படிப்பட்ட காலத்திலும் அவர்கள் கட்புலனுக்குந் தென்படாத விதமாய், இலை மறை காய் போன்று மறைந்திருந்த இந்தச் சரிதை, இன்று தமிழ்க் கற்றோருக்குப் பயனளிக்கு முறையில் என்னரிய நண்பர் அவர்கட்குக்

கிடைத்து வெளிவர ஆரம்பித்தது. நாம் இச்சரிதாமிர்தத்தை யுண்ணக் கொடுத்தது பெரும் பாக்கியமேயாகும்.

நண்பர் அவர்கள் இச்சரிதையைச் சரித்திர பிரளுதல் இல்லாமல் அத்தியாயங்களை வரிசை வாரி யமைத்தும், நூலை நுவலுந் திறனுடே தற்கால அமைச்சல் பொருந்த மிக வெண்மையாக எழுதி, யாவரும் அறிய மிக அழகாயமைத்துள்ளார்கள். இந்நூல் அமைந்த நடையை மிக நுணிகி யறிந்தால், என் தந்தையார் எழுதி வைத்துள்ள நாகூர் நாயகர் காரண சரித்திரமாகிய **கன்ஜுல் கருமாத்தின்** நடைக்கு ஒப்ப ஒருவாறு அமைந்திருக்கிறதென்றே சொல்லல் வேண்டும். மேலும் இச்சரிதை முன்னுரையல்லாத துதி முதலாகப் பல விடங்களில் அடங்கியது பற்றிய விபரம் வரை 55 அத்தியாயங்களைக் கொண்டதாய் அமைந்திருக்கிறது. இதனுள் ஒவ்வோர் அத்தியாயத்தின் அற்புதாதி காரணங்களும் "இத்தகைய நாயகமா காஜா ஆண்டவர்கள்!" என்று ஒவ்வொருவரும் வியந்து பாராட்டத்தக்க விதமாய், பொற்கிண்ணத்திற் பெய்து வைத்த பனி நீர் போலும், மாணிக்கச் செப்பினுள் இட்டு வைத்த கஸ்தூரி போலும் அமைந்து காணப்படுகின்றன. இந்நூல் சில பல அத்தியாயங்களில், வாசிப்போர்க்கு ஏற்படும் ஐயப்பாட்டை விளக்கஞ் செய்யத்தக்க சங்கை கோட்பாடுகளையும், அறியப்படாத கருத்துக்களை இனியறியுங்கால் வெளியிடுதல் என்ற அடைப்பாடுகளையும், கீழ்க் குறிப்புப் புள்ளி யடையாளத்துடன் விளக்கிக் காட்டப் பெற்றிருக்கின்றன. மனிதர்கள் உய்வு அடைவதற்குப் பெரியோர்களின் சரிதையும் இன்றியமையாத காரணம் என்பதற்குப் போதிய புருஷார்த்தங்களென்னமோ அவை யெல்லாம் இந்நூலகத்தே யமைந்து கிடக்கின்றன வென்பதை இந்நூலை வாசித்துணர்ந்தோர் நன்

கறிவர். இந்நூல் யாவருக்கும் நன்கு பயன் தந்து நிற்கு மென்று சொல்லுவதே போதுமென்று எண்ணுகிறேன்.

இந்நூலாசிரியர் நண்பர் **மு. ஹ. அப்துர் – ரஹ்மான்** அவர்கள் இந்நூலுக்காக எடுத்துக் கொண்ட அரிய பெரும் பிரயாசைக்குத் தக்க நற்பலனையும் பெரும் புகழை யும் இறைவன் இவ்வுலகத்தில் என்றென்றுங் கொடுத் தருளுவான். இச்சரித்திரத் தலைவர் **காஜா** ஆண்டகை யவர்களின் அருட் பெருக்கும் இந்நூலாசிரியன் சந்ததி பாரம்பரியத்திற்கு உண்டாகுவதாக! இந்நூலைப் போன்று இன்னும் அனேக முன்னோர், பெரியோர்களின் சரித்திரங் களைத் திரட்டி இத்தமிழுலகம் பயன்பெறத் தக்க முறை யில் வெளியிட்டு வருவதற்கு நீண்ட ஆயுள் பாக்கியத்தை யும் இந்நூலாசிரியருக்கு ஆண்டவன் கொடுத்தருள் வானாக! 'ஆமீன்.'

இங்ஙனம்,

நாகூர்,
15—11—44.

வா. கு. முகம்மது ஆரிபு நாவலன்.

முன்னுரை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்; வல் ஆகிபத்து லில் முத்தகீன்; வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸையிதினா முஹம்மதின், வ அலா ஆலிஹி, வ அசுஹாபிஹி, வ அஹ்லி பைத்திஹி அஜ்மயீன்.

'ஹம்து' 'சலவாத்'துக்குப் பின், எமது சற்குருவாம் **குத்பு றப்பானீ கௌது சமதானீ முஹிய்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி)** அவர்கள் சீர் பாதம் சிரமேற் கொண்டு ஆரம்பஞ் செய்கின்றேன்.

இஸ்லாத்தைத் தோற்றுவித்த இணையற்ற போதகரும் இறுதி தெய்வத் தூதருமான நபிகட்கரசர் **ஸையிதினா முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்** அவர்கள், அறிவின் பட்டினமாக விளங்கினார்கள். அப்பட்டினத்துக்கு வாயலென, தமது வாரிசாக ஸையிதினா அலீ (ரலி) அவர்களைச் சுட்டிக் காட்டி யுள்ளார்கள். "அறிஞர்களே நபிமார்களின் வாரிஸ்கள்" என்பதும் ஓர் நாயக வாக்கியம். அவ்வாறு மெய்யறிவின் முதிர்ச்சியால் நபியின் வாரிஸ்களாகக்

கூடியவர்களைப் பற்றி, "எனது உம்மத்தில் உதிக்கும் அறிஞர்கள் பனீ – இஸ்ருயீல் வம்சத்தில் வந்த நபிமார்களைப் போன்றவர்களாவர்" என்பதாய் எம்பெருமானுர் (ஸ–ம்) அவர்களே திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள்.

நபியின் உண்மை வாரிஸ்களாகத் திகழ்ந்து அறிவின் வாயலான அலி (ரலி) அவர்களில் நின்றும் ஆரம்பமான ஆன்ம சந்ததியாகிய 'ஸில்ஸிலா'வின் தொடர்பு கொண்டு, அனுபவ வழிகளைப் பற்றிய மார்க்கங்களைத் தெரிந்து ஒழுகிய காரணத்தால் 'இல்முல் – லதுன்னீ' எனும் மெய்ஞ்ஞானம் பெற்றுர்கள். சென்ற காலத்து நபிமார்களைப் போல் அற்புதாதி காரணங்களைக் காட்டினுர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உத்திரவைப் பெறக் கூடிய திருஷ்டி வாய்ந்தவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்களின் ஏவற் பிரகாரம் உலகின் பல பாகங்களுக்குச் சென்று 'தீன்' சுடர் கொளுத்திய மஹான்களுக்கே இக் காலை 'ஔலியா' என்ற பெயர் வழங்கப் பெற்று வருகின்றது.

* 'அல்லாஹ்'வின் அன்பர்களாகிய 'ஔலியா'க்கள், சிருஷ்டிகள் சம்பந்தப்பட்ட வரையில் ஊமையர்களாகவும் குருடர்களாகவும் செவிடர்களாகவுமே இருப்பர். ஆண்டவனை யடுத்திருக்கும் அவர்கள் அவனல்லாதவற்றை வாயால் பேசுவது மில்லை; செவிகளால் கேட்பது மில்லை; கண்களால் பார்ப்பது மில்லை. ஆண்டவன் சமீபமாய் இருக்கும் காரணத்தால் அவனது சக்தியைக் கண்ட பயமும் பீதியும் ஒரு புறம் அவர்களை மிகைத்து வருகின்றது. அவனது கருணையைக் கண்ட

---

*— * இதற்கிடையே கண்டவை ஔலியாக்களைப்பற்றி கௌதுல் – அஃலம் ஸையிதினு முஹியியித்தீன் அப்துல் காதிரு ஜீலானிய்யி (ரலி) அவர்கள் கூறும் வர்ணனை.

அன்பும் பக்தியும் மறு புறம் அவர்களை வயப்படுத்து கின்றது. ஒரு பக்கம் 'ஜலாலிய்யத்' தாகிய சக்தி மயத் தின் காட்சியால் அடிபட்டவர்களாயும், மறு பக்கம் 'ஜமாலிய்யத்' தாகிய கருணை மயத்தின் காட்சியால் இழுபட்டவர்களாயும், வேறு பக்கம் 'ஜலால்' 'ஜமாலு'க் கிடையே இடம் பெற்றவர்களாயும் இருப்பார்கள்.

இறைவனின் கருணைப் பேறுகளே அவர்களுக்கு உண வளிப்பது; அவனது அன்பே அவர்களுக்குத் தாகந் தீர்ப்பது. அவனது கருணை யெனும் உணவை உண்பவர் களாகவும் அன்பு யெனும் அமுதை அருந்துபவர்களாக வும் இருப்பார்கள். இத்தகையோர்களே அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களது பிரதிநிதி கள்; உண்மையில் வாரிஸ்கள் இவர்களே யாவார்கள். சிருஷ்டிகளை மெய்ப் பொருளவில் சேர்ப்பதே இவர்கள் கடமை. சத்கருமங்களைக்கொண்டு இவர்கள் மானிடர்முன் அல்லாஹ்வின் ஆதாரங்களை நிரூபித்துக் காட்டுவார்கள். ஒவ்வொரு வஸ்துவையும் அதனதன் இடத்திலேயே வைத்து, அருகதை யுள்ளவர்களுக்கு, அவரவர்களுக் குரித்தான உரிமைகளை யளித்து வருவார்கள். தங்களுக் குரியவற்றை எடுக்கும் போது, இவர்கள் மனத் தூண்டு தலாலோ இயற்கையின் தேவையினாலோ எடுப்பதில்லை. அல்லாஹ்வை மட்டிலும் முன்னிட்டதாகவே அவர்களது விருப்பு வெறுப்பு இருந்து வரும். உச்சியிலிருந்து உள்ளங் கால் வரையில் அவர்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அவனல்லாத எதற்கும் அவர்களில் இடமில்லை. எவர்கள் இந்நிலைமையை அடைகின்றார்களோ அவர்களே முழு அன்பும் அடைபவர்கள்; ஈடேற்றமும் ஜெயமும் பெற்ற வர்கள். மானிடரும், 'ஜின்' களும், அமரர்களும், புவி யும், வானமும் அவர்கள் மீது கவிய ஆரம்பித்து விடு கின்றன.

'நபி' மார்களுக்கு 'அல்லாஹுத்-தஆலா' தனது திருவசனமாகிய 'வஹீ'க் கொண்டு பயிற்சி யளித்தான்; 'ஔலியா'க்களுக்கு தெய்வீக உதிப்பாகிய 'இல்ஹாம்' கொண்டு பயிற்சி யளிக்கின்முன். 'ஔலியா'க்கள் 'நபி' மார்களுடைய நிர்வாகப் பொறுப்பாளர்களாகவும், பிரதிநிதிகளாகவும், வாரிஸ்களாகவும், ஊழியர்களாக வும் இருக்கின்முர்கள். 'ஔலியா'க்களின் காரியாதிகள் எத்துணை ஆச்சரியகர மானவை களாகவும், எத்துணைப் பிரீதியானவைகளாகவும் இருக்கின்றன! இறைவன் புற மிருந்து எது வரினும் அதை அவர்கள் இனிமையாகவே காண்பார்கள். ஏனெனில், இவர்கள் மெய்ப் பொருளால் ஞானமிர்தம் ஊட்டப்பட்டவர்களாய் வாழ்கின்முர்கள். இறைவனின் கருணை மயத்தின் மடியில் நித்திரை செய்ப வர்களாய் இருக்கின்முர்கள். ஆண்டவனின் பிரியத்தால் அன்பு பெருகியவர்களாய் வாழ்கின்முர்கள். இந்நிலையில் அவர்களுக்கு, தெய்வத்தோடு நிலைத்திருப்பதும், தெய்வ மல்லாதவற்றை விட்டு ஒதுங்கி யிருப்பதுமே இன்பமாக இருப்பின் அதிலென்ன அதிசயம்? தெய்வ சந்நிதானத் திலேயே என்றும் இருப்பவர்களாய், உயிரற்றவர்களைப் போல் முன்னிலையில் கிடக்கும் இவர்கள், தெய்வீக உதிப் பைக் கொண்டே யல்லாது அசையமாட்டார்கள்.

"இத்தகைய நல்லடியார்களே உலகப் பிரஜைகளின தும் உலகத்தினதும் காரியஸ்தர்களாகவும், உலகத்தை நிலைபெறச் செய்பவர்களாகவும் இருக்கின்முர்கள். அவர் களை முன்னிட்டே உலகமும் நிலை பெற்றிருக்கின்றது. அவர்கள் சிருஷ்டிகளை ஆளுபவர்களாகவும், மெய்ப்பொரு ளின் பிரதிநிதிகளாகவும் இருப்பது, தோற்றத்திலன்று, அகமியத்திலே யாம். 'ஔலியா'க்கள் சிருஷ்டிகளைப் பார்க்கும் போது, அவைகளை நடைப் பிணங்களாகவே காண்பார்கள். 'கப்ரு'களாகிய 'கோரி'யின் பக்கம்

செல்லும் போது, ஆங்கு நிகழும் தண்டனை அல்லது அருட் கொடையை உணர்வார்கள். இறுதி நாளாகிய 'கியாமத்'தையும் அன்று நடைபெறப் போகிறவற்றை யும் நோக்குவார்கள். ஆண்டவனின் அருளையும் ஆக்கினை யையும் காண்பார்கள். புறக் கண்களால் சிருஷ்டிகளை யும், அகக் கண்களால் அச்சிருஷ்டிகளில் நிகழும் ஆண்ட வனின் செயல்களையும் காண்பார்கள். இத்தகைய வல்லமை யுடையவர்கள் ஆண்டவன் நாட்டப்படி விதி வசம் நடைபெறுமானல் அதற்குத் தலை சாய்ப்பார்கள். மரணம் வந்திடினும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள் வார்கள்."*

† **"அல்லாஹ்வுடைய 'ஔலியா'க்கள் மரிப்ப தில்லை; எனினும் ஒரு இல்லத்திலிருந்து மறு இல்லத் துக்குச் செல்லுகின்றார்கள்."** இதுவே அவர்கள் விஷயத் தில் 'மௌத்' தாகும். ‡ "ஔலியாக்கள் பூமியின் கீழ் தனித்து – 'கல்வத்து' – இருக்கின்றார்கள்; அவர்களுக்கு பயம் என்பதில்லை; அவர்கள் ஆண்டவனுடன் இருக் கின்றார்கள்." 'ஔலியா'க்கள் தங்களது ஜீவிய காலங் களில் எங்ஙனம் மானிடருக்கு உபகாரங்கள் புரிந்து வந் தார்களோ அங்ஙனமே நிரியாண காலத்துக்குப் பின்னும் செய்ய வல்லமை யுடையவர்கள். ஆண்டவன் அவர் களுக்கு அத்தகைய தத்துவத்தை யளித்துள்ளான். **"ஆண்டவனுடைய பாதையில் 'ஷஹீது' ஆனவர்களை – உயிர் நீத்தவர்களை – மரித்தவர்களென்று கூறுதீர்கள்; ஆனல், அவர்கள் ஜீவனுள்ளவர்கள்,"** என்பதாய் குர் ஆன் – ஷரீப் கூறுகின்றது.

'ஔலியா'க்களை உலகை மறந்த நிலையிலிருந்து, தான் நாடும் போது உயிர்த்தெழுப்பி, உலக வாழ்விலும்

---

† ஹதீஸ். ‡ சுல்தான் பாஹூ வலியுல்லாஹ் (ரஹ்)

தனது நாட்டப்படி ஈடுபடச் செய்வதுமுண்டு. எங்ஙனம் 'கியாமத்து' நாளில் அழிந்து உருக் குலைந்து சிதறிப் போனவை ஒன்று சேர்ந்து உயிர்த்தெழுமோ, அங்ஙனமே இவ்வுலக வாழ்விலேயே மரித்து, பிறகு உயிர்த் தெழு பவர்களாய் 'ஒளலியா' க்கள் விளங்குவார்கள். சாதா ரண மக்களோ, இறந்து அழிந்த பின் உயிர்ப்பிக்கப்படும் அனுபவத்தை 'கியாமத்து' நாளில் மட்டிலும் அடை வார்கள். 'ஒளலியா'க்களோ ஆண்டவனது ஒரு நோக் கால் உயிர்த்தெழும் அனுபவத்தை இப்பிரபஞ்சத்திலேயே அடையப் பெறுவார்கள். ஆண்டவனும் தனது 'குதரத்' தாகிய சக்தியை 'ஒளலியா' க்கள் மூலம் காட்டுகின்றான். ஆண்டவன் இவர்களைக் கொண்டே உலகங்களை ஆட்சி புரிந்து வருகின்றான். யுக முடிவு பரியந்தம் இவர்கள் உலகில் யாரும் காணாத விதமாய் சஞ்சரித்து வருவார்கள், இவர்களது எண்ணிக்கை நானூற்று நாற்பது.

"ஆண்டவா! என் மீது நபிமார்கள் நடந்து திரிந் தார்கள். அவர்களுக்குப் பின் நபிகள் பிரான் முஹம்மது (ஸல்) அவர்களைச் சுமந்திருந்தேன். தற்போது அவர் களும் சென்று விட்டார்களே! நான் தனித்து விட் டேனே!! என் மீது எந்த நபியுமில்லையே!!!" என்ப தாய் பூமி பிரலாபித்து, இறைவனிடம் முறையிட்டுக் கொண்டதாம். "நான் சில 'ஒளலியா'க்களை யனுப்பு வேன்; அவர்களது ஹிருதயங்கள் நபிமார்களது ஹிருத யங்களைப் போலிருக்கும். அவர்கள் யுக முடிவு வரை உன் மீது சஞ்சரிப்பார்கள்," என்று ஆண்டவன் பூமிக்கு உரைத்தானாம். இவ்விஷயத்தை ஆண்டவனது 'சாலி ஹா'ன தோழர் ஒருவர், தமது உலக யாத்திரையில் நித்திய ஜீவனையுடைய ஹஜ்ரத் கிஜ்ர் (அலை) அவர்களைச் சந்தித்த சமயம், அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட தாக "மவாஹிபில் மஜீது பீ மனாகிபி ஷாஹில் ஹமீது"

என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றது. "அந்த 'ஔலி யா'க்கள் ஏகத்தில் 440 பேர்கள். அவர்களுள் 'நுஜபா' 300 பேர்கள்; 'நுகபா' 70 பேர்கள்; 'புதலா' 40 பேர்கள்; 'அகியார்' 10 பேர்கள்; 'உறபா' 7 பேர்கள்; 'அன்வார்' 5 பேர்கள்; 'ஔத்தாது' 4 பேர்கள்; 'முக்த்தார்' 3 பேர்கள். 'குத்பு' 1 பேர். 'குத்பே' அனைவருக்கும் அதிபராவர். இன்னாரை '**கௌது**' என்றும் சொல்லப்படும். இவர்களில் யாரும் நிரியாணமடைவார்களாயின், அவர்களுக்கடுத்த 'தரஜா' வெனும் பதவியிலிருப்பவர்கள் அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வார்கள்," என்று கிஜ்ர் (அலை) சொல்லியதாகவும் மேற்படி நூல் கூறுகின்றது.

"நீங்கள் பார்க்கவில்லையா? இறைவன் புவியில் **நிழலை** எவ்வாறு பரப்பி யிருக்கின்றான்!" என்பதாய் ஆண்டவன் பரிசுத்தத் திருமறையில் கூறியுள்ளான். இவ்வாக்கியம் 'ஔலியா'க்களைக் குறித்த சித்திரமே யாம். 'ஔலியா'க்களே இறைவனது நிழலாவர். சில பொழுது நிழல் தோன்றியும் தோன்றாமலும் இருப்பதே போல், 'ஔலியா'க்களும் மனிதக் கண்களுக்குத் தோன்றியும் தோன்றாமலும் உலகில் சஞ்சரிக்கின்றனர். சுத்தத்திலும் அசுத்தத்திலும் நிழல் பட்டிடினும், எங்ஙனம் அதில் படிகிறதில்லையோ அங்ஙனமே 'ஔலியா'க்கள் தோற்றத்தில் உலக சம்பந்தமுடையவர்களாகக் காணப்படினும் தாமரை இலையிலுள்ள தண்ணீர் போல் பட்டும் படாமலுமே இருப்பர். இறைவன் இத்தகைய மெய்யடியாரையே தனது **நிழல்** என்பதாகக் கூறியுள்ளான். இவர்களே உலகத்துக்கு முளைகளாக இருக்கின்றார்கள்; அந்தரங்கத்தில் அண்டங்களை ஆள்பவர்களும் இவர்களே யாவார்கள்.

'நுபுவ்வத்' தாகிய நபித்துவத்தின் தொடர்பு முடிவடைந்து விட்டபடியால், ஒவ்வொரு காலத்திலும் நபியின்

பிரதிநிதியாக ஒருவர் நியமன மாகின்றார்; அத்தகையவர் உலக முடிவு பரியந்தம் ஏற்பட்டுக் கொண்டே இருப்பர். அவரே ஆண்டவனையடுத்த 'வலி' யாவர்; கூட்டத்தாருக்கு 'இமாம்' ஆனவர் – முன்னிலையானவர். அன்னவரே நேர் வழிக் காட்டக் கூடிய 'ஹாதி'யும் 'மஹ்தி'யுமானவர். அத்தகையவர் சில சமயம் மறைந்தும் திரிவர். தம்மை மறைத்துக் கொள்வதே 'வலி'யின் தன்மையாகும். அவர் ஒருவரேயாவர். அவரது அறிவு வானவர் பிரான் ஜிப்ரயீலுக்கு ஒப்பாகும். அவர் ஆண்டவனது ஜோதியாவர்; உலகத்தின் மூளையாவர்; அண்டத்தின் துருவ மாவர்; 'குத்பு' எனும் அதிபராவர். வலம் இடம் இரு பக்கங்களிலும் அன்னவருக்கு அமைச்சர்கள் இருக்கின்றனர்; அவர்களும் 'வலீ'களாவர். அவர்கள் கண்ணாடி தீபத்துக்குச் சமானமாவார். 'குத்பே' அதற்குள்ளிருக்கும் விளக்காவார். அந்த 'குத்பு'டைய பிரகாசமோ, ஆண்டவனது ஜோதியாக இருக்கின்றது! அந்த ஜோதி விளக்கில் தாலி, விளக்கின் பிரகாசம் பளிங்கியில் படுகின்றது. இங்ஙனமே 'வலீ'களின் பதவிகள் இருக்கின்றன. 'குத்பு' மறைந்தால் – நிரியாணமானால் – அடுத்த பதவியிலுள்ளவர் அந்த ஸ்தானத்தில் நியமனமாகின்றார்.......இவ்வாறே படிப் படியாக 'ஔலியா'க்கள் ஏற்பட்டுள்ளனர். அன்னவர்களை அங்கீகரிப்பவர் ஈடேற்ற மடைவர்; நிராகரிப்பவர் கேபலத்திலாகி அழிவர்," என்பதாய் மெய்ஞ்ஞான சொரூபி மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ரூமீ (றஹ்) அவர்கள் 'மஸ்னவீ – ஷரீபி'ல் கூறியுள்ளார்கள்.

"நிச்சயமாக 'அல்லாஹ்'வின் 'ஔலியா' வெனும் அன்பர்களுக்கு பயம் என்பதில்லை; அவர்கள் கவலை யுறுவதுமில்லை; இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்குச் சுப செய்திகளே உண்டு," என்பதாய் குர்ஆன் – மஜீது கூறுகின்றது. 'வலீ'மார்கள் எனது பரிவட்டத்தின் கீழ்

இருக்கின்றார்கள்; என்னைத் தவிர வேறு யாரும் அன்னவர்களை யறிய மாட்டார்கள்,'' என 'ஹதீஸ் – குதுஸி' நற்சாட்சி யளிக்கின்றது. '' ஔலியா'க்கள் ஆண்டவனுக்குச் செல்லப்பிள்ளைகள்; அந்தரங்க பகிரங்க விஷயங்களை அறிந்தவர்கள் ....ஆண்டவனுக்குக் கண்ணாடி போன்றவர்கள்........கப்பலை ஓட்டக்கூடிய – காப்பாற்றிக் கரை சேர்க்கக் கூடிய – நூஹு (அலை) அவர்களைப் போலொத்தவர்கள்,'' என்று 'மஸ்னவி – ஷரீப்' முழங்குகின்றது. ஆகவே தான் இத்தகையோரின் தொண்டர்களாக மனு, 'ஜின்', 'மலக்'காகிய முக்கூட்டத்தவரும், ஏனைய சிருஷ்டிகளும் ஆகிவிடுகின்றனர். அவர்கள் ஈருலகத்தையும் கைக் கடுகு போல் பார்க்கும் சக்தியுடையவர்கள். அவர்கள் அஸ்தகிரியிலும், அவர்களது பக்தர்கள் உதயகிரியிலும் இருந்திடினுஞ் சரி. அபாய காலத்தில் அவர்களைக் காப்பாற்றி இரட்சிக்கும் கரத்தையும் ஆண்டவன் அவர்களுக்களித்துள்ளான். ஆண்டவனில் நின்றும் 'ஔலியா'க்களுக்கு ஓர் வித வல்லமை யுண்டாகி யிருக்கின்றது. அவர்கள் பேசும் நாவும், முகரும் மூக்கும், கேட்கும் காதும், பார்க்கும் கண்ணும், பிடிக்கும் கரமும், நடக்கும் காலும் சர்வமும் அவனாகவே இருக்கின்றன். ஆகவே, '' ஆண்டவனுடன் இருக்கப் பிரிய முள்ளவர்கள் ஔலியா'க்களுடைய சமுகத்தில் இருப்பார்களாக! சிறிது நேரம் அவர்களுடைய சகவாசத்தில் இருப்பதானது முகஸ்துதி யற்ற நூறு வருட வணக்கத்தைக் காண மேலானது'' என்றறிவார்களாக!! 'ஔலியா'க்களுடைய சமுகத்தில் நின்றும் விலகி யிருப்பீர்களே யானால், உள்ளரங்கத்தில் ஆண்டவனை விட்டும் விலகி யிருக்கின்றீர்கள்'' என்றுணர்வீர்களாக!!! (ரூமீ)

இக்காலத்தில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய 'குலபா'க்களாகிய 'ஔலியா'க்கள் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களைத் தொடர்ந்தவர்களா யிருக்கிற படியால், இக்காலத்து மனிதர்களுக்கு இணக்கமான காரியாதிகளைக் கொண்டு ஆண்டவனுடைய ஏவல் (அஹ்காம்) களை நடத்தாட்டுகின்றார்கள். இந்த 'ஒளலியா'க்களைக் கொண்டு 'கியாம' நாள் வரை நடந்து கொண்டுதானிருக்கும். இறைவன் 'அன்பியா'க்களைக் கொண்டு நடத்திய வற்றையெல்லாம் இப்போது 'ஒளலியா'க்களைக் கொண்டு தான் நடத்துகிறான். ஏனெனில், அவர்கள் எல்லோரிடத்தும் ஆண்டவனுடைய 'அஸ்மா' 'சிபாத்' வெளியாகியிருப்பதால், இவர்கள் அவனாகவே யிருந்து 'ஹுக்மு'களை வெளிப்படுத்துகிறார்கள். இவர்களுடைய நாட்டம், சொல், செயல் அடங்கலும் அவனுடையதாகவே யிருப்பதால், 'ஒளலியா'க்களுக்கு வழிபடுவது ஆண்டவனுக்கு வழிபடுவதாகும். இவர்களுக்கு மாற்றஞ் செய்வது அவனுக்கு மாற்றஞ் செய்வதாகும்," என்பதாய் **கல்வத்து நாயகம் ஸையிது அப்துல் காதிறு காமில் வலியுல்லாஹ் (ரலி)** அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகைய சர்வசக்தியுள்ள 'ஒளலியா'க்கள் 'வபாத்' தான பிறகும், இவ்வுலகம் அவர்களுக்கு மறைந்திராது. 'அர்ஷு' முதல் பாதாளம் வரை உள்ளங் கை நெல்லிக் கனி போல் பார்ப்பார்கள். ஜீவிய தசையில் மனிதர்களின் நாட்டந் தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தது போல், நிரியாண தசைக்குப் பின்னுஞ் செய்யும் ஆற்ற லுடையவர்கள். இம்மை மறுமைக் குரிய நற் கருமங்களை நிறைவேற்றித்தருமாறு அவர்கள் பால் இரந்து கேட்பது ஆகும். அவ்வாறு கேட்பதும் குற்றமாகாது. "கருமங்களில் நீங்கள் இயலாதவர்களாய் ஆகி விடுவீர்களேயானால், 'கப்ரை' யுடைய சிலரிடத்தில் – சில 'ஒளலியா'க்களிடத்தில் – உதவி தேடுவீர்களாக!" என்ற திருத்தூதர் (ஸல்) அவர்களின் திருவாக்கு முண்டு. "மனு 'ஜின்' யாராகட்டும்,

தேவை யுடையவர்கள், விஷயத்தை யுடையவர்களாகிய 'ஔலியா'க்களுடைய 'கப்ரு'க்குச் செல்லட்டும்; அவர்களது கஷ்டங்களெல்லாம் இலேசாகி விடும்.'' என்பதாய் "முஹ்கமுல் – புகரு'' என்ற நூல் போதிக்கின்றது. ஆகவே,

"கூஷ்மெ ரோஷன் குன் ஜெ காகெ ஔலியா
"தா படீனீ ஜெ இப்த்திதா தா இன்த்தஹா

"ஆதி முதல் அந்தம் வரை எவ்விதத் திரையும் மறைவுமின்றி பார்க்க வேண்டுமானால், 'ஔலியா'க்களுடைய மண்ணைக் கொண்டு 'சுர்மா'வாகக் கண்களில் தீட்டி, நேத்திரங்களை வெளிச்ச மாக்கிக் கொள்வீர்களாக!'' (மஸ்னவீ)

மேலே விபரிக்கப்பட்ட அத்தகைய கூட்டத்தாரைச் சேர்ந்தவர்கள்தான் இச்சரிதா நாயகர் **ஸையிதினா காஜா ஷைகு அலாஉத்தீன் ஹஸனீ கூஷ்தீ காதிரீ (ரலி)** ஆண்டகை யவர்கள். இவர்கள் 'குத்பு – ஜமான்' ஆக விளங்கினார்கள். இவர்கள் பிறந்த வருடம் குறிப்பாகக் கூறுவதற்கில்லை. ஆண்டவர்கள் தென்னிந்தியாவுக்கு வந்த சமயம், **ஸையிதினா அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது நாகூரீ (ரலி)** அவர்கள் மதுரையைச் சேர்ந்த நத்தத்தில் இவர்களைச் சந்தித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அவ்வமயம் ஷாஹுல் ஹமீது (ரலி) நாயகம் அவர்களது மகனார் **ஸையிதினா முஹம்மது யூசுப் சாஹிப் (ரலி)** அவர்களுக்கு வயது ஒன்பது என "கஞ்சுல் – கருமாத்'' என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றது. அவர்கள் ஹிஜ்ரி 959-ம் வருடம் பிறந்தார்கள். ஆகவே, பார்ப்பாரூர் ஆண்டவர்கள் ஹிஜ்ரி 968-ம் ஆண்டில் நாகூர் ஆண்டவர்களைச் சந்தித்துள்ளார்கள் என்பது ஸ்திரமாகின்றது.

நபிகட்கரசர் ஸையிதினு முஹம்மதுர் – ரஸூலுல் லாஹ் (ஸல்) அவர்களுக்கு 'நுபுவ்வத்' 40-வது வயதில் கிடைத்திருக்கின்றது. அவர்கள் 'உம்மத்' திலுதித்த வலி கட்கரசர் ஸையிதினு அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) அவர்களுக்கும் 40-வது பிராயத்திலேயே 'விலாயத்து' ஏற்பட்டிருக்கின்றது. இதர 'ஔலியா'க்களுக்கும் 40 வயதுக்குக் குறைவின்றியே வலித்தனம் உண்டாகியிருப்ப தாய் பலருடைய சரித்திரங்களைக் கொண்டும் அறியக் கிடக்கின்றது. எனவே, பார்ப்பாரூர் ஆண்டவர்களும் 40 வயதுக்கு மேலேயே 'விலாயத்து'ப் பெற்றிருக்க வேண் டும் என்று உத்தேசமாகக் கொள்ள வேண்டியதிருக்கின் றது. காஜா ஆண்டவர்கள் நத்தத்துக்கு வந்த பொழுது அவர்களுக்கு வயது சுமார் 50-க்குள் இருக்கலாம் என அனுமானிக்க வேண்டியதாக இருக்கின்றது. இதைக் கொண்டே ஆண்டவர்களது பிறப்புச் சற்றேறக் குறைய ஹிஜ்ரி 920-க்குள் இருக்கலாம் என்பதாய் யூகிக்க வேண் டியதாக இருக்கின்றது. ஆகையால் தான் அவர்களது ஜனன வருஷம் குறிப்பின்றி ஹிஜ்ரி ஒன்பதே கால் நூற் றூண்டு என்பதாய் "பிறப்பு" 4-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

ஸையிதினு காஜா ஷைகு அலாஉத்தீன் ஹஸனீ க்ஷிஷ்தீ (ரலி) ஆண்டவர்கள் ஹிஜ்ரி ஒன்பதே கால் நூற் றூண்டில், ஆக்ஸஸ் நதிக்குத் தெற்கே, காபுலுக்கு வட மேற்கேயுள்ள **பல்கு** ராஜ்யத்தில் பிறந்தார்கள். பத்தா வது நூற்றூண்டில் **பாலாபூரில்** முதன் முதலாக அடங்கி னுர்கள். அவர்களது உத்திரவுபடியே அங்கிருந்து அவர் களுடைய பரிசுத்த தேகத்தை எடுத்துச் சென்று **அதிராம் பட்டணம்** என்று வழங்கும் **அதிவீரராம பட்டணத்தில்** இரண்டாவதாக அடக்கினுர்கள். அவர்கள் அங்கேயே தரிப்பட்டிருக்க வேண்டுமென்பது இறைவனின் நாட்ட

மல்ல போலும்! காஜா ஆண்டவர்கள் அற்புதமாய் அதை விட்டெழும்பி, வேறு ஊர்களுக்குச் சென்று சஞ்சரித்து வந்தார்கள். இவ்வாறு அவர்கள் பதினொரு ஸ்தலங்களில் அடங்கி யிருப்பதாகச் சொல்லப் படுகின்றது.

"லம்மா அய்யா மின் பல்க மௌலிதிஹி இலா
"ஸைலான அவா ஜிஸ்மு ஷைகி அலாயித்தீனி
"பீ அஹத அஷற மௌலிஅன் கல் வலித்துறை
"கத் பாஜ ஸுக்கானுன் பீ ஷைகி அலாயித்தீனி

என்பதாய் காயற்பட்டணம், நூஹு பின் ஆலிம் முஹம்மது அப்துல் காதிறு அவர்கள் "நபஹாத்துர் – ரஹ்மான்" என்ற 'கித்தாபி'ல் கூறுகின்றார்கள். இதைக் கொண்டு அவர்கள் பதினொரு இடங்களில் அடங்கி யிருப்பது ஸ்திரமாகிறதுடன், அதிலொரு இடம் சிலோனைச் சார்ந்த வலித்துறை என்பதாயும் தெரிய வருகின்றது.

"வ பீ பிலாதின் மஜாரத்துன் லகஷ்த் தஹரத்
"க பாப்பாவூரின் வ மதுரை தும்மி இஜ்தஹரத்
'பீ பலவத்துறை கதா பீ கைரிஹா லஹரத்
"யா ஷைதனல் முர்தஜா காஜா அலாயித்தீனி

என்பதாய் கிருஷ்ணபட்டினம், மௌல்வி பாஜில் அபில் ஜமால் முஹம்மது பதுருத்தீன் நூரீ இப்னு அஹ்மது லப்பை ஆலிம் சித்திகீ அவர்கள் "அன்வாஹிர்–ரஹ்மான்" என்ற கரலிகித 'கித்தாபி'ல் வரைந்துள்ளார்கள். பாப்பாவூர், மதுரை, பலவத்துறை ஆகிய ஊர்களிலும், இன்னும் மற்ற இடங்களிலும் அவர்களுடைய 'மஜார்' பிரபல்யமாக இருப்பதாய் மேலே கண்ட கவியில் கூறியுள்ளார்கள்.

"து பின்த்த கப்லன் மினல் புல்தானி பில் — பவ்த்தி
"கழித்லி புல்தானி பாலாபூரி பிஸ் — சித்தி
"வ கதாக அதிராம்பத்தன் பஹ்ரி பில் — ஹூத்தி
'ஹூஸ்னில் கித்தாமி அலாஉத்தீனி க்ஷிஷ்தியயி

"வ பிலாதினல் கிர்கர் லி — சிஹாபிஹல் மிப்ஷர்
"வ மிதுரையில் மிக்லர் ஏர்வாடி பில் — மிஷ்ஹர்
"இரோடு நல்நல் பந்தர் பலவத்துறையில் மிப்கர்
"அன் ஹா ரஜஃத்த அலாஉத்தீனி க்ஷியதியயி

என்பதாய் நாகூர், மௌலவி அல் — ஹாஜ் குலாம் தஸ்த கிர் நாஹு சாஹிப் அவர்கள் "கஸீதா — உல்விய்யா"வில் சொல்லி யுள்ளார்கள். பாலாபூர், அதிராம்பட்டணம், கீழக்கரை, மதுரை, ஈரோடு, ஏர்வாடி, பலவத்துறை முதலான ஊர்களில் அடக்கமாகி யிருப்பதாய் மேலே கண்ட இரு 'பைத்து'களில் கூறியுள்ளார்கள். மற்றொரு 'பைத்'த்தில் இறுதியாகப் பார்ப்பாரூரில் அடங்கி யிருப் பதாயும் மொழிந்துள்ளார்கள்.

"வ அவ்வலு மிதுபனிஹி பில் மிகானி
"பி பாலாபூரி ஷைகி அலாயித்தினி
"வ ஆகிறு மிதுபனிஹி பில் மிகானி
"பி பாப்பாவூரி ஷைகி அலாயித்தீனி

என்பதாய் காஜா ஆண்டவர்கள் பெயரால் காரைக்கால், மௌல்வி முஹம்மது அப்துல் காதிறு அவர்கள் சொல்லிய— கையெழுத்துப் பிரதியா யிருந்து வருகிற — 'கசீதா'வில் காணப் படுகின்றது. இரு ஸ்தலங்களில் ஒன்றுகிய பாலா பூரில் முதலில் அடங்கினதாக ஆரம்ப 'பைத்து'க் கூறு கிறதால், ஆண்டவர்கள் இரண்டு இடங்களில் தான்

அடக்கமாகி யுள்ளார்கள் என்பதல்ல. முதலாவதாக **பாலாபூரில்** அடங்கி, இரண்டாவதாக அதிராம்பட்ட ணத்தில் அடக்கப் பட்டதால், அவ்விரு ஸ்தலங்களில் முதலாவது பாலாபூர் என்றே பொருள் கொள்ள வேண் டும். பிந்தின 'பைத்'தைக் கொண்டு, அவர்கள் கடைசி ஸ்தலமாகப் **பார்ப்பாரூரில்** அடங்கினார்கள் என்பது ஸ்பஷ்டமாகக் காணப் படுகின்றது. ஆண்டவர்கள் டச்சுக்காரர்களின் ஆட்சியில், நாகபட்டணத்துக்குத் தென் மேற்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கும் பார்ப்பா ரூரின் கண் ஹிஜ்ரி பதினொன்றாவது நூற்றாண்டில் 'வபாத்'தானார்கள்.

காஜா ஆண்டவர்கள் அடக்கமாகி யிருக்கும் இடங்க ளெல்லாம் கடற்கரை யோரமாகவும் ஆற்றோர மாகவுமே காணப்படுகின்றன. அவர்கள் முதலாவதாக அடங்கிய **பாலாபூர்** இந்தியாவில் ஐக்கிய மாகாணத்திலிருக்கிறது. இலங்கையில் **வலித்துறை, பலவத்துறை, பள்ளிவாசல் துறை, கலித்துறை** ஆகிய நான்கு ஊர்களிலும், இந்தியாவில் **அதிவீரராமபட்டணம், கோரிப்பாளையம்** (மதுரை), **ஈரோடு, ஏர்வாடி** (திருநெல்வேலி), **கீழக் கரை, பார்ப்பாரூர்** முதலிய ஊர்களிலும், ஆகப் பதினொரு இடங்களில் அடக்கமாகி யுள்ளதாகத் தெரிய வருகின்றது. அவர்கள் அடங்கியுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திலும் நிகழும் 'கருமாத்' தெனும் அற்புதங்கள் அனந்தம். ஆண்டவர் கள் ஜீவிய காலத்தும் நிரியாண காலத்துக்குப் பின்னும் மனிதர்கள் திடுக்கிடக்கூடிய அற்புதாதி காரணங்களைச் செய்திருக்கின்றார்கள்; செய்தும் வருகின்றார்கள்.

ஒவ்வொரு 'வலீ'யும் ஓர் அம்சத்தில் தனிச்சிறப்புப் பெற்றவர்களாகவே விளங்கியதைச் சரித்திரங்களில் காணலாம். காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்

களோ! ஹஜ்ரத் மூஸா, ஈஸா (அலை) அவர்களைப்போல் விளங்கினார்கள். மூஸா (அலை) தன் கரத்திலிருந்த 'அசா' வெனும் ஊன்று கோலின் வழியாய்க் காட்டிய அற்புதங் களைப் போல், பல 'கருமாத்து'களைக் காட்டியுள்ளார்கள். ஆறு பிளந்தது, பக்த சிடர்களை 'அசா' பாதுகாத்தது போன்ற அற்புதங்களைச் செய்திருக்கின்றார்கள். ஈஸா (அலை) மரித்தோரை உயிர்ப்பித்திருக்கின்றார்கள்; நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ளார்கள்; நீர்மேல் நடந்திருக் கின்றார்கள். அங்ஙனமே ஆண்டவர்களும் பல அதிசயக் காரணங்களைப் புரிந்துள்ளார்கள்.

இச்சிறிய நூலில் கண்ட விஷயங்களுக்கு, காஜா ஆண்டவர்களது 'ஷைகு'டைய புத்திரர்களும் தமது 'கலீபா'க்களுமாகிய ஸையிது கமாலுத்தீன், ஸையிது இஸ்மாயீல் இருவருமே முக்கியமான அறிவிப்பாளர்களாகிய 'ருவி'யாவர். இந்நூல் ஆண்டவர்களது ஜீவிய சரித்திர வரலாற்றையும் அற்புதாதி காரணங்களையும் கூறுவதால், **பார்ப்பாரூர், காஜா அலாஉத்தீன் காரண சரித்திரம்** என்று இதற்குப் பெயர் வைத்துள்ளேன். இதில் கண்ட விஷயங்களுள் பெரும் பகுதி ஷைகு முஹம்மது தம்பி லப்பை ஆலிம் சாஹிப் அவர்கள் இயற்றிய "மௌஹிபத் துர்–றப்பில் மத்தீன் பி மனகிபத்திஷ் ஷைகி அலாவுத்தீன்" என்ற 'மௌலிது – கித்தாபி'லிருந்தே எடுக்கப்பட்டவை. 'மௌலிது-கித்தாபி'ல் காணப்படாத இதர விஷயங்கள் நம்பிக்கைக் குரிய பெரியோர் பலரிடமிருந்து கேட்டுத் தெரிந்தவைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே அவற் றுள் சிலவற்றை இச்சரிதையில் சேர்த்துள்ளேன்.

'மௌலிது–கித்தாபி'லுள்ளவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்ன சிதம்பரம், மௌல்வி ஜெ. அப்துர் – ரஹீம் பாகவீ அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்

தையும் நன்றியையும் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றேன். இச்சரிதையை இயற்றத் தூண்டுதலா யிருந்து, விஷயங்களைச் சேகரஞ் செய்வதில் பெருந் துணையாயிருந்த அன்பர் மு. முஹம்மது சாலிஹ் மரைக்காயர் அவர்களுக்கும், இந்நூலை எழுதி முடிக்க உற்சாக மூட்டிக் கொண்டிருந்த நண்பர் மு. யூ. அப்துல் அஜீஸ் மாலுமியார் அவர்களுக்கும் எனது விசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நூலை, ஹிஜ்ரி 1357 ஹு ஜமாதுல் – ஆகிர் மீ 11 உ (8–10–35) திங்கட்கிழமை, காலஞ் சென்ற என் அன்னை 'மர்ஹூமா', உம்மாமுத்து என்றழைக்கப்படும் முஹம்மது கௌது ஹபீபு நாச்சியாரின் ஆன்மாவுக்கு அர்ப்பணஞ் செய்துள்ளேன். ஸையிதினா காஜா மைகுத்து அலாஉத்தின் ஹஸனி சிஷ்தி (ரலி) அவர்கள் பொருட்டால் அன்னாருக்கு 'அல்லாஹுத் – தஆலா' நற்பதவியளிப்பானாக! 'ஆமீன்'.

கடல்போல் விரிந்த காஜா ஆண்டவர்களது மகிமையில் ஒரு சில துளிகளைச் சேகரஞ் செய்து ஒன்று திரட்டி, அவைகளைப் பார்வை யிடும்படி, தென்னாட்டு வாலிப முஸ்லிம்களுக்கிடையே மாணிக்கமாய்த் திகழும், நாகூர் தறுகா வித்துவானும் மதுரைத் தமிழ் சங்க அங்கத்தினரும் எனது நண்பருமாகிய ஜனாப் வா. கு. முஹம்மது ஆரிபு நாவலர் அவர்களை யடுத்து, நாவலீர்! இச்சிறியோனால் சேகரஞ் செய்யப்பட்டுத் திரட்டப்பட்ட இந்நூலைப் பார்வையிட்டு, இதில் காணுங் குற்றங் குறைகளைக் களைந்துத் தருக என்பதாய்க் கூறி, அவர்கள் பால் சமர்ப்பித்துக் கொண்டேன், இன்னாரும் அதை அன்புடன் பெற்று ஆராய்ந்த பின், நீண்ட தோர் மதிப்புரை எழுதி, ஓர் பிரார்த்தனைப் பதிற்றென்றும் இயற்றித் தந்து, என்னை கண்ணியப் படுத்திய நாவலர் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியையும் சமர்ப்பித்துக்

கொள்கின்றேன். இந்நூலில் முதலில் மதிப்புரையும், முடிவில் 'துஆ'வைப் போல் காணப்படும் பிரார்த்தனைப் பதிற்றொன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வாசகர்களே! இந்நூலில் கூடுதல் குறைதல் காணிடின், ஆதார பூர்வமாக எனக்கறிவிப்பின், 'இன்ஷா–அல்லாஹ்', மறு பதிப்பில் திருத்தத்துடன் வெளிவரும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். காஜா ஆண்டவர்கள் அடக்கமாகியுள்ள இடங்களில் ஆங்காங்கு நிகழும் 'கருமாத்து'க்களையும், 'தறுகா'க்களுக்கு அரசர்களால் கொடுக்கப்பட்ட மானியங்களின் விபரங்களையும் தெரிவிப்பின், மறு பதிப்பில் சேர்த்துக் கொள்கிறேன். இதன் பிரசுர உரிமை இந்நூலாசிரியனுக்கே உரியது. எவரும் உத்திரவின்றி பிரசுரிக்கலாகாது. 'வஸ்ஸலாம்'.

"றப்பனா தகப்பல் மின்னா இன்னக அந்தஸ் ஸமீஉல் அலீம்; வ ஆகிறு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்."

நாகபட்டணம், } மு. ஹ. அப்துர்-ரஹ்மான் மரைக்காயர்.

17—7—1944. } (நூலாசிரியன்)

பார்ப்பாரூர்

காஜா அலாஉத்தீன்

காரண சரித்திரம்.

★

1-வது அத்தியாயம்.

துதி.

[இது 'அல்லாஹ்,' 'றஸூலே'ப் புகழ்ந்து
கூறும் 'ஹம்து' 'சலவாத்' தெனும்
புகழா யிருக்கும்.]

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

'அல்லாஹ் ஜல்ல ஷஃனஹூ வ தஆலா' மறை பொருளான பொக்கிஷமாக இருந்து, தன்னை யறியப் படுவதை விரும்பி, தான் வெளியாகும் சம்பூர்ணதைய ஸ்தானமாக, 'மஜுஹருல் — அத்தம்' முஹம்மதுர் — ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வெளிப்படுத்தி, அவர்களுக்குப் பிரதிநிதிகளாகவும் உலகத்தின் முளை களாகவும் 'குத்பு'மார்களை ஏற்படுத்திய 'அல்லாஹ்'வுக்கே சர்வ புகழும் உரித்தாகுக!

''நபியே! நீர் இல்லையேல் உலக மில்லை'' என்று இறைவனருளிய 'ஹகீகத்'தின் 'நுக்தா' வெனும் இலக்கியப் புள்ளியாகிய சம்பூர்ண மானிட சிரேஷ்டர் ஸையிதினு அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது கிளைஞர்கள், தோழர்கள் மீதும் 'சலவாத்'தும் 'ஸலாமு'ம் உண்டாகுக!!

அருள் மயத்தின் சூர்யோதயமான எம்பெருமானர் (ஸல்) அவர்களின் திருப் பாதடி பெற்றவர்களும், 'ஔலியா'க்கள் அனைவருக்கும் தமது பாதடியை யளித்தவர்களும், 'தீன்' மார்க்கத்துக்குப் புத்துயிரளித்த மகிமையால் 'முஹிய்யித்தீன்' என்ற காரணத் திரு நாமம் பெற்றவர்களுமாகிய 'வலி'கள் சிரோன்மணி ஸையிதினு அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) அவர்கள் மீது இறைவன் கருணை மாரிப் பொழிவானுக!!!

2வது அத்தியாயம்.

தலை முறை.

[இது காஜா ஆண்டவர்களின் தந்தை வழியைச் சொல்லுகின்றது.]

ஹஜ்ரத் காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'ஸையிதுஸ் - ஸாதாத்'தைச் சேர்ந்தவர்கள். ஸையிதினு இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் வம்மிசத்தி லுதித்தவர்கள். இவர்களது தந்தை வழி,

நபிகள் திலகம் ஸையிதினு முஹம்மது முஸ்தபா றஸூ லுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர் களைப் போய்ச் சாருகின்றது. நபிகள் பிரான் முஹம்மது (ஸல்) அவர்களது பாட்டனுர் அப்துல் முத்தலிபு அவர் களுக்குப் பன்னிருவர் ஆண் மக்கள் உண்டாயிருந்தனர். அப்துல்லாஹ்வும், அபீதாலிபும் அவர்களுள் இருவராவர். அப்துல்லாஹ் அவர்களது குமாரர் ஸையிதினு முஹம்மது (ஸல்) அவர்களாவார்கள். அபிதாலிபு அவர்களது புத்திரர் ஸையிதினு அலீ (ரலி) அவர்க ளாவார்கள். ஸையிதினு அலீ (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது செல்வ புதல்வி காத்தூன — ஜன்னத் ஸையி தத்தினு பாத்திமா ஜஹ்ரு (ரலி) அவர்களை மண முடித் திருந்தார்கள். இவர்களது சந்ததியிலுள்ளவர்கள் தான் இச்சரிதா நாயகர் ஸையிதினு காஜா ஷைகு அலாஉத் தீன் (ரலி) ஆண்டகை யவர்கள். இவர்களது தந்தை வழி பின் வருமாறு:—

ஸையிதினு அபீதாலிபு		(ரலி)	இவர்கள் குமாரர்
,,	அமீருல் முஃமினீன் அலீ	,,	,,
,,	இமாம் ஹஸன்	,,	,,
,,	ஹஸனுல் முதன்னு	,,	,,
,,	அப்துல்லாஹில் மஹ்லு	,,	,,
,,	மூஸா ஜூன்	,,	,,
,,	அப்துல்லாஹ் தானி	,,	,,
,,	மூஸா தானீ	,,	,,
,,	தாவூது	,,	,,
,,	முஹம்மது	,,	,,

ஸையிதுநா யஹ்யா ஜாஹிது (ரலி) இவர்கள்
குமாரர்

,, அப்துல்லாஹில் ஜீலீ ,, ,,

,, அபீ சாலிஹ் மூஸா
ஜங்கி தோஸ்து ,, ,,

,, கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன்
அப்துல் காதிறு ஜீலானீ ,, ,,

,, அப்துல் வஹ்ஹாபு ,, ,,

,, அப்துல் ஜப்பார் பக்தாதீ ,, ,,

,, முஹம்மது பக்தாதீ ,, ,,

,, அப்துல்லாஹ் காதிரீ ,, ,,

,, யஹ்யா பக்தாதீ ,, ,,

,, மூஸா காதிரீ ,, ,,

,, ஈஸா காதிரீ ,, ,,

,, இப்ருஹீம் காதிரீ ,, ,,

,, முஹம்மது ஜாஹிது ,, ,,

,, ஹஸன் பக்தாதீ ,, ,,

,, ஸையிது முஹம்மது அலீ
பாலாபூரீ ,, ,,

,, ஸையிது முஹம்மது ஹுஸைன்
பாலாபூரீ ,, ,,

,, மஷ்ஹூருத்தீன் பாலாபூரீ ,, ,,

,, காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள்.

3வது அத்தியாயம்.

'முரீது' வழி.

[இது ஆண்டவர்கள், ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) இடம் 'க்ஷிஷ்தியா - தரீகா'வில் 'பைஅத்' தெனும் தீட்சைப் பெற்ற 'முரீது' வழியைக் கூறுகின்றது.]

ஹஜ்ரத் ஸைதுல் கௌனைன், ஷபீஉல் முதுனபீன், இமாமில் கிப்லத்தைன், ஸர்வரே காயினாத், முபக்கரே மௌஜூதாத், காத்தமன் நபிய்யீன், ஸையிதினா வ மௌலானா முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இவர்கள் முரீது

அமீருல் முஃமினீன் ஸைய்யிதினா அலீ (ரலி)		,,
காஜா ஹஸன் பசரீ	,,	,,
,, அப்துல் வாஹிது இப்னு ஜைது	,,	,,
,, புலைல் இப்னு இயால்	,,	,,
,, சுல்தான் இப்ருஹீம் இப்னு அத்ஹம்	,,	,,
,, கதீபத்துல் மர்அஷீ	,,	,,
,, அபூ ஹுபைரத்துல் பசரீ	,,	,,
,, மம்ஷாது அலவீ தைனூரீ	,,	,,
,, அபூ இஸ்ஹாக் ஷாமீ	,,	,,
,, அபூ அஹ்மது அப்தாலி	,,	,,
,, அபூ முஹம்மதினில் முஹ்தரம்	,,	,,
,, அபூ யூஸுப்	,,	,,
,, குத்புத்தீன் மௌதூது	,,	,,
,, ஹாஜீ ஷரீப் ஜிந்தானீ	,,	,,

காஜா உதுமான் ஹாரூனீ (ரலி) இவர்கள் முரீது

,, ஸையிதினா முயீனுத்தீன் சிஷ்தீ
ஹிந்துல் வலீ அத்தாயி ரஸூல்
கரீபனவாஜ் மௌலிதுல் சன்ஜரீ
வல் மர்கதில் அஜ்மீரீ ,, ,,

,, குத்புத்தீன் பக்த்தியார காக்கீ ,, ,,

,, ஷைகு பரீதுத்தீன்
ஷக்கர் கன்ஜு ,, ,,

,, நிஜாமுத்தீன் ஔலியா ,, ,,

,, நஸீருத்தீன் மஹ்மூது ஷருகு
திஹ்லவீ ,, ,,

,, ஸையிது மக்தூம் முஹம்மது
ஹுஸைன் பந்தா நவாஜ் ,, ,,

,, சத்ருத்தீன் அபுல் பத்ஹு ,, ,,

,, ஷாஹ் அப்துல்லாஹ் ஜமாலுல்
மக்ரபீ ,, ,,

,, ஷாஹ் கமால் பயாபானீ ,, ,,

,, ஷாஹ் ஸையிது மீருன்
ஷம்ஸுல் உஷ்ஷாக் ,, ,,

,, ஷாஹ் புருஹானுத்தீன் ஔலியா ,, ,,

,, ஷாஹ் அமீனுத்தீன் அலீ ,, ,,

,, ஷாஹ் ஸையிது முஹம்மது
தாஹிர் பல்கீ ,, ,,

,, ஸையிதினா ஷைகு அலாஉத்தீன் சிஷ்தீ
'ரிழுவானுல்லாஹி தஆலா அன்ஹும் அஜ்மயீன்.'

---

4 வது அத்தியாயம்.

பிறப்பு.

[இது ஆண்டவர்கள் பல்கு இராஜ்யத்தில் அவதாரமானதைக் கூறுகின்றது]

'குத்பு-ஜமான்' ஷைகு சுல்தான் இப்ருஹீம் இப்னு அத்ஹம் பாதுஷாஹ் (ரலி) அவர்கள் அரசாட்சிப் புரிந்த பல்கு இராஜ்யத்தில் இச்சரிதா நாயகர் ஸையிதினா காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஹிஜ்ரி ஒன்பதே கால் நூற்றாண்டில் பிறந்தார்கள். அவர்கள் ஹாஷிம் குலத்தி லுதித்தவர்கள். ஹஸனீ வம்மிசத்தைச் சேர்ந்த வர்கள். ஸையிதினா முஹிய்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) அவர்களின் புத்திரர் ஸையிது அப்துல் வஹ்ஹாபு (ரலி) கோத்திரத்தில் தோன்றியவர்கள். ஹிந்துல்-வலீ ஸையிதினா காஜா முயீனுத்தீன் அஜ்மீரீ (ரலி) அவர்களது வழியாகிய 'சுஷிஷ்திய்யா-தரீகா'வைச் சார்ந்தவர்கள். ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்களிடம் 'பைஅத்'துப் பெற்றவர்கள்.

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது தந்தையின் பெயர் ஸையிது மஷ்ஹூருத்தீன் பாலாபூரீ என்பதாகும். ஆண்டவர்கள் சற்று உயரமானவர்கள். மெலிந்த சரீரத்தை யுடையவர்கள். விரிந்தகன்ற நெஞ்சை யுடையவர்கள். வட்டமான அடர்ந்த தாடியை யுடையவர்கள். நீளமான கூட்டுப் புருவமுடையவர்கள். புது நிறமான மேனி யுடையவர்கள். அவர்களது முகத்தில் என்றும் புன்னகை குடி கொண்டிருக்கும். பெரும்பாலும் மௌன மாகவே இருப்பார்கள். வஜீகர சக்தி அவர்களிடம் காந்தத்தைப் போலிருந்தது. இறுதிவரை கலியாணமின்றி பிரம்மச்சாரியாகவே இருந்துள்ளார்கள்.

5வது அத்தியாயம்.

பஹாஉத்தீனுக்கு ஊழியம் புரிந்தது.

[இது பஹாஉத்தீன் (ரலி) என்ற பெரியாருக்கு ஆண்டவர்கள் ஊழியம் புரிந்ததையும், அன்னாரது பரிட்சையில் தேறின வரலாற்றையுஞ் சொல்லுகின்றது.]

காஜா வைகு அலாஉத்தீன் (ரலி) அவர்கள் பிராயம் அடைந்த போது பல பெரியார்களை யடுத்துப் பழகினார்கள். அவர்களுக்குக் 'கிதுமத்' தெனும் ஊழியஞ் செய்ததைக் கொண்டும், 'ஜுஹ்து' எனும் தெண்டிப்பைக் கொண்டும் பல வித ஞானங்களைப் பெற்றார்கள். 'இர்பான்' எனும் மெய்ஞ்ஞானத்தையும் கற்றுத் தேர்ந்தார்கள்.

அக்காலத்தில் ஸையிது பஹாஉத்தீன் (ரலி) என்ற பெயருள்ள ஒரு பெரியார் இருந்தார்கள். சிறு பிராயத்தில் ஆண்டவர்கள் இப்பெரியாரை யடுத்துப் பல ஊழியம் புரிந்து. கல்வி கற்றார்கள். இவர்களது அறிவு கூர்மையையும், நுட்ப புத்தியையுங் கண்ட பெரியாரவர்கள், இம்மாணக்கருக்கு அந்தரங்க அறிவையும் புகட்டினார்கள். அவ்வமயம் ஆண்டவர்களுடன் கல்வி கற்று வந்த மாணக்கர் பலரில் ஸையிது நூருத்தீனும் ஒருவராவார். இன்னார் ஆண்டவர்களுக்குச் சமமாகப் படித்து வந்தார்.

அவ்வமயம் பஹாஉத்தீன் (ரலி) அவர்கள் எல்லா மாணக்கரையும் சோதிக்க நாடினார்கள். அனைவரிடமும்

ஆளுக்கொரு கோழியுங் கத்தியுங் கொடுத்து, ஒருவருங் காணாத இடத்துக்குச் சென்று அறுத்துக் கொண்டு வரும்படி ஏவினார்கள். அனைவரும் ஏவற் பிரகாரம் அவற்றை எடுத்தேகினர். ஸையிது நூருத்தீன் என்பவருள்பட அனைவரும் வெவ்வேறு இடத்துக்குப் போய், யாருங் காணாத விதமாய் கோழியை அறுத் தெடுத்துக் கொண்டு வந்தனர். ஷைகு அலாஉத்தீன் ஆண்டவர்கள் மட்டில் அறுக்காமல் திரும்ப கொண்டு வந்து விட்டார்கள்.

"அலாஉத்தீனே! நீர் ஏன் கோழியை அறுக்காது கொண்டு வந்தீர்?" என்று அப்பெரியார் வினவினார்கள். அதற்கு ஷைகு அலாஉத்தீன் ஆண்டவர்கள், "என் 'உஸ்தாது' அவர்களே! ஒருவரும் என்னைக் காண மாட்டார்களே அத்தகைய ஓரிடத்தை நான் தெரிந்து கொள்ள முடியவில்லையே! எல்லா இடத்திலும் அல்லாஹுத்-தஆலா, என் மீது உதயமாகிப் பார்த்தவனாக இருக்கின்றான். ஆகவே நான் அதை யறுக்காது திரும்ப கொண்டு வந்தேன்," என்று கூறினார்கள்.

அப்பெரியார் அவர்கள், மாணாக்கர் ஷைகு அலாஉத்தீன் அவர்களது அறிவின் திட்சண்யத்தைக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தார்கள். மாணாக்கரின் பக்குவமான நிலையைக் கண்டு, இன்னும் பல அந்தரங்கமான அறிவுகளையும் போதித்து, அவர்களுக்காக பிரார்த்தனையும் புரிந்தார்கள்.

6வது அத்தியாயம்.

குருவைத் தேடிச் சென்றது.

[இது ஆண்டவர்கள் ஆசானைத் தேடிச் சென்ற பொழுது, வழி போக்கர்கள் சுமத்திய தலைச் சுமை ஆகாயத்தில் கூடவே போய்க் கொண்டிருந்ததையும், அந்த இருவரும் மரக் கட்டையின் உதவியால் ஆற்றைக் கடந்ததையும் கூறுகின்றது.]

மாணுக்கர் காஜா ஷைகு அலாஉத்தின் (ரலி) அவர்களை விளித்து, பெரியார் ஸைபிது பஹாஉத்தின் (ரலி) அவர்கள் கீழ் வருமாறு உத்திரவு செய்தார்கள்.

"மகனே! நீர் பக்குவ நிலையை யடைந்து விட்டீர். உமக்கு நான் விடை தருகிறேன்; நீர் என்னை விட்டுப் பிரியலாம். நீர் இங்கிருந்து கிழக்கு நோக்கிப் பிரயாண மாகும். குறுக்கே ஒரு பெரிய ஆறு ஓடும். அக்கரையில் ஓர் அழகான கட்டிட மிருக்கிறது. அங்கு ஸைபிது ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) என்ற பெரியார் இருக்கிருர்கள். அவர்களிடஞ் சென்று ஊழியம் புரியும். அது கொண்டு ஞானப் புதையல்களையும், பல விதத் தகுதிகளையும் பெற்றுக் கொள்வீர். ஆண்டவன் உமக்கு 'பரக்கத்து'ச் செய்வான்", என்பதாய் உபதேசித்து, ஆசீர்வதித்தனுப்பினுர்கள்.

அங்கிருந்து ஷைகு அலாஉத்தின் (ரலி) ஆண்டவர்கள் 'உஸ்தாது' இடத்தில் விடை பெற்றுக் கிழக்கு நோக்கிப் பிரயாண மானுர்கள். வழியில் இருவரைச் சந்தித்து, அவ்விருவரையும் விசாரித்தார்கள். அதற்கவர்கள், பெரியார் ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) அவர்களிடம் செல்வதாகக்

கூறினார்கள். அப்போது ஆண்டவர்கள், தன்னையும் அவர்களுடன் அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு இருவரும், "எங்களுடன் நீங்கள் வருவதானால், எங்கள் சுமைகளைச் சுமந்து வர வேண்டும் என்ற நிபந்தனைக்குச் சம்மதித்தால் அழைத்துச் செல்வோம்", என்று கூறினர்.

அதற்கு ஆண்டவர்கள் இசைந்து, அவர்களது மூட்டைகளைத் தலை மீது சுமந்தவர்களாய், அவ்விருவரும் முன் செல்ல, ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டகை யவர்கள் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அங்ஙனம் போய்க் கொண்டிருக்கையில், அவ்விருவரும் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தனர். ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் நடந்து செல்லுகிறார்கள்; சுமையோ, அவர்களது தலைக்கு மேலே ஒரு சாண் உயர்ந்து, அவர்களுடன் ஆகாயத்தில் வந்து கொண்டே இருக்கிறது. இவ்வற்புதத்தைக் கண்ணுற்று அவ்விருவரும் பேராச்சரிய மடைந்தனர்.

இவ்விதம் நடந்து சென்று, இறுதியாக மூவரும் ஆழமான ஓர் ஆற்றைக் கண்டனர். நீரோட்டம் வேகமாக இருந்தது; ஆறும் அகலத்தில் விஸ்தீரணமாகவே இருந்தது. அதைக் கடப்பதற்குப் பாலமோ ஓடமோ காணப்படவில்லை. ஆற்றோரத்தில் காணப்பட்ட ஒரு மரக்கட்டையை எடுத்து ஆற்றில் எறிந்து, அதில் *அவ்விருவரும் ஏறி, அற்புதமாக ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்கள்.

---

* வழிப்போக்கர்களாகிய இருவரும் மரக்கட்டையின் உதவியால் ஆற்றின் அக்கரை யடைந்ததும், ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டகை யவர்கள் அற்புத விரிப்பின் காரணமாய்க் கரை யடைந்த வரலாற்றை அடுத்த 7-வது அத்தியாயம் கூறும்.

ரவது அத்தியாயம்.

*'வலி'க்குக் கொம்பு முளைத்தது.

[இது ஆண்டவர்கள் அற்புதமாய் ஆற்றைக் கடந்ததையும், 'வலி'க்குக் கொம்பு முளைத்த வரலாற்றையும் சொல்லுகின்றது.]

கூாஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) அவர்கள், தன்னோடு வந்த இரு சகாக்களும், தன்னை விட்டு விட்டுக் கட்டை யிலேறி ஆற்றைக் கடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு தனித்தவர்களாய் தியானத்தி லாழ்ந்தார்கள். ஆற்றில் 'வுலு'ச் செய்து இரண்டு 'ரக்அத்து'த் தொழுது, ஆண்டவனிடம் 'துஆ'விரந்தார்கள். அதை விட்டெழுந்து, தான் போர்த்திக் கொண்டிருந்த போர்வையைத் தண்ணீர் மீது விரித்து அதிலமர்ந்தார்கள். அவ்விரிப்பு அக்கரை நோக்கி ஓடிற்று. அவ்வமயம் அக்கரையிலுள்ள வீட்டின் மேல் மாடி அறையில் வீற்றிருந்த ஸையிது ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) என்ற பெரியார், ஜன்னல் வழியாக ஆற்றை நோக்கிப் பார்த்தார்கள். ஓர் வாலிபர் அற்புதமாக ஆற்றைக் கடந்து, அம்பெய்தாற் போல் இக்கரை நோக்கி வருவதைக் கண்டவுடன் ஆண்டவர்களைச் சோதிப்பதற்காகத் தனது 'கரூமாத்'தைக் கொண்டு அவ்விரிப்பு நடு ஆற்றில் நிற்கும்படி சமிக்ஞை செய்தார்கள். ஆற்றில் கொந்தளிப்பும் புயலும் உண்டாகி விட்டது. விரிப்பு நட்டாற்றில் சுழன்று, தத்தளித்தது. இதைக் கண்ட ஆண்டவர்கள் திடுகூறாய் நேரிட்ட அபாயத்தைத் தட்டு

---

* இவ்வத்தியாயம், ''கன்ஜுல் – கரூமாத்''தின் நஜ்முத்தின் என்ற ஓர் 'வலி'க்குக் கொம்பு முளைத்த வரலாற்றை யொத்திருக்கின்றது.

வதற்காக ஆண்டவனிடம் பிரார்த்தனைப் புரிந்தார்கள். உடனே காற்றின் வேகம் ஒடுங்கி, கொந்தளிப்படங்கி, அலையும் நின்றது. விரிப்பு வேகமாய் ஓடி அக்கரைப் போய்ச் சேர்ந்தது. ஆண்டவர்கள், போர்வையாகிய விரிப்பை எடுத்துப் போர்த்திக் கொண்டு அந்த மாடி வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

ஆங்கு அப்பெரியார் அவர்களது தலையில் இரு கொம்புகள் முளைத்து விரிந்து கொண்டபடியால், தலையை உள்ளே இழுக்க முடியாது சங்கடப் பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். இவர்களுக்காக ஆண்டவர்கள் 'அல்லாஹுத் – தஆலா'விடம் மன்றாடி 'துஆ'க் கேட்டபடியாலும், அப்பெரியாரும் தவற்றை யுணர்ந்து இறைவனிடம் 'தௌபா'ச் செய்து, பிழை பொருக்கத் தேடிய படியாலும், அக்கொம்புகள் அக்ஷணமே மறைந்து விட்டன.

பெரியார் ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) அவர்கள், சிஷ்யராக வரும் ஆண்டவர் அவர்களைக் கட்டித் தழுவி உபசரித்தார்கள். இப்பெரியா ரிடத்தில் ஆண்டவர்கள் சில காலம் தங்கி யிருந்து ஊழியம் புரிந்து, பலவித 'இல்மு'களைக் குறைவறக் கற்றார்கள். 'தீனு'டைய கருமத்தில் பரிபூரணம் பெற்றவர் களானார்கள். மாணாக்கருடைய பரிபக்குவ நிலையைக் கண்ட ஸையிது ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) அவர்கள் மாணாக்கரை ஆசிர்வதித்து, அக்காலத்தில் மஹானாய் விளங்கிய ஸைய்யிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்கள் சமுகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

——

8வது அத்தியாயம்.

'முரீது' பெற்றது.

[இது ஆண்டவர்கள் 'சிஷ்திய்யா-தரீகா' வில் 'முரீது' எனும் தீட்சைப் பெற்றதைக் கூறுகின்றது.]

பெரியார் ஸையிது ஷம்ஸுல் உஷ்ஷாக் (ரலி) ஆண்டவர்கள் மிகுந்த மரியாதையுடன் விடைப் பெற்று, சற்குரு ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்களைத் தேடிப் பிரயாணமானார்கள். வழியில் பலவித கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்துச் சற்குருவை யடுத்தார்கள். சிஷ்யராக வரும் ஆண்டவர்களின் வருகையை யறிந்த சற்குரு அவர்கள் எதிர்ச் சென்று, ஆண்டவர்களைக் கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்து, 'உமக்கும் உம்மை இங்கனுப்பிய வருக்கும் சோபனம் உண்டாகுக!'' என்று சுப சோபனங் கூறி, அன்புடன் உபசரித்தார்கள். 'பியாலா' எனும் ஞானமூர்தத்தைப் புகட்டி, உபதேசஞ் செய்து, 'சிஷ்திய்யா-தரீகா'வல் முரீது' எனும் தீட்சைக் கொடுத்தார்கள். அன்று முதல் காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் சீடராகத் தனது குரு நாதரிடத்திலே தரிபட்டிருந்து ஊழியம் புரிந்து வந்தார்கள்.

தனக் கென்று ஒதுக்கப் பட்டிருந்த அறையில் ஏகாந்தமாய் தனித்திருந்து 'இபாதத்'தாகிய வணக்கம் புரிந்து வந்தார்கள். சில காலத்துக்குள் எல்லா வித 'இல்மு'களையும் கற்றுக் 'காமில்' ஆனார்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய மீதியா யிருந்த 'கிலாபத்'தும் 'கிற்கா'வும் கொடுத்து, தனது 'கலீபா' வாக்கினார்கள்.

——

9வது அத்தியாயம்.

சற்குருவின் உபதேசம்.

[இது ஆண்டவர்கள் சற்குருவிடத்தில் பெற்ற போதனையையும், இறுதி நேரத்தில் சற்குரு அவர்கள் தங்கள் இரு குமாரர்களை யும் ஆண்டவர்களிடம் ஒப்படைத்துக் கூறி யவற்றையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் சற்குருவின் சகவாசத்தில் வெகு காலமிருந்து வந்தார்கள். ஒரு நாள் சற்குருவை யடுத்து, தான் சுற்றுப் பிரயாணஞ் செய்ய நாட்டங் கொண்டிருப்பதாக வெளிப் படுத்தினுர்கள். அப்போது சற்குரு அவர்கள், "மகனே! சற்று பொறும். அதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. எனது 'மௌத்து' வரையில் நீர் எங்குஞ் செல்லக் கூடாது; என் கூடவே இரும்," என்பதாகக் கூறினுர்கள். சில காலத்துக்குப் பின் 'ஷைகு' அவர்களுக்கு அந்திய காலம் சமீபிக்கவே, தனது சிடரைக் கூப்பிட்டு, தனக்குப் பக்கத்தில் அமரச் செய்து, கீழ் வருமாறு 'வஸிய்யத்து'ச் செய்தார்கள்.

"மகனே! 'அல்லாஹ்'வை பயப்படும். ஆண்டவன் உமக்களித்திருக்கும் இரணத்திற்கு 'ஷுக்ரு' — நன்றி செய்யும். ஆனுல் அதன் மீது பற்று வைக்காதீர். இடர் செய்தவர்களுக்கு நலவு செய்யும். ஏழ்மைத் தனத்தைப் போர்வையாக்கிக் கொள்ளும். ஜனங்களிடத்தில் கலந் திருக்கும் போதும் ஆண்டவனிடத்தில் கலப்பற்றவ னுக இரும். உள் சட்டை எங்ஙனம் திரேகத்தோடு

ஒட்டிக் கொண்டிருக்குமோ, அங்ஙனமே நீர் ஆண்டவனுடன் சேர்மானத்தைத் தேடிக் கொள்ளும். உமது சகோதரர் யாரையும் கேவலமாகக் கருதாதீர். அவர்களது ஹிருதயங்கள் 'அல்லாஹுத்-தஆலா' வெளிப்படும் தானங்களாக இருக்கின்றன. மகனே! பணக்காரர்களுடைய வாயல்களுக்குப் போகாதீர். 'ஒளலியா'க் களுடைய 'துஆ'க்களில் பற்று வைப்பவராக ஆகி விடும். கண்களுக்குச் 'சுர்மா' இட்டுக் கொள்ளும். உம்முடைய 'திக்ற்'ளவில் பராக்கா இரும். அருள் விஸ்தீர்ணமாவதைக் கொண்டு சந்தோஷிக்காதீர். அருள் பெருக்கின் சுணக்கத்தைக் கண்டு விசனிக்காதீர். ஏனெனில், 'அல்லாஹ்' வுடைய 'பைலு' –அருள்– அவனுடைய உதவி கொண்டே விஸ்தீரணமாகும்!'' என்றும்,

இன்னும் தனது மனைவி மக்களை யழைத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு மேலும் கூறுகின்றார்கள். ''மகனே! இந்நாள் உங்களை விட்டும் நான் பிரிய விடை பெற்றுக் கொள்ளக் குறிப்பிடப்பட்ட நாளாகும். இதோ இருக்கும் என் குமாரர்கள் ஸையிது கமாலுத்தீன், ஸைய்யிது இஸ்மாயீல் இருவரையும் உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன். இவர்களை நீர் ஏற்றுக் கொள்வீராக! இவர்களது அன்னை ஜீவித்திருக்குங் கால மெல்லாம் இங்கேயே இருப்பீராக! அன்னவரின் நிரியாணத்துக்குப் பிறகு இவ்விருவரையும் உம்முடன் அழைத்துச் செல்வீராக! இவர்களுக்கும் 'இல்மை'யும் 'அதபை'யும் படித்துக் கொடுப்பீராக! இவர்களை 'பைலு' பெறச் செய்வீராக! 'அல்லாஹுத் – தஆலா' உங்கள் அனைவருக்கும் 'றஹ்மத்து'ச் செய்வானாக!'' என்பதாய் போதித்து 'வஸிய்யத்து'ச் செய்தார்கள்.

——

10வது அத்தியாயம்.

சற்குருவின் 'வபாத்'தும் பகுதாது பிரயாணமும்.

[இது ஆண்டவர்களது சற்குரு ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்களின் பிரியாணத்திற்குப் பின், அவர்கள் இரு குமாரர்களையும் ஆண்டவர்கள் பகுதாதுச்கு அழைத்துக் கொண்டு புறப்பட்டதை கூறு கின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களின் சற்குரு ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியும் நேரம் சமீபித்தது. இறுதியாகப் பகர வேண்டியவற்றைப் பகர்ந்து விட்டு, 'அல்லாஹுத் – தஆலா' வின் பக்கம் முகத்தைத் திருப்பினார்கள். அவர்களது அகம் முகம் எனும் இரு பார்வைகளும் ஆண்டவன் புறமே இருந்தன. இந்நிலைமையில் எல்லோரும் மனங் கலங்கி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தனர். இல்லம் முழுதும் 'அல்லாஹுத் – தஆலா'வின் பேரருளும் ஜோதியும் இறங்கிக் கொண்டிருந்தன. கடைசியாகக் 'கிபுலா'வின் பக்கம் முகந் திருப்பி, கண்களை மூடி, ஆண்டவன் பக்கம் சேருவதற்கு 'வபாத்'தானார்கள். "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ருஜிஊன்."

சற்குரு அவர்கள் இம்மண்ணுலகை விட்டு மறைந்த பின், அவர்களது மனைவிக்கும் குமாரர்களுக்கும் ஆண்டவர்கள் பணிவிடைச் செய்து வந்தார்கள். தான் கற்ற கல்விப் பிரகாரம் 'இல்மு'களையும் 'அதபு'களையும் இரு

பிள்ளைகளுக்கும் கற்பித்துப் பழக்கி வந்தார்கள். எவ்விடத்துக்கும் செல்லாது 'ஷைகு' உடைய கட்டளைப்படி நடந்து வந்தார்கள். மூன்று வருட காலத்துக்குப் பின் 'ஷைகு' உடைய மனைவியும் ஆண்டவனது கற்பனைப்படி விண்ணுலக மடைந்தார்கள். சில காலம் வரை அங்கேயே தங்கி யிருந்து, பின்னர் ஸையிது கமாலுத்தீனையும் ஸையிது இஸ்மாயீலையும் அழைத்துக் கொண்டு ஆண்டவர்கள் பகுதாதுக்குப் புறப்பட்டார்கள்.

11வது அத்தியாயம்.

கௌதுல் – அஃலமை தரிசித்தது.

[இது ஆண்டவர்களை கௌது நாயகம் அவர்களிடம் தனது குருநாதர் அழைத்துச் சென்றதையும், 'ஹஜ்ஜு'க்கு ஏகும்படி குத்பு நாயகம் அவர்கள் உத்திரவிட்ட வரலாற்றையும் சொல்லுகின்றது.]

நபிகட்கரசர் ஸையிதினா அஹ்மது முஸ்தபா முஹம்மதுர் – ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புகழ்பெற்ற நற்குணங்களிலும், பழக்க வொழுக்கங்களிலும் படிந்து போயிருந்த 'ஒளலியா'க்களுக்கரசரான குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் ஸையிது முஹிய்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) அவர்களது 'கப்ரு – ஷரீபை' 'ஜியாரத்'துச் செய்யும் பொருட்டு, காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் இரு சகோதரர்கள் சகிதம் பகுதாதுக்குப் பிரயாண மானார்களென்று முன் அத்தியாயத்திற் கூறினோமல்லவா? அங்ஙனம் பிரயாணப்பட்ட

ஆண்டவர்கள், கால் நடையாக மலைகள், அடவிகள், ஆறுகள் முதலான பாதைகளை யெல்லாங் கடந்து, பகுதாது நகர் வந்து சேர்ந்தார்கள். ஆண்டவர்கள் அந்நகருக்குள் புகுந்து, நேரே 'றவுலா – ஷரிபு'க்குள் சென்று, தாழ்மையுடன் ஸலாம் பகர்ந்து, கைக் கட்டி, வாய்ப் பொத்தி, ஒரே நிலையாக நிஷ்டையில் வெகு நேரம் நின்று விட்டார்கள். பின்பு 'ஜியாரத்' தெனும் தரிசனம் புரிந்தார்கள். அன்றிரவு காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும் போது ஓர் கனவு கண்டார்கள். அக்கனவைப்பற்றி அவர்கள் கூறுவதாவது:–

"எனது குருநாதர் ஸைபிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்கள் என்னிடம் வந்தார்கள். என் கையைப் பிடித்தவர்களாய், இரு குமாரர்களையும் அழைத்துக் கொண்டு, குத்பு றப்பானீ கௌது சமதானீ முஹியித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) நாயக மவர்களிடம் எழுந்தருளினார்கள். அங்கு கௌதுல் – அஃலம் (ரலி) அவர்கள் பிரகாசமுள்ள ஓர் நாற்காலியில் கம்பீரமாக வீற்றிருந்தார்கள். குருநாதர் அவர்கள் எங்களை அவர்கள் வசம் ஒப்படைத்தார்கள். கௌது நாயகம் (ரலி) அவர்கள் என்னை மட்டும் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்தார்கள். எங்களது முகங்களைத் தங்களது 'முபாரக்' கான திருக் கரத்தால் தடவி 'துஆ'ச் செய்து ஆசீர்வதித்தார்கள். மதுரமான ஓர் மாதுளங் கனியைத் தின்னக் கொடுத்தார்கள். இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு 'ஹஜ்ஜு'க்காக மக்காவுக்குச் செல்லும் படியும் 'ஹஜ்ஜு'க் கிரியைகளை முடித்துக் கொண்டு மதீனாவுக் கேகி, நபிகள் பிரான் (ஸல்) அவர்களை 'ஜியாரத்து'ச் செய்யும்படியும் கட்டளை யிட்டார்கள். என்னுடன் கூடவே செல்லும்படி ஆங்குக் குழுமி யிருந்த

'பகீர்'கள் கூட்டத்துக்குச் சமிக்ஞை செய்தார்கள். பின்பு நான் விடைப் பெற்றுக் கொண்டு திரும்பினேன். எனது குருநாதரும் தங்களது திருக் கரத்தால் எங்களது முகங்களைத் தடவி 'துஆ'ச் செய்து சென்றூர்கள். இவ்வளவில் நான் விழித்துக் கொண்டேன்,'' என்பதே.

பிறகு ஆண்டவர்கள், அவ்வருடத்திய 'ஹஜ்ஜு'க்கு அதிகக் கால மிருந்த படியால், இந்தியா சென்று, அங்கிருந்து ஹிஜாஸுக்குப் பிரயாணமாக நாட்டங் கொண்டார்கள். உடனே, காலையில் 'பஜ்ரு' தொழுது, வலிகள் சிரோன்மணி முஹியித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) அவர்களை 'ஜியாரத்து'ச் செய்து கொண்டு இரு சகோதரப் பிள்ளைகளுடன் இந்தியாவை நோக்கி நடந்தார்கள். வழிப் பிரயாணத்துக்குள்ள எவ்விதத் தங்கரிப்புங் கிடையாது. அவ்வமயம் பெருத்ததோர் கூட்டம் ஆண்டவர்களைப் பின் தொடர்ந்து சென்றது. ''நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்? எங்குச் செல்லுகின்றீர்கள்?'' என்பதாய் ஆண்டவர்கள் அந்த 'பகீர்'கள் கூட்டத்தை விசாரித்தார்கள். ''நாங்கள் பீரான பீர் ஸையிது முஹியித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ (ரலி) நாயக மவர்களது 'பகீர்'கள். அவர்களது உத்திரவு கொண்டே நாங்கள் தங்களைத் தொடர்ந்து வருகிறோம்'' என்பதாகக் கூறினர்கள். அவர்களது எண்ணிக்கை ஐநூறுக்கு மேற்பட்டதாகும்.

12வது அத்தியாயம்.

நாகூர் நாயகரைச் சந்தித்தது.

[இது நாகூர் நாயகர் ஸையிது ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) அவர்களை ஆண்டவர்கள் நத்தத்தில் சந்தித்ததைக் கூறுகின்றது.]

காஜா ஷ்ஷகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் இரு சகோதரர்கள், ஐநூறுக்கு அதிகமான 'புகரு'க்கள் சகிதம் பாதசாரியாக நடந்தார்கள். அவர்களது ஹிருத யத்தில், வழியில் தேடிக் கொள்ள வேண்டியது என்று ஒரு பொருளு மில்லை. வழிப் பிரயாணத்துக் கென்று எவ்விதத் தங்கரிப்பு மில்லை. 'தவக்கலே'யே தயாரிப் பாகக் கொண்டு ஆண்டவனது பாதையில் நடந்தார்கள். 'அல்லாஹுத் – தஆலா' அவர்களுக்குப் பாதையை இலேசாக்கிக் கொடுத்தான். எவ்வித கஷ்ட நஷ்டமு மின்றி, பாதையில் அனைவரும் களிப்புடன் சென்றார்கள். சகல செலவும் 'ஷைகு' அவர்களே செய்தார்கள். ஜனங் களிடம் கை நீட்டிக் கேட்பதை விலக்கினார்கள். அவர்கள் நாடின வஸ்துக்களை 'ஷைகு' அவர்களிடம் 'புகரு'க்கள் கேட்டு வாங்கிக் கொள்வார்கள். இத்தகைய சந்தோஷப் பிரயாணத்தில் பலவித அனுபவங்களைப் பெற்று, இறுதி யாகக் * கீழக்கரை வந்து சேர்ந்தார்கள்.

---

* சௌதல் – அஃலம் (ரலி) ஆண்டவர்கள் மக்காவுக்குச் செல்லும்படி காஜா ஆண்டவர்களுக்கு உத்திர விட்டதாய் முன் அத்தியாயத்தில் கூறினோமல்லவா? பகுதாதிலிருந்து நேராக ஆண்டவர்கள் மக்காவுக்குக் குறுகிய காலத்தில் சென்றிருக்கலாம். அங்ஙனமின்றி கீழக்கரைக்கு வந்ததன் காரணம் தெரிய வில்லை. ஒரு கால், 'ஹஜ்ஜு'க்கு அதிக காலம் இருந்திருக்கலாம்; இன் றேல், நாகூர் நாயகர் அவர்களைச் சந்தித்துச் செல்லும்படி 'கஷ்பி'ல் வெளியாகி இருக்கலாம் போலும்!

குத்புல் – அக்தாப் கௌதுல் – இஸ்லாம் ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது கன்ஜ – ஸவாய் கன்ஜ–பக்ஷ் பாதுஷாஹ் (ரலி) நாகூர் நாயகர் அவர்கள், தங்கள் மகனார் ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி), மற்றும் தபோதனர்கள் சகிதம் மதுரையைச் சேர்ந்த நத்தம் என்ற ஊரில் தங்கி யிருப்பதைக் கேள்விப் பட்டு, அவர்களிடம் காஜா அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் சென்றார்கள். இருவர்களுக்கும் ஹி. 968-ஷ ‘முலாகாத்’ தெனும் சந்திப்பேற் பட்டு, ஒருவரோ டொருவர் கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்து கொண்டார்கள். காஜா ஆண்டவர்கள் பாதுஷாஹ் நாயகத்திடத்தில் ஒரு வாரம் தங்கி, பல ‘பைலு’களைப் பெற்றார்கள். ஆண்டவர்கள் பின்பு நாயகமவர்களிடம் விடைப் பெற்று, மலையாளத்திலுள்ள † பொன்னாணி நகருக் கேகினார்கள். சில காலம் பொன்னாணியிலிருந்து, பிறகு மக்காவுக்குப் பிரயாணமாக முற்பட்டார்கள். இருபதுக்கு மேற்பட்ட சில ‘புகறு’க்களைப் பொன்னாணியில் தங்கும்படி ஆக்ஞாபித்தார்கள்.

---

† பொன்னாணி அக்காலத்தில் ஒரு துறைமுகப் பட்டணம். அங்கு ஷைகு அலீ என்பவர் அரச பரிபாலனம் புரிந்து கொண்டிருந்த காலம். பிரபல வர்த்தகரும் பெரியாருமாகிய ஜைனுத்தீன் மக்தூம் தங்கள் என்ற மஹானும் ஜீவனோடிருந்த காலம்.

13வது அத்தியாயம்.

மக்கா யாத்திரை.

[இது ஆண்டவர்கள் மக்காவுக்குப் பிரயாணமாகிப் போகும் பொழுது, கடலில் தத்தளித்த கப்பலைக் காப்பாற்றிய வரலாற்றைச் சொல்லுகின்றது.]

அக்காலத்தில் தென்னிந்தியாவில் மேற்குக் கரையில் பொன்னானி நகர் விசேஷமான ஓர் துறைமுகப் பட்டணமாக விளங்கியது. தென்னிந்திய மக்கள் அந்த காலத்தில் இங்கிருந்தே கடல் மார்க்கமாய் 'ஹஜ்ஜு'க்குப் போவது வழக்கமாக இருந்தது. அச்சமயத்தில் பொன்னானி யிலிருந்து ஜித்தாவுக்கு ஓர் பாய்க் கப்பல் பிரயாணப்பட தயாராக இருந்தது. அதில் காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'புகரு'க்கள் சகிதம் யாத்திரை யானார்கள். மரக்கலம் பாய் விரித்து ஓட ஆரம்பித்தது. ஒவ்வொருவரும் தம்முடைய இடத்தில் அமர்ந்து, தமது கருமங்களில் பராக்காயினர். ஆண்டவர்கள் தனித்ததோர் இடத்திலமர்ந்து, 'முஷாஹதா' 'முருகபா' வில் ஆழ்ந்தார்கள்.

மரக்கலம் சமுத்திரத்தில் சில நாட்கள் ஓடின. பின், திடுகூருய்க் காற்றும் புயலுமுண்டாகி, கடல்கொந்தளிப்புக் கொண்டது. மரக்கலம் பக்க வாட்டில் புரள ஆரம்பித்தது. அலைகளின் மோதலால் இரு புறமிருந்து மரக்கலத்துக்குள் தண்ணீர் சடேரென்று கொட்டிக் கொண்டிருந்தது. அதிலுள்ளவர்கள், கப்பல் புரளும் ஒவ்வொரு வினாடியிலும் தாழ்ந்து விடுமோ என்று ஏக்கமெடுத்துக்

கொண்டிருந்தனர். அவ்வமயம் அனைவரும் கோவென் றலறி; 'ஷைகு' அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அப்போது அவர்களை ஆண்டவர்கள், பயப்படாமல் அமைதியாக இருக்கும்படி ஆறுதல் சொல்வது போல் சமிக்ஞை செய்தார்கள். கப்பலோட்டும் மாலுமி தன்னாலான மட்டும் வேறு திக்கில் கப்பலைத் திருப்ப முயன்றும், புயல் கொடுமையும் கடல் கொந்தளிப்பும் முட்டுக் கட்டையாக இருந்தன. கப்பல் மூழ்கி 'ஹலாக்'காகி விடும் என்ற நம்பிக்கையால் மாலுமி மன மொடிந்தவனானான். கப்பலிலுள்ள பாரமான சாமான்களை யெல்லாம் கடலில் எறியும்படி கப்பல் தலைவன் உத்திர விட்டான். ஆனால், ஆண்டவர்கள் அங்ஙனம் செய்ய வேண்டாமென தடுத்தார்கள்.

அந்த சமயத்தில் சமுத்திரத்திலே ஓர் பாறை தோன்றிற்று. அப்பாறையில் மோதாதபடி கப்பலை மறு திசையில் திருப்ப மாலுமி முயன்றான். ஆனால் காற்றுக் கொடுமையாலும், நீரோட்ட வேகத்தாலும் கப்பல் அப்பாறையை நோக்கியே அம்பெய்தாற் போல் பாய்ந்து சென்று கொண்டிருந்தது. பாறையில் மோதினால் தாழ்ந்து போகுமே! என்ற அச்சத்தால் அனைவரும் தங்களை இரட்சிக்கும்படி மன்றாடினார்கள். ஆண்டவர்கள் ஓர் பண முடிப்பை எடுத்து ஏழு தடவை 'பாங்கு' சொல்லி, பல தடவை 'தக்பீர்' கூறி, அம்முடிப்பையும் சில சாமான்களையும் காற்று வாக்கில் எறிந்தார்கள். அக்ஷணமே புயலின் வேகம் ஒடுங்கிற்று; கடல் கொந்தளிப்பு அடங்கிற்று. மரக்கலம் பாறையை விட்டும் வேறு திக்கில் திரும்பி ஓடிற்று. எல்லோரும் ஆண்டவர்களைப் புகழ்ந்து, ஆண்டவனை 'ஷுக்ரு' செய்தார்கள். சிந்தா யாத்திரையாய் மரக்கலம் அரேபியாவிலுள்ள ஜித்தா துறைமுகம் போய் சேர்ந்தது.

ஆண்டவர்களும் மற்றும் 'புகரு'க்களும் கரையிறங்கி 'இஹ்ரும்' கட்டி, 'ஹஜ்ஜு'டைய 'அர்கான்' களாகிய கிரியைகளைச் செய்து முடித்துக் கொண்டு, பரிசுத்த மக்கமா நகரை நோக்கி 'பகீர்'கள் புடை சூழச் சென்ருர்கள். இஸ்லாமிய பிதா ஹஜ்ரத் ஸையிதினு இப்ருஹீம் (அலை) அவர்கள் குடியேறிய, பெருமை தங்கிய, மகத்துவம் பொருந்திய, பரிசுத்த ஸ்தலமாகிய மக்கா நகரைக் கண்ட போது, ஆண்டவர்கள் சந்தோஷத்தால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். உள்ளங் குளிர்ந்து ஆனந்தப் பரவச மானுர்கள். 'ஹரம் – ஷரீபு'க்குள் நுழைந்து 'தவாப்' எனும் வலம் வந்தார்கள். பிறகு மக்காவில் தங்கி 'ஹஜ்ஜு'க் கிரியைகளை முடித்துக் கொண்டார்கள்.

14வது அத்தியாயம்.

'பகீரை'க் காப்பாற்றியது.

[இது ஆண்டவர்கள் மக்கா விலிருந்த சமயம் பொன்னுணி யிலுள்ள தமது 'பகீரை'க் காப்பாற்றியதைக் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மக்கா நகரில் தங்கி யிருந்த காலத்தில், ஒரு நாள் சில 'புகரு'க்கள் சகிதம் 'கஃபா – ஷரீபை' 'தவாப்' செய்து கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஆண்டவர்கள் திடுக்கிட்டவர்களாய், பதட்டத்துடன் தங்களது திருக் கரத்தைத் தலைக்குமேல் தூக்கினுர்கள். முகத்தில் கஷ்டத்தினுடையக் குறி காணப்பட்டது. சற்று நேரத்துக்குள் கரத்திலிருந்து இரத்தம் வடிந்து சொட்டிற்று. இதைக்

கண்ணுற்ற 'புகரு'க்கள் பீதி கொண்டு, திடுக்கிட்டு, 'ஷைகு' அவர்களுக்கு ஏதேனும் தீங்கேற்பட்டு விட்டதோ எனக் கருதி பயந்தார்கள். ஆண்டவர்கள் 'தவாபை' முடித்துக் கொண்டு, அதை விட்டு விலகின பின், 'புகரு'க்கள் அவர்களைச் சுற்றி சூழ்ந்து கொண்டார்கள். "எங்கள் 'ஷைகு' அவர்களே! 'கஃபா'வை வலஞ் சுற்றி வரும் போது திடுக்கத்துடன் சிரசுக்கு மேல் கையை உயர்த்தினீர்களே! புன்னகைத் தவழும் தங்களது முகத்தில் கஷ்டத்தின் அறிகுறியைக் கண்டோமே! தங்களது 'முபாரக்'கான கரத்திலிருந்து உதிரம் வழிந்தோடுகிறதே! யாது காரணம்? தேவரீர் எங்களுக்கறிவித்து, எங்களது மனக் கவலையைப் போக்குவீர்களாக!" என்பதாய் முறையிட்டுத் தாழ்மையுடன் கேட்டு நின்றார்கள்.

அதற்கு, ஆண்டவர்கள் கூறுகிறார்கள்:– "தோழர்களே! நான் 'தவாப்' செய்து கொண்டிருந்த பொழுது, பொன்னாணியில் நாம் விட்டு வந்த தோழர்கள் என்னை விளித்துக் கூவிய கூப்பாட்டைச் செவி மடுத்தேன். இங்கிருந்தபடியே நான் அவர்களை ஏறிட்டுப் பார்த்தேன். அவர்களுக்கும், பொன்னாணி யிலுள்ள வம்பர்களாகிய சில அவிசுவாசிகளுக்கு மிடையே போர் நடப்பதைக் கண்டேன். இரு தரப்பிலும் வாட்களைக் கொண்டு வெட்டிக் கொள்கின்றார்கள். நமது 'புகரு'க்களில் ஒருவரை எதிரிகளில் ஒருவர் "மிகைத்து, சிரசைக் கொய்ய தனது வாளை ஓங்கினான். அவ்வாளை நான் என் கரத்தைக் கொண்டு தடுத்தேன். அவ்வெட்டானது என் கையில் பட்டு இரத்தம் ஓடியது. அந்த சமயத்தில் அவனை அந்த 'பகீர்' வெட்டி வீழ்த்தினார்," என்பதாகக் கூறினார்கள்.

இந்த சம்பவம் நடைபெற்ற திகதியையும் நேரத்தையும் ஆண்டவர்கள் கூடயிருந்தவர்கள் குறித்து வைத்துக்

கொண்டார்கள். மீண்டும் பொன்னுணி வந்து விசாரித்த போது, உண்மையெனத் தெரிந்து ஆண்டவர்களைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

15வது அத்தியாயம்.

மதீனுவுக்குச் சென்றது.

[இது ஆண்டவர்கள் மதீனு நகருக்குச் சென்று, நாயகம் (ஸல்) அவர்களுடைய 'றவுலா—ஷரீபு'க்கு முன் நோன்புடன் ஒரே இருப்பாக நாற்பது நாள் யோக நிலையில் அமர்ந்ததைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மக்கா நகரில் செய்ய வேண்டிய கிரியைகளையும் ஆகுமானவற்றையும் பல நாள் தங்கியிருந்து முடித்துக் கொண்டு, மதீனு நகருக்குப் பிரயாணப் பட்டார்கள். வனுந்தரத்தையும் மணல் பிரதேசத்தையும் கடந்து, பாலைவனத்தினுள்ள பல 'மன்ஜில்'களில் தங்கி, மதீனுவின் எல்லையையடுத்தார்கள். ஈருலக ரட்சகர் நபிகள் பிரான் முஹம்மதுர்—ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பரிசுத்த தேகத்தைத் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் 'றவுலா-ஷரீபி'ன் பச்சை முகடு, "இங்கே வருக!" என்றழைப்பதைப் போல் காணப்பட்டது. அதைக்கண்ட ஆண்டவர்கள் ஆனந்தப் பரவசமானுர்கள். தங்களது பாட்டனுர் ஸையிதினு முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களது தரிசனங் கிடைத்ததற்காக 'அல்லாஹுத்—தஆலா'வுக்குப் பன்முறை 'ஷுக்ரு' செய்தார்கள்.

நேரே தங்கள் பாட்டனார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது 'றவுலா – ஷரீபை' முன்னோக்கி நடந்து சேர்ந்தார்கள். அங்கு 'வலு'ச் செய்து கொண்டு, 'கப்று – ஷரீபு'க் கெதிரே நின்று, அடக்க ஒடுக்கத்துடன், மிகவும் தாழ்மையாய், 'அதபு'டன் "அஸ்ஸலாமு அலைக்கும் யா ஜத்தீ!" என்று ஸலாம் கூறினார்கள். உடனே 'றவுலா'வில் நின்றும் பதில் வந்தது. ஆண்டவர்கள் மிக மகிழ்ச்சியடைந்தவர்களாகக் கைக் கட்டி, வாய்ப் பொத்தி, கண் மூடி, ஒரே இருப்பாக நோன்புடன் நாற்பது நாள் யோக நிலையில் அமர்ந்து விட்டார்கள். அந்நிலையில் பாட்டனார் அவர்களது தரிசனை கிடைத்தது; பிறகு 'பைலு'களையும் பெற்றுக் கொண்டார்கள். அங்கே தான் ஸையிது கமாலுத்தீன், ஸையிது இஸ்மாயீல் இரு சகோதரர்களும் 'கஷ்பு'டையவர்களாக்கப் பட்டார்கள்; 'ஔலியா'க்களுடைய பதவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஆண்டவர்கள் மதீனா நகரில் சில நாட்கள் தரிபட்டு, பல 'ஜியாரத்து'க்களையும் ஆகுமானவற்றையும் முடித்துக் கொண்டு, ஜித்தாவுக்குப் புறப்பட்டார்கள். இவர்கள் ஏறி வந்த மரக்கலம் ஆண்டவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அக்கப்பலில் 'புகறு'க்கள் சகிதம் ஆண்டவர்கள் யாத்திரையாகி, சிந்தா யாத்திரையாய் மீண்டும் பொன்னாணி வந்து இறங்கினார்கள். 'புகறு'க்களுக்கும் பொன்னாணியிலுள்ள அவிசுவாசிகளுக்குமிடையே நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி ஹஜ்ஜிலிருந்து திரும்ப வந்த'புகறு'க்கள் விசாரித்ததில் உண்மையெனக் கண்டு, ஆண்டவனைப் புகழ்ந்தார்கள்.

—

16வது அத்தியாயம்.

சிரந்தீபுக்குச் சென்றது.

[இது ஆண்டவர்கள் இலங்கைக்குச் சென்று ஆதத்தின் பாதத்தைத் தரிசித்ததையும். ஹூக்கா மலைக்குப் போனதையும் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள், பொன்னுணியிலிருந்து 'புகரு'க்கள் அனைவர்களுடன் ஸிரந்தீபு என்று சொல்லப்பட்ட இலங்கை தீவுக்கு ஓர் மரக்கலத்தில் பிரயாண மானார்கள். இலங்கையில் இறங்கி பரஸ் மலைக்குச் சென்றார்கள். இவ்விடத்தில் அனைவரையும் இருக்கச் செய்து விட்டு இரு சகோதரருட்பட பதினெரு பேருடன் ஆதம் மலைக்குப் புறப்பட்டார்கள்.

இம்மலையில் தான் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள், தான் செய்த தவற்றை மன்னிக்கும்படி, பல வருஷங்கள் ஒரே நிலையாக நின்றார்கள். அவர்களது * பாதம் பாறையில் பதிந்து காணப் படுகின்றது. ஆண்டவர்கள் அதை தரிசனம் புரிந்து கொண்டு மூன்று நாள் அவ்விடத்தில் தங்கி இருந்தார்கள். இன்னும், இம்மலையில் காண வேண்டிய பல அதிசயங்களையுங் கண்டார்கள்.

பின்னர், ஆண்டவர்கள் அங்கிருந்து ஹூக்கா மலைக்குச் சென்றார்கள். இது ஓர் பாறை; நாற்புறமும் தண்ணீரால் சூழப் பட்டது. 'பஜ்ரு' எனும் வைகறை நேரத்தில் தான் இப்பாறை தண்ணீருக்கு மேல் காணப்படும். மற்ற நேரங்களில் தண்ணீருக்குள் மூழ்கியே இருக்கும்.

---

* இதர மதத்தினர்கள் சிவனடி பாதம் என்று கூறுகின்றனர்.

இது பரிசுத்தமான மகத்துவமுள்ள ஓர் பாறை. இப் பாறையைப் பற்றி நபி கரீம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஓர் 'ஹதீஸு' முண்டு. "எவனொருவன் ஹூக்காவில் புகுந்தானோ அவன் பாவத்தை விட்டும் பழிப்பை விட்டும் தூயவனாகவும், பிழை பொறுக்கப் பட்டவனாகவும், அன்று பிறந்த பாலகனைப் போலாய் விட்டான்," என்பதாய் அந்த நாயக வாக்கியம் கூறுகிறது.

ஆதி பிதா ஆதம் (அலை) அவர்கள் ஆரம்பமாக பூலோகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட சமயம் இப் பாறையில் தான் இறக்கப்பட்டார்கள். இப்பாறைக்கு ஆண்டவர்கள் ஓர் 'பஜ்ரு' வேளையிற் சென்று 'ஜியாரத் து'ச் செய்து, ஆங்குப் பல 'ரக்அத்து' 'நபில்' தொழுது, பரஸ் மலைக்கு மீண்டார்கள்.

17வது அத்தியாயம்.

'அசா'வைப் பாதுகாக்க வைத்துச் சென்றது.

[இது ஆண்டவர்களது 'அசா'வைக் கண்டு யானைக் கூட்டம் வெருண்டோடியதையும், 'புகரு'க்கள் கூட்டத்தை 'அசா' பாதுகாத் துக் கொண்டிருந்ததையும் சொல்லு கின்றது.]

காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் பரஸ் மலையில் விட்டுச் சென்ற 'புகரு'க்கள் அனைவரை யும் அழைத்துக் கொண்டு, உலக சக்கரவர்த்தியாக விளங்கின சுல்தான் சிகந்தர் துல் – கர்னைன் அவர்கள்

கட்டிய மாளிகைக்குப் பிரயாணமானுர்கள். காடு, கான கம், வனுந்திரம், மடு முதலியவற்றைக் கடந்து சென்ருர் கள். இடையே ஓர் சமவெளி வந்தது. அங்கு நூற்றுக் கணக்கான காட்டு யானைகள் சேர்ந்த பெரியதோர் கூட் டத்தைக் கண்டார்கள். அவையும் இவர்களைக் கண்டு வெருட்சியுடன் பார்த்தன. அவற்றுக்குத் தலைமை வகித்த பிரமாண்டமான யானை அவர்களை முன்னேக்கி வர ஆரம் பிக்கவே, மற்ற யானைகளும் பின் தொடர்ந்தன. இவற் றின் வருகையைக் கண்ட 'புகரு'க்கள் பயப் பட்டார்கள். தங்களைக் காக்கும்படி ஆண்டவர்களிடம் 'புகரு'க்கள் முறை யிட்டார்கள். ஆண்டவர்கள் அந்த யானைக் கூட் டத்தை முன்னேக்கிச் சென்ருர்கள். உடனே அவர்கள் தங்கள் கரத்திலுள்ள 'அசா'வை நீட்டி, திரும்பிச் செல் லும்படி சமிக்ஞை செய்தார்கள். அவை காடலறும்படி சப்த மிட்டுக் கொண்டு திரும்பி ஓடி விட்டன.

சற்று தூரம் எல்லோரும் நடந்தார்கள். நேர் பாதையை விட்டு விட்டு, அங்கிருந்து கரடு முரடான பாதையில் குறுக்கே சென்ருர்கள். ஆண்டவர்கள் வழித் தவறிச் செல்லுகிருர்கள் போலிருக்கிறது என்பதாய்க் கூடச் சென்றவர்கள் எண்ணினுர்கள். கொஞ்ச தூரத் துக் கப்பால் ஓர் பெரியார் ஆண்டவர்களை சந்தித்தார். இருவரும் இரகசியமாக ஏதேதோ பேசிக் கொண்டார்கள். அப்பெரியார், ''அல்லாஹுத் – தஆலா' தங்களுக்கும் ஸையிது கமாலுத்தீனுக்கும் ஏற்படுத்தி யுள்ள வழியைக் காண்பிக்கிறேன்'' என்று கூறி, ஓர் பாதை மார்க்கமாக வழி நடத்திச் சென்று, மறைந்து விட்டார்.

ஆண்டவர்கள் ஆங்கு நின்ற பிரமாண்டமான ஓர் மரத்தடியில் ஸையிது இஸ்மாயீலையும் மற்ற 'புகரு'க் களையும் அமர்த்தி, ''நான் திரும்பி வரும் வரையில்

இங்கேயே இருங்கள்; எங்குஞ் செல்லாதீர்கள்'' என்று உத்திர விட்டார்கள். தங்களது 'அசா'வை அவர்கள் முன் வைத்து, ''ஏ 'அசாவே! நான் மீண்டும் வரும் வரையில் இவர்களைப் பாதுகாத்துக் கொள்வாயாக!!'' என்பதாய் ஆக்ஞாபித்தார்கள். ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் தங்களது ஆட்டு மந்தைகளுக்குக் காவலாக, தங்களது ஊன்று கோலாகிய 'அசா'வை வைத்து, ''ஆடுகளைக் காவல் புரிந்து கொள்வாயாக!'' என்பதாய்ப் பகன்று, ஆண்டவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டு விடுவார்கள்; சில பொழுது உறங்கி விடுவார்கள்; சில சமயம் காரியாதிகளை முன்னிட்டு வெளியே சென்று விடுவார்கள். எந்த துட்ட மிருகமும் மந்தையை யணுகாது. அங்ஙனமே ஆண்டவர்களும் தங்களது பக்த சிஷ்யர்களின் பாதுகாவலுக்காக 'அசா'வை வைத்துச் சென்றார்கள். எந்த துஷ்ட மிருகமும் அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை.

18வது அத்தியாயம்.

சிகந்தர் மாளிகைக்குச் சென்றது.

[இது சுல்தான் சிகந்தர் துல்-கர்னைன் கட்டிய மாளிகைக்கு ஆண்டவர்கள் சென்று சந்தனக் கை வைத்த வரலாற்றைக் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் அந்த விருட்சத்தின் நிழலில் 'லுஹர்' தொழுது விட்டு,

ஸையிது கமாலுத்தீனுடைய கையைப் பிடித்துக்கொண்டு மறைந்து விட்டார்கள். இருவரும் கொஞ்ச தூரம் நடந்ததும், எதிரே வானமளாவி ஜொலிக்கும் பிரகாச மொன்று தோன்றியது. அந்தப் பிரகாசமானது ஆங்குள்ள உன்னத மாளிகை யிலிருந்து எழுந்து எரிக்கும் பிரகாசமா யிருந்தது. சற்றே போகப் போக ஓர் கோட்டைத் தென்பட்டது. அதன் சுற்று மதில், பிரகாச முள்ள நாணுவிதக் கற்கள் பதிக்கப் பட்டதாகக் காணப் பட்டது. அம்மதிலைச் சுற்றி ஆழமும் அகலமுமான அகிழ் தோண்டப் பட்டிருந்தது. அகிழைக் கடந்து கோட்டைக்குள் செல்ல எத்தகைய சாதனமும் காணப் பட வில்லை. எவ்விதங் கடப்பது? என்பதாய் சிந்தனைச் செய்து கொண்டிருந்த சமயம், முன் தரிசனைத் தந்த பெரியார் மீண்டும் தோன்றி, தனது கரத்தை நீட்டி, "இதோ இருக்கிறது பாதை! சீக்கிரம் சொல்லுங்கள்" என்ருர். அகிழ்த் தண்ணீர் கல்லைப் போல் உறைந்து விட்டது. "தாங்கள் யார்?" என்று ஆண்டவர்கள் வினவினுர்கள். "நான் கிஜிர்; தங்களுக்கு வழி காட்ட வந்தேன்," என்று கூறி மறைந்து விட்டார்.

ஆண்டவர்கள் ஸையிது கமாலுத்தீனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, அகிழைக் கடந்து கோட்டைக்குள் சென்ருர்கள். நடுவே நவரத்தினுதிகள் அழுத்தப்பட்ட மாளிகை ஒன்று காணப் பட்டது. அதன் ஜொலிப்பையும் சிறப்பையும் கூற எவரும் திராணிப் பெருர். அம் மாளிகையின் மத்தியில் ஜோதிப் பிரகாச முள்ள ஓர் சிங்கார நாற்காலியில் அழகு சவுந்திரிய முள்ள ஒருவர் கம்பீரமாக வீற்றிருந்தார். அன்னுர் தான் உலகத்தை ஒரே குடைக்குக் கீழ் ஏக சக்கரவர்த்தியாக இருந்து அரசு புரிந்த சுல்தான் சிகந்தர் துல் - கர்னைன் (அலை) ஆவார்கள். அவர்களுக்கு ஆண்டவர்கள் பணிவுடன் ஸலாம்

பகர்ந்தார்கள். துல் – கர்னைன் அரசரும் அதற்கு பதில் ஸலாம் கூறினார்கள். பிறகு இருவரும் ஏதேதோ சம்பாஷித்தார்கள்.

அவ்வமயம் ஒருவர் குதிரை மீது வந்து, வேறு வாயலுக்குள் புகுந்து சென்று. 'அசரு' தொழுகைக்கு 'பாங்கு' சொன்னார். துல் – கர்னைனுடன் ஆண்டவர்களும் 'கமாலுத்தீனும் தொழுகைக்காகச் சென்றார்கள். ஆங்குக் கண்ணைக் கவரும் ஓர் அழகிய 'மஸ்ஜிதை'க் கண்டார்கள். அதில் ஓர் ஜனக் கூட்ட மிருந்தது. ஒருவர் எழுந்து 'இகாமத்து'ச் சொன்னார். குதிரையில் வந்து 'பாங்கு' கூவியவரே 'இமாம்' ஆக முன் நின்றார். 'ஜமாஅத்'தாக ஆண்டவர்களும் கமாலுத்தீனும் உள்பட அனைவரும் தொழுதார்கள். தொழுது முடிந்ததும் அனைவரும் கண்களை மூடி 'முஷாஹதா' 'முருகபா'வில் இருந்து விட்டார்கள். ஆண்டவர்களும் கமாலுத்தீனும் அங்ஙனமே எல்லோரையும் போல் ஆய்விட்டார்கள். பிறகு 'பாங்கு' சொல்லப்பட்டது. எல்லோரும் ஆயத்தமானார்கள். முன் போல் அனைவரும் 'ஜமாஅத்'தாக 'மக்ரிபு' தொழுதார்கள். தொழுது முடிந்ததும் எல்லோரும் மறைந்து விட்டார்கள், மறைந்த இவர்களைப் பற்றி ஆண்டவர்கள் துல் – கர்னைன் அவர்களிடம் விசாரித்தார்கள். "இமாம்'ாக நின்றவர்கள் தான் கிஜ்ர் (அலை); 'முக்த்ததி'கள் – பின் தொடர்ந்து தொழுதவர்கள் – எல்லோரும் 'ஒளலியா'க்களாவார்கள். ஒரு விடுத்தம் இங்கு வந்தவர்கள் மறு விடுத்தம் வர மாட்டார்கள்," என்பதாக துல் – கர்னைன் ஆண்டவர்களுக்குக் கூறினார்கள். பிறகு, தாம் விட்டு வந்த 'புகரு'க்களைப் பற்றியும் ஆண்டவர்கள் விசாரித்ததற்கு, "நீர் மரத்தடியில் விட்டு வந்தபடியே அவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள்," என்பதாகவும் துல் – கர்னைன் கூறினார்கள்.

ஆங்கு ஒரு கிண்ணத்தில் வைக்கப் பட்டிருந்த சந்தனக் குழம்பில், துல் – கர்னைன் அரசர் ஏவற் பிரகாரம், ஆண்டவர்கள் தங்களது வலக் கரத்தைத் தோய்த்து, அம்'மஸ்ஜிது' சுவற்றின் ஒரு பக்கத்தில் சந்தனக் கை வைத்தார்கள். பிறகு ஆக வேண்டிய கருமங்களை முடித்துக் கொண்டு ஆண்டவர்கள் விடைப் பெற்றுத் திரும்பி, முன் விட்டு வந்த விருட்சத்துக்கு வந்து, எல்லோரையும் அழைத்துக் கொண்டு, திரும்பவும் பரன் மலைக் கேகினார்கள்.

19வது அத்தியாயம்.

'காபிர்'கள் இஸ்லாத்திலானது.

[இது ஆண்டவர்கள், 12 வருடத்துக்கொரு கனிக் கொடுக்கும் மரத்தை உலுப்பி நூற்றுக் கணக்கான கனிகளைக் கொட்டச் செய்த வரலாற்றையும், 'காபிர்'கள் 'இஸ்லாம்' மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'புகரு'க்கள் புடை சூழ, போய்க்கொண்டிருக்கும் போது வழியில் அநேகப் புதுமைகளைக் கண்டார்கள். உயர்ந்து, ஓங்கி வளர்ந்த ஓர் விருட்சத்தைச் சுற்றி நானூறு 'காபிர்'கள் சூழ்ந்து நிற்பதைப் பார்த்தார்கள். அக்'காபிர்'கள் ஏதோ ஒரு வஸ்துக்காக வேண்டி போட்டி யிட்டுக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது. "ஏன் இங்குக்

கூடி யிருக்கிறீர்கள்?'' என்று ஆண்டவர்கள் அக்கூட்டத்தாரை வினவினார்கள். அதற்கவர்கள், ''இவ்விருட்சத்தில் பன்னிரண்டு வருடத்துக்கொரு விடுத்வம் ஒரு கனி உண்டாகும். அது பழுத்துக் கீழே விழுந்தால் நாய்க் குட்டியைப் போல் சப்த மிடும் அப்பழத்தைத் தின்றால் இறுதி நாள் வரையிலும் நாங்கள் ஆண்டவனால் பிடிக்கப் பட்டு, தண்டிக்கப்பட மாட்டோம். இன்றே அப்பழம் தோன்றி, பழுத்து விழக்கூடிய நாளாகும். அப்பழத்துக் காகவே நாங்கள் எதிர்நோக்கிக் காத்து நிற்கின்றோம்,'' என்று கூறினார்கள்.

அந்தக் 'காபிர்'கள் அறியாத்தனமாக அந்தக் கனியின் மீது மடமையான நிர்ணயங் கொண்டிருக்கின்றனர் என்று ஆண்டவர்கள் எண்ணி, ''சரி; இம்மரத்தின் கனிகளில் நான் ஆளுக்கொன்று தருவேனே யானால், நீங்கள் அனைவரும் 'இஸ்லாம்' மார்க்கத்தை ஒப்புக் கொண்டு 'முஸ்லிம்'களாவீர்களா?'' என்பதாய் ஆண்டவர்கள் அவர்களைக் கேட்டார்கள். ''பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்து, ஒரு கனிக்காக நாம் இத்தனை பேரும் ஒருவரோடொருவர் மோதி, மண்டைகளை உடைத்துக் கொண்டாலும் எல்லோருக்கும் அப்பழம் கிடைக்காதே! எவரோ ஒருவருக்குத் தானே அது கிடைக்கக் கூடும். மாமாங்கமாகக் காத்துக் கொண்டிருந்து ஏமாற்றமடைவதை விட இப்பொழுதே ஆளுக்கொரு கனி சாப்பிட்டு, இறுதி நாள் வரை ஆண்டவனுடைய பிடியில் நின்றும் தப்பித்துக் கொள்வது எவ்வளவோ மேல்!'' என்பதாக ஆலோசனை செய்து, அக்கூட்டத்தினர் அனைவரும் ஆண்டவர்களுடைய நிபந்தனையை ஒப்புக் கொண்டார்கள்.

ஆண்டவர்கள் விருட்சத்தடியில் நின்று கொண்டு, தங்களது திருக் கரங்களால் அம்மரத்தை உலுப்பினார்கள்.

கொப்புக்களில் கனிகள் பழுத்துக் குலுங்கி. ரசமுள்ள கனிகள் உதிர்ந்து கொட்டின. அக்கூட்டத்தினர் அனை வரும் ஆளுக்கொரு பழமாகப் புசித்து, ஆண்டவர்களின் அற்புதத்தைக் கண்டு பேராச்சரிய மடைந்தனர். பிறகு வாக்குப்பிரகாரம் 'இஸ்லாத்'தின் தூயக் 'கலிமா'வைச் சொல்லி அனைவரும் முஸ்லிமானார்கள். தங்களுடன், ஆண்டவர்கள் இவர்களையும் அன்போடு அழைத்துக் கொண்டு பரஸ் மலையை அடைந்தார்கள். அங்குப் பரஸ் மலையிலிருந்தவர்களையும் கூட்டிக் கொண்டு கடற்கரைக் குச் சென்றார்கள்.

——

20வது அத்தியாயம்.

* அதிவீரராமபட்டணம் வந்தது.

[இது ஆண்டவர்கள் இலங்கை யிலிருந்து அதிவீரராமபட்டணம் வந்ததைக் கூறு கின்றது.]

காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்கள் இலங்கையில் பல பாகங்களுக்குச் சென்று, இறுதியாக 'புகாறு'க்கள் சகிதம் கப்பலேறி, இந்தியாவுக்குப் பிரயாண மானார்கள். தென்னிந்தியாவின் கிழக்குக் கரையில் அதி வீரராமபட்டணத்துக்குச் சமீபமாயுள்ள மகலம் என்ற கோட்டையை யடைந்தார்கள். அன்றிரவு மகலம்

* தற்காலம், அதிராம்பட்டணம் என்று மருவி வழங்கப் பட்டு வருகின்றது.

கோட்டையில் தங்கி, மறு நாள் 'புகரு'க்களுடன் 'ஜமாஅத்'தாக 'சுப்ஹு' தொழுதார்கள். பிறகு, ஸையிது கமாலுத்தீனை யழைத்து, "இவ்விடத்திலேயே நாம் தங்க வேண்டும்" என கூறினார்கள். உடனே, இவ்விடத்திலேயே இருப்பதற்குச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆண்டவர்கள் 'புகரு'க்களுடன் மகலம் கோட்டையிலேயே பதினைந்து வருட காலம் தங்கி விட்டார்கள். அக்கம் பக்கத்துக் கிராமங்களிலுள்ள ஜனங்களெல்லாம் ஆண்டவர்களைக் கண்டு தரிசனஞ் செய்து கொண்டு போவது வழக்கமாகி விட்டது.

21வது அத்தியாயம்.

அம்பர் வரவழைத்தது.

[இது ஆண்டவர்கள் கடலில் எடுத்த அம்பரை அனியாயக்காரன் வம்பித்துக் கேட்டதால் அதைக் கடலில் எறிந்ததையும், அதை வம்பர்கள் எடுக்க முடியாது தத்தளித்ததையும், மீண்டும் ஆண்டவர்கள் அதை எடுத்து அவர்களிடமே விற்று, குடித் தண்ணீர் கிணறு கட்டின வரலாற்றையுஞ் சொல்லுகின்றது.]

ராஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஒரு நாள் கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். கடலில் மீனம்பர் மிதந்து வருவதை அவர்கள் கண்டு, அவைகளைச் சேகரஞ் செய்து எடுத்து வந்தார்கள். இந்த

சமாச்சாரம் அவ்வூர் தலைமைக் காரனுக்குத் தெரிந்து, அவற்றை அபகரிக்க முற்பட்டான். அவனோ அனியாயக் காரன். அவன் ஆள் பேர்களுடன் திரண்டு, ஆண்டவர் களிடம் சென்று, "அம்பர் எங்களுக்குரியது; அவற்றை எங்கள் வசம் ஒப்படையுங்கள்," என்பதாய் பயமுறுத்திக் கேட்டான். அதற்கு ஆண்டவர்கள், "இது ஆண்டவ னுடைய சொத்து; எவருக்கும் உரித்தானதல்ல. ஆண்ட வன் எமக்களித்ததைக் கொடுக்க முடியாது," என்றூர்கள். இருவருக்கு மிடையே வெகு நேரம் வாக்கு வாதங்கள் நடந்தன. உடனே ஆண்டவர்கள், "நான் எடுத்த இடத் தில் அவற்றை எறிந்து விடுகிறேன்; அங்கிருந்து நீ அவற்றை எடுத்துக் கொள்" என்ற முடிவுக்கு வந்து, அம்பரைக் கடலில் எறிந்து விட்டார்கள்.

அந்தத் தலைவனைச் சேர்ந்த கூட்டம் அவற்றை எடுக்கக் கடலில் குதித்தது. அம்பரோ தண்ணீருக்குள் ஆழ்ந்து விட்டது. மேலும் அவர்கள் வலை வீசித் தேடி ஞர்கள்; அகப்படவில்லை. அவர்கள் சோர்வடைந்து கரைக்கு வந்ததும் அவை மிதக்க ஆரம்பித்தன. மீண்டும் போய் எடுக்க ஆரம்பித்தனர். ஆனல் தண்ணீருக்குள் மறைந்து விட்டது. இவ்விதம் பல விடுத்தங்கள் முயன் றும் முடியாது போய் விட்டதால், "இப்பெரியார் சாமா னிய மனிதரன்று; ஓர் மஹானாகவே இருக்க வேண்டும்" என்ற தீர்மானத்துக்கு அக்கூட்டத்தினர் வந்தனர். உடனே அவர்கள் ஆண்டவர்களிடம் சென்று, தாழ்மை யுடன் மன்னிப்புத் தேடினார்கள். ஆண்டவர்கள் மன மிரங்கி, கடற் பக்கம் தங்களது திருக் கரத்தை நீட்டினர் கள். அலைகள் அம்பரைக் கரைக்கு ஒதுக்கித் தள்ளின. ஆண்டவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டார்கள்.

அக்கூட்டம் இவ்வற்புதத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தனர். மிகுதமான பொருளைக் கொடுத்து அவற்றை

ஆண்டவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். அவ்வூரில் தண்ணீர் கஷ்ட மதிகமான படியால் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்காது. அப்பொருளைக் கொண்டு ஆண்டவர்கள் மகலத்தில் ஓர் கிணறு வெட்டி, பொது ஜனங்களின் உபயோகத்துக்கு விட்டார்கள். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் அக்கிணற்றைக் கொண்டு பிரயோஜனங் கிடைத்தது.

22வது அத்தியாயம்.

* இஸ்மாயீலுக்குப் பெண் பேசியது.

[இது ஸையிது இஸ்மாயீலுக்குப் பெண் பேசிப் போன போது பெண்ணின் தந்தை இழிவாகப் பேசியதையும், கற்பனைப்படி அவரின் பெண் மரணமான பின் இளைய பெண்ணை மண முடித்து வைத்த வரலாற்றையும் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஒரு நாள் ஸையிது கமாலுத்தீன், ஸையிது இஸ்மாயில்

---

* ஸையிது இஸ்மாயீலுக்குப் பெண் பேசிய வரலாறு. "கன்ஜுல்-கருமாத்" தில் குத்புல் அக்த்தாபு ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) ஆண்டவர்கள், தங்கள் திருக்குமாரராகிய ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் ஆரிப்பில்லாஹ் (ரலி) அவர்கட்கு, மேலை நாகூரில் காஜா மகுதூம் இடத்திற் பெண் பேசிய வரலாற்றை ஓரளவோத் திருக்கிறது.

இருவரையும் அழைத்து, "உங்கள் இருவருக்கும் 'நிகாஹு' செய்து வைக்கலாம் என்று எண்ணுகிறேன்; உங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவியுங்கள்," என்று வினவினார்கள். அதற்கவர்கள் ஒவ்வொருவராக, "என்னுடைய 'ஷைகு' அவர்களே! தங்களோடு தங்களுடைய 'கிதுமத்'திலிருந்து கொண்டு தொண்டூழியம் புரிந்து வருவது தான் எனக்குப் பிரியமாக இருக்கிறது. இதைத் தவிர்த்து வேறு எத்தகைய நாட்டமும் எனக்கில்லை," என்றார் † ஸையிது கமாலுத்தீன். "என் 'உஸ்தாது' அவர்களே! என் விஷயத்தில் தாங்கள் எதை நன்மையெனக் கருதுகிறீர்களோ அதையே நான் பிரியப் படுகிறேன்." என்றார் ‡ஸையிது இஸ்மாயீல். இவர்களது அபிப்பிராயத்தையும் ஆண்டவர்கள் அறிந்து, தமது 'கலீபா'க்களுள் நால்வரைக் கூப்பிட்டார்கள். ஷம்ஸுத்தீன், கமருத்தீன், பதீஉத்தீன், சத்ருத்தீன் நால்வரிடத்தும் ஸையிது இஸ்மாயீலுக்கு உயர் குலத்தி லுதித்த

---

†சையிது கமாலுத்தீன், ஆண்டவர்களின் தொண்டூழியத்தில் அவாவுற்றுக் கருதி யுரைத்த வேண்டுதலுக்கு ஆண்டவரவர்களும் பிரதி யொன்றுரையாமல் மவுன முற்றதால், அன்னவர் பிரமச்சரியத் துறவற நிலையில் ஆயினர் போலும்.

‡ஸையிது கமாலுத்தீனும் ஸையிது இஸ்மாயீலும் ஆண்டவர்களின் குரு நாதர் ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்களின் திருக்குமாரர்கள் என்பதும், இவ்விருவர்களையும் குருநாதர் தனது இறுதி காலத்தில் ஆண்டவர்களிடம் ஒப்படைத்தனர் என்பதும், ஆண்டவர்கள் தனது 'உஸ்தாது' உத்திரவுக்கிணங்க இவ்விருகுமாரர்களையும் தனது குமாரர்களாக வேற்று, சகல 'இல்மு'களிலும் இவர்களைத் தேர்தற் பெறச் செய்து, தனது அவிதாரப் புத்திர பலனாக ஆக்கிக் கொண்டார்களென்பதும், கீழ் 9, 10வது அத்தியாயத்தால் இந்நூல் வாசக நேயகர்கள் நன்கறிவர். இக் கருத்துப் பற்றியே ஆண்டவர்கள் ஸையிது இஸ்மாயீலைத் தன் மகனென்றாலும் பிறர் இவரை ஆண்டவர்களின் மகனென்றாலும் பொருந்துமாறு காண்க.

நற்குணமுள்ள அழகிய 'சாலிஹ'ான ஒரு பெண் பேசி வரும்படி அனுப்பினுர்கள்.

அந்நான்கு 'கலீபா'க்களும் ஆண்டவர்களுடைய உத்திரவைச் சிரமேற் கொண்டு, ஊரூராகத் தேடித் திரிந்தனர். கடைசியாக நாராண்டி என்ற கிராமத்தில் ஷைகு பரீது சாஹிப் என்ற ஒரு தனவந்தர் இருந்தார். அவருக்கு இரு பெண் மக்களுண்டு. ஷைகு பரீது சாஹிப் என்ற தனவந்தர், தக்ஷணப் பிரதேசத்தில் குல்பர்கா - ஷரீபில் அடங்கி விளங்கா நிற்கும் க்வாஜா ஸையிது மகதூம் முஹம்மது ஹுஸைன் பந்தா நவாஜ் கேஸூதரூஜ் சிஷ்தீ (ரலி) அவர்களது சந்ததியி லுதித்தவர்.

மேற்படி நான்கு 'கலீபா'க்களும் ஷைகு பரீது சாஹி புடைய இல்லத்துக்குச் சென்று, அவரது மூத்த மகளை ஸையிது இஸ்மாயீலுக்கு மணம் புரிய ஆண்டவர்கள் உத்திரவுப்படி பெண் பேசி வந்ததாகச் சொன்னுர்கள். இதைக் கேட்ட ஷைகு பரீது சாஹிப் தனது குமாரத்தியை 'பகீரு'டையக் குமாரனுக்குக் கொடுக்க முடியாதென்று இறுமாப்புடன் கூறினுர். இச்சொல்லைக் கேட்ட 'கலீபா'க்கள் மறுத்துக் கூற வகை யின்றி, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு ஆண்டவர்களிடம் வந்து நடந்தவற்றை சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னுர்கள். இதைக் கேட்ட ஆண்டவர்கள் மௌனமாக இருந்து விட்டார்கள்.

சில நாட்களுக்குப் பின் 'அல்லாஹுத் - தஆலா'வின் கற்பனைப்படி ஷைகு பரீது சாஹிபின் மூத்தப் பெண் வியாதிப் பட்டு இறந்து விட்டாள். அதனுல் தந்தைக்கு உண்டான துக்கமும் துயரமும் கொஞ்ச மல்ல. இது ஹஜ்ரத் காஜா ஷைகு அலாவுத்தீன் (ரலி) ஆண்டவர்களை அவமதித்துப் பேசினதால் வந்த கேடு என்பதாய்,

வந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர். ஆண்டவனுக்கு உவப்பான பெரியாரை அலட்சியமாகப் பேசினதால் வந்த திங்கென்பதை ஷைகு பரீது சாஹிபும் உணர்ந்தார்.

உடனே ஷைகு பரீது சாஹிப் மகலத்துக்கு ஆண்டவர்களைத் தேடிச் சென்று, அவர்களின் பாதத்தடியில் விழுந்து கீழ்வருமாறு மன்னிப்புத் தேடினர். "ஆண்டவர்களே! தமியேன் குற்றத்தை தேவரீர் மன்னித்தருள வேண்டும்! அடியேன் அறியாமையால் பேசி விட்டேன். அதன் காரணமாய் என்னருமைப் புதல்வியையும் இழந்தேன். தங்கள் மகனார் ஸையிது இஸ்மாயீலுக்கு என் இளைய புத்திரியை தயவு செய்து மண முடித்து வையுங்கள். அடியேனைக் காப்பாற்றுங்கள்; என் பிழையைப் பொறுப்பது தங்களது கடமையே," என்பதாகப் பிரலாபித்தார்.

இங்ஙனமாக, ஷைகு பரீது சாஹிபின் மன்றாட்டத்தைக் கண்ட ஆண்டவர்கள் மன மிளகி, "நல்லது; மண முடிப்போம்," என்றார்கள். பிறகு நாள் குறிப்பிடப் பட்டு, இருவருக்கும் 'நிகாஹு' முடிந்தது. ஆண்டவர்கள் மகனார் ஸையிது இஸ்மாயீலுக்கு 'கிலாபத்' தும் 'கிர்கா'வும் கொடுத்து 'கலீபா' வாக்கி ஆசீர் வதித்தார்கள். ஸையிது இஸ்மாயீல் இல்லறம் நடாத்தி வாழ்ந்து வந்தார்கள்.

23வது அத்தியாயம்.

முடம் தீர்ந்தது.

[இது ஆண்டவர்களுடைய குதிரையைத் திருட வந்த சமயம் குதிரை, திருடர்களைக் காட்டிக்கொடுத்ததையும், கள்வர் தலைவன் குதிரையிலேற முடியாதபடி முடம் பற்றித் தீர்ந்த வரலாற்றையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களிடம் ஓர் குதிரை இருந்தது. அக்குதிரை அறிவிலும், அழகிலும் பிரபல்யமானது; மின்னல் வேகத்தையுடையது. ஆண்டவர்கள் அக்குதிரை மீது சவாரியாகி வந்தால் அக் குதிரையைக் கண்ணெடுத்துப் பாரார் யாருமிருக்கமாட்டார். அந்தக் குதிரை எஜமானிடத்தில் நன்றியறிதலுள்ள தாக இருந்தது.

பக்கத்து ஊரில் ஓர் பணக்காரன் இருந்தான். அவன் ஜனக் கட்டுடையவன். அவனுடைய ஏவலுக்கு அநேகர் கை கட்டிக் காத்துக்கொண்டு நிற்பர். அவனுக்கு அந்தக் குதிரையின் மீது கண்ணுண்டு. அந்தக் குதிரையைப் பெற பல விதத்தில் முயன்றான்; முடியவில்லை. அதைத் திருடியாகிலும் அபகரித்துக் கொள்ள நாடினான்.

கள்ளத்தொழிலில் கை தேர்ந்த மூன்று ஆசாமிகளை யனுப்பி அந்தக் குதிரையை எவ்விதத்திலும் திருடிக் கொண்டு வரும்படி அனுப்பினான். மூவரும் சமயம் பார்த்து நள்ளிரவில் குதிரை லாயத்துக்குள் புகுந்து, சந்தடிச் செய்யாமல் குதிரையின் பக்கத்தில் சென்றனர்.

என்று மில்லாத விதமாக, கொட்டகை யலறும்படிக் குதிரை கனைத்தது. உடனே ஆண்டவர்கள் விழித் தெழுந்து, விளக்கை எடுத்துக் கொண்டு லாயத்துக்குள் சென்றார்கள். மூன்று பேர்கள் குதிரைக்குப் பக்கத்தில் திகைப்புடன் நிற்பதைக் கண்டு, "நீங்கள் யார்? எதற் காக இங்கு வந்தீர்கள்?" எனக் கேட்டார்கள். திருடர் கள் பேச நாவெழாமல் ஸ்தம்பித்தவர்களாய் நின்றனர். அத்திருடர்கள் எத்தகைய பதிலும் சொல்லாமல், மெல்ல நழுக முயன்றனர். இதைக் கண்ட ஆண்டவர்கள், "நீங் கள் இங்கேயே நிற்பீர்களாக!" என்று கூறிச் சென்றார் கள். காலையில் அந்த லாயத்திற்குச் சென்று பார்த்த பொழுதும், இடத்தை விட்டு நகர சக்தி யற்று, அத் திருடர்கள் அதே இடத்தில் நெடு மரம் போல் நின்று கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் தாங்கள் வந்த விஷ யத்தை சவிஸ்தாரமாய்ச் சொன்னார்கள். இதைக் கேட்ட ஆண்டவர்கள், "நல்லது; குதிரையை அவிழ்த்துக் கொண்டுச் சொல்லுங்கள்" எனக் கூறி விட்டார்கள்.

மூவரும் குதிரையுடன் தன் எஜமானிடஞ் சென்று, நடந்தவற்றை விபரமாகச் சொல்லிக் காண்பித்தனர். இவ்வளவையும் செவி மடுத்த தனவந்தன் அந்தக் குதிரை யிலேறிச் சவாரி செய்ய ஆசைக் கொண்டான். சந் தோஷத்தால் ஓடி வந்து, தாவிப் பிடித்து ஏற முயன்றான். அவன் திரேகத்தின் பலங் குன்றி சக்தி யற்று, ஏற முடி யாமல் கீழே தொப்பென்று விழுந்தான். கை, கால்கள் நீட்ட முடக்க முடியாமல் முடம் பற்றிப் போனான். அவ னுக்குக் கைக் கெட்டியது வாய்க் கெட்டாது போயிற்று.

அதனால் அவனுக்குண்டான மனோவேதனை சொல்லுந் தரமன்று. தன்னுடைய தவற்றை யுணர்ந்து வருந்தினன். ஆண்டவர்களைக் கூவி அழுது புரண்டான். தனது

ஆட்கள் மூலம் அந்தக் குதிரையுடன் காணிக்கையாகச் சில பொருள்களையும் அனுப்பி, தன்னை ரட்சிக்கும்படி வேண்டினுன். அந்த மூவரும் ஆண்டவர்கள் முன்னிலையில் வந்து காணிக்கைகளை வைத்து பாதத்தடியில் பட்ட மரம் போல் வீழ்ந்து தெண்டனிட்டனர். குதிரையை ஒப்படைத்து, தனவந்தனுடைய நிலைமையைக் கூறி, மன்னித்தருளும்படி முறையிட்டுக் கொண்டனர். ஆண்டவர்கள் அக்காணிக்கைப் பொருள்களை ஸையிது இஸ்மாயீல் வசம் ஒப்படைத்து, 'புகரு'க்களுக்கும், மற்றவர்களுக்கும் விருந்தளித்தார்கள். உடன் ஒரு 'கிளாஸ்' தண்ணீரில் ஓதி ஊதி கொடுத்து, "இதை அவனுக்குக் குடிப்பாட்டுங்கள்; ஆண்டவனது உதவி கொண்டு சுகம் பெறுவான்" என்று கூறி அனுப்பினுர்கள். அங்ஙனமே அந்த தனவந்தன் தண்ணீரைக் குடிக்கவே, கை கால் பிடிப்புகள் நீங்கி சுகமடைந்தான். அவன் நேரே ஆண்டவர்களிடம் ஓடி வந்து மன்னிப்பும் பெற்றுத் திரும்பினுன்.

24வது அத்தியாயம்

பற் கொம்பு மரமானது.

[இது ஆண்டவர்கள் தனது 'மிஸ்வாக்' கை ஊன்றவே அது மரமானதும், தனது 'மௌத்து'க் குறிகுறியாக அதன் கிளைகளில் ஒன்று காய்ந்து விடுமென்றும், தன்னை இவ்விடத்திலேயே அடக்க வேண்டுமென்றுஞ் சொல்லிய வரலாற்றைக் கூறுகின்றது]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் பக்த சிஷ்யர்கள் கூட்டத்துடனும் ஸையிது இஸ்மாயீ

லுடைய புத்திரர்களுடனும் வாழ்ந்து வருங் காலத்தில், ஒரு நாள் தனது 'மிஸ்வாக்'காகிய பற்கொம்பை மகலத்துக்குச் சற்று தூரத்தே ஓரிடத்தில் ஊன்றினார்கள். காய்ந்துலர்ந்த அந்த பற்கொம்பு பசுமைப் பூண்டு, பச்சென்று தழைத்து, மரமாகி ஓங்கி வளர்ந்து நின்றது. இவ்வற்புதத்தைக் கண்டோர் பேராச்சரிய முற்றனர்.

ஆண்டவர்கள் இஸ்மாயீலை மட்டும் தனியாக அழைத்து, "மகனே! எனக்குரிய இடம் இது தான். நான் எங்குச் சென்று 'மௌத்'தானாலும் சரி, என் ஜடலத்தை இங்கே கொண்டு வந்து, இந்த மரத்தடியில் தான் அடக்கஞ் செய்ய வேண்டும். நீர் குடும்ப சகிதம் இங்கேயே குடி யிரும். இங்குள்ள பள்ளிக்கு நீரும் உமது சந்ததிகளும் பரிபாலனஞ் செய்யும் 'முதவல்லி'களாக இருங்கள். மகனே! என் 'மௌத்து'க் கடையாளம், இம் மரத்தின் கிளைகளில் ஒன்று காய்ந்து, பட்டுப் போகும். எந்த திசையின் கிளை காய்ந்திருக்குமோ அந்தத் திசையின் பக்கந்தான் நான் 'மௌத்'தாகி இருப்பேன்," என்பதாக 'வஸிய்யத்'துச் செய்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு அதை விட்டுப் பிரயாணமாக முற்பட்டார்கள். அவ்வமயம் ஸையிது இஸ்மாயீலையழைத்து, "மகனே! 'தக்வா'வைப் பற்றிப் பிடித்துக் கொள்வீராக! தனித்து 'கல்வத்'திலிருப்பதை வழமையாக்கிக் கொள்வீராக! அங்ஙன மிருக்குங் காலத்தில் 'திக்ரு' 'பிக்ரு' அளவில் பராக்காகுவீராக!" என்பதாய் உபதேசஞ் செய்தார்கள். மீண்டும் ஸையிது இஸ்மாயீலிடம், "மகனே! உமது தந்தையும் எமது குருநாதருமான ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி) அவர்களைக் கனவில் கண்டேன்; அவர்கள் 'அல்லாஹுத் – தஆலா' நாடியிருக்கின்ற இடத்துக் கேகும்படி எனக்கு சமிக்ஞை செய்

தார்கள். ஆகவே நான் பிரயாணப்பட வேண்டும்,'' என்பதாகக் கூறினார்கள்.

25வது அத்தியாயம்.

* கோவில் கதவடைப்பு.

[இது ஆண்டவர்கள் மன்னார்குடியில் கோவில் தோப்பில் விடுதி யிட்டிருந்த சமயம் கோவில் கதவு தானாகவே மூடிக் கொண்டதும், திறக்க முடியா திருந்த கதவைத் திறந்து கொடுத்த அற்புதத்தை யுஞ் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மறு நாள் பிரயாணப்பட ஆயத்தமானார்கள். சில 'புகரு'க் களை ஸையிது இஸ்மாயிலுடன் கூடவே இருக்கும்படி உத்திரவு செய்து விட்டு, ஆண்டவர்கள் அனைவரிடமும் விடைப்பெற்றுக் கொண்டார்கள். ஸையிது கமாலுத்தீன் சகிதம் சிஷ்யர்கள் கூட்டம் புடை சூழ அவர்கள் பிர யாணப் பட்டார்கள். அவர்கள் பல விடங்களில் தங்கி மன்னார்குடி போய்ச் சேர்ந்தார்கள். அன்று அஸ்தமன மானபடியால் அன்றிரவு தங்க இடந்தேடினார்கள். அங்கு ஒரு தோட்ட மிருந்தது; அதற்கப்பால் ஒரு கோவிலுங் காணப்பட்டது. அந்தத் தோட்டத்தில் விடுதி யிட்டு அன்று மாலை ஆகாராதிகளை முடித்துக் கொண்டு, அன் றிரவை அங்கேயே கழித்தார்கள். அப்போது பூசாரி அங்குக் காணப்பட்ட கோவில் கதவைப் பூட்டிக் கொண்டு சென்று விட்டார்.

மறு நாள் வழக்கம் போல் பூசாரி வந்து, கோவில் கதவைத் திறப்பதற்குச் சாவியைப் பூட்டு வாயலில் நுழைத்துத் திருப்பினார். சாவித் திரும்ப வில்லை; பூட்டுந் திறக்கப் படவில்லை. எத்தனையோ பலசாலிகளைக் கொண்டு வந்து முயன்றும் பூட்டைத் திறக்க முடிய வில்லை. கோவிலுக்குள் நுழைந்து பூஜை பண்ணுவதற் காக வந்த ஜனத்திரள் வெளியே காத்து நின்றது. கோவில் கதவு அடைப் பட்டிருக்கிறது; திறக்க முடிய வில்லை என்ற சமாச்சாரம் காட்டுத் தீ போல் எங்கும் பரவிற்று. ஊரே திரண்டு வந்து கோவில் வாயலில் நின்றது.

திரண்டு குழுவிய ஜனங்கள் எல்லோரும் சுவாமிக்கு நம்மீது கோபம் போலிருக்கிறது; அதனால் தான் கதவு திறக்கப்படவில்லை, என்பதாகச் சொல்லி, கோவிலுக் கெதிரே நின்றனர். தீப தூபங்க ளிட்டனர்; அர்ச்சனை கள் புரிந்தனர். கை கூப்பி சாஷ்டாங்கமாய் விழுந்து கும் பிட்டனர். "எங்கள் தெய்வமே! எங்களை மன்னித்து, கத வைத் திறக்க வேண்டும்!!" என்று கெஞ்சினர். குவித்த கை குவித்தாற்போல் கீழே விழுந்து விழுந்து எழுந்தனர். கன்னங்களில் மாறி மாறி அறைந்து கொண்டனர். "தெய்வமே! தெய்வமே!! எங்களைக் காத்து ரக்ஷிக்க வேண்டும்!!!" என்று கதறினர். கதவு திறக்கப்படவில்லை. மந்திர தந்திரங்க ளெல்லாம் செய்து பார்த்தும் பலிக்க வில்லை. பிறகு ஆங்குக் கூடியவர்கள் அனைவரும் ஆலோசனைச் செய்தனர். அவரவருக்கும் தோன்றிய வற்றைக் கூறினர். அவ்வமயம் கோவில் பூசாரி கீழ் வருமாறு கூறினார்.

"மகா ஜனங்களே! நான் கண்டவற்றைக் கூறு கிறேன். சற்று செவி மடுத்து, ஆலோசனைச் செய்யுமாறு கோருகிறேன். நமது கோவில் தோப்பில் நேற்று மாலை

சிஷ்யர்கள் கூட்டத்துடன் ஓர் இஸ்லாமிய சந்நியாசி வந்து விடுதி யிட்டுத் தங்கி யிருக்கிறார். அவர் ஆகாரம் அருந்தி கொண்டிருக்கையில், நான் கோவிலுக்குள் ளிருந்து வெளியே வந்தேன். ஒரு மின்னலொளி கோவில் கதவுகளுக் கிடையே ஊடுருவிப் பாய்ந்தது. படீரென கதவுகள் மூடிக் கொண்டன. காற்றின் வேகத்தால் கதவுகள் மூடிக் கொண்டதாகக் கருதினேன். வழக்கம் போல் பூட்டிக் கொண்டு போய் விட்டேன். இன்று காலை எப்பொழுதும் போல் திறவு கோலை பூட்டின் வாயலில் நுழைத்துத் திறந்தேன்; திறக்க முடிய வில்லை. நமது தோப்பிலிருக்கும் அந்த மஹானால் ஒருகால் கதவைத் திறக்க முடியலாம். அன்னாரை யடுத்து நமது முறைப் பாட்டைத் தெரிவித்துப் பரிகாரந் தேட வேண்டும்; உங்க ளெல்லோருக்கும் இது சம்மதந்தானா?'' என்றார் கோவில் பூசாரி.

பூசாரியின் அபிப்பிராயத்தை அந்த ஜனத் திரள் அங்கீகரித்து, அனைவரும் ஆண்டவர்களிடம் திரண்டு சென்றனர். அப்போது, தோட்டத்தின் ஓரிடத்தில் ஆண்டவர்கள் கண்களை மூடி தியானத்தி லமர்ந்திருந் தார்கள். அங்குச் சென்ற கூட்டத்தினர் ஆண்டவர்கள் முன்னால் காணிக்கைகளை வைத்து, தாழ்மையுடன் தங் களது வேண்டுகோளை முறையிட்டுக் கொண்டார்கள். ''பெரியீர்! தாங்கள் தான் திறந்து தர வேண்டும்'' என் றும் மன்றாடினார்கள். அப்போது ஆண்டவர்கள், தாங்கள் அவ்விடம் விட்டுப் பிரயாண மாகும் வரையில் அவர்களை ஏறிட்டுப் பார்க்கவே இல்லை. அவர்களும் அவர்களை விட்டு நகரவு மில்லை. ஆண்டவர்கள் தாங்கள் விடுதி யிட்டிருந்த தோட்டத்தை விட்டுப் புறப்பட்டு நடக்க ஆரம்பித்தார்கள். ஜனங்களும் அவர்களைப் பின் தொடர்ந்து, கெஞ்சிக் கொண்டே சென்றனர்.

அந்தக் கூட்டம் பின் தொடர்ந்து கெஞ்சிக்கொண்டு வருவதைக் கண்ட ஆண்டவர்கள் இரக்க முற்றவர்களாய், அக்கோவில் பூசாரி யிடத்திலிருந்து கோவில் சாவியை வாங்கும்படி, ஸையிது கமாலுத்தீனை ஏவினார்கள். பூசாரி திறவு கோலை அவர்கள் வசம் சமர்ப்பித்தார். ஸையிது கமாலுத்தீன் அதைப் பெற்று ஆண்டவர்களிடம் கொடுத்தார். அந்த சாவியில் துப்பும்படி ஸையிது கமாலுத்தீனை ஆண்டவர்கள் ஏவினார்கள். அங்ஙனமே ஸையிது கமாலுத்தீன் எச்சிலை உமிழ்ந்தார். பிறகு அந்த சாவியை ஆண்டவர்கள் பூசாரி யிடங் கொடுத்து, "எடுத்துச் செல்வாயாக! மூன்று நாட்களுக்குப் பின் அக்கோவிலைத் திறப்பாயாக! அது திறந்து கொள்ளும்!" என்பதாய்க் கூறிச் சென்றார்கள். அங்ஙனமே அக்கூட்டத்தினரும் பூசாரியுந் திரண்டு சென்று மூன்று நாளைக்குப் பிறகு, கோவில் கதவைத் திறந்து பழைய வழக்கம் போல் பூஜை முதலியவைகளை நடத்தி வந்தனர்.

---

* மன்னார்குடி கோவில் தோப்பில் ஆண்டவர்கள் தங்கி யிருக்கும் காலம் வரையில், விக்கிரகப் பூஜை நிரம்பிய அக்கோவில் கதவு அடை பட்டிருக்க வேண்டு மென்பது ஆண்டவனது நாட்டம் போலும்! இறைவனது அருள் மயமான ஆண்டவர்களின் அற்புதப் பிரகாசம் அக்கதவுகளின் பூட்டு வாயலில் ஸ்தம்பித்துப் பூட்டிக் கொண்ட தென்பது இதன் கருத்து.

26வது அத்தியாயம்.

நாகூருக்குச் சென்றது.

[இது ஆண்டவர்களது வருகையைப் பற்றி ஷாஹுல் ஹமீது (ரலி) நாயக மவர்கள் யூஸுப் சாஹிபுக் கறிவித்ததையும், தறுகா' கதவு தானகத் திறக்கப்பட்டு, உட்சென்று சம்பாஷித்ததையுங் கூறுகின்றது.

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள், ஹஜ்ரத் ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) நாயக மவர்களின் 'வபாத்'தைத் தெரிந்து, மன்னார்குடி யிலிருந்து நாகூருக்குப் புறப் பட்டார்கள். ஆண்டவர்கள் நாகூருக்கு வருவதற்கு முன், ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் ஒரு நாள் 'முஷாஹதா'வி லிருந்தார்கள். அது சமயம் தனது தந்தையாகிய ஸையிதின ஷாஹுல் ஹமீது பாது ஷாஹ் (ரலி) ஆண்டவர்கள் தங்கள் மகனருக்குப் பிர சன்னமாகிக் காட்சி யளித்தார்கள்.

"மகனே! என் * சகோதரர் † ஹகீம் காஜா ஷைகு அலாஉத்தீன் ஹுஸனீ உமக்குத் தந்தை முறையிலுள்ள

---

* கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன் (ரலி) நாயககம் அவர் களுக்கு 27 ஆண் மக்கள் உண்டு. அவர்களுள் ஸையிது அப்துல் வஹ்ஹாப் என்பவர்களின் கோத்திரத்திலுள்ளவர்கள்தான் ஸையி தின காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள். அப்துல் ரஜ்ஜாக் என்பவர்களின் சந்ததியிலுதித்தவர்கள்தான் ஸையிதின ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) ஆண்டவர்கள். ஆகவே இரு வர்களது தந்தையும் சகோதரர்களாகையால் ஒருவருக்கொருவர் சகோதர முறையிலுள்ளவர்கள்.

† காஜா ஆண்டவர்கள் வைத்தியம் செய்து வந்த காரணத் தால் 'ஹகீம்' என்ற காரணப்பெயரோடு அழைக்கப்பட்டார்கள்.

வர். அன்னார் என்னை தரிசிப்பதற்கு வருகின்றார். இன்னின்ன லட்சணங்களை யுடையவர். அன்னவரை வர வேற்று உபசரிப்பீராக! அன்னவரைக் கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்வீராக! அன்னார் மீது எனது வாடையே வீசுவதைக் காண்பீர்! அன்னார் கூறும் உபதேசத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வீராக!'' என்பதாய் 'முஷாஹதா'விலிருந்த மகனாருக்கு பாதுஷாஹ் நாயக மவர்கள் தோற்றரவாகி மொழிந்துள்ளார்கள்.

'முஷாஹதா'வில் தந்தையின் உபதேசத்தைக் கேட்ட மகனார் ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள், காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது வருகையை எதிர்பார்த்தவர்களாக இருந்தார்கள். காஜா ஆண்டவர்கள் பல ஊர்களுக்குச் சென்று, மேலே நாகூருக்கு வந்தார்கள். பிறகு, குத்புல் அக்தாபு ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) நாயக மவர்களுடைய 'ஜியாரத்' தெனும் தரிசனத்துக் காகவே ஒரு பகல் நாகூருக்குச் சென்றார்கள். காஜா ஆண்டவர்கள் 'தறுகா' எல்லைக்குள் நுழைந்ததும், பாதுஷாஹ் நாயக மவர்கள் முன்னறிக்கைச் செய்த 'ஹகீம்' காஜா ஷைகு அலாவுத்தீன் ஹஸனீ (ரலி) இவர்கள் தானென்று, ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் முன்பாகச் சென்று, ஸலாம் கூறி, அவர்களை வரவேற்று, கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்தார்கள். தமது தந்தை ஸையிதினா ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) நாயக மவர்களது வாடை அவர்களது தேகத்தில் வீசுவதையும் நுகர்ந்து ஆனந்த மானார்கள்.

காஜா ஆண்டவர்கள் 'றவுலா – ஷரீபு'க்கு முன்பாகச் சென்று, ''அஸ்ஸலாமு அலைக்கும் யா அகி!'' என்று

ஸலாம் பகர்ந்து, சில வினாடிகள் நேரம் கண்களை மூடி, கை கட்டி நின்றார்கள். சற்று நேரத்துக்குள் பூட்டப் பட்டிருந்த 'றவுலா – ஷரீப்' கதவு தானாகவே படீரெனத் திறந்து கொண்டது. காஜா ஆண்டவர்கள் 'றவுலா'வி னுட் சென்றார்கள். மீண்டும் கதவு தானாகவே மூடிக் கொண்டது. உள்ளே இருவரும் சம்பாஷிக்கும் சப் தத்தை ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர் கள் கேட்டார்கள். நீண்ட நேரத்துக்குப் பின் கதவு திறக்கப்பட்டது. காஜா ஆண்டவர்கள் வெளியே வந்த தும் கதவு மீண்டும் தானாகவே மூடிக்கொண்டது.

ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர் களை காஜா ஆண்டவர்கள் நெற்றியில் முத்த மிட்டு, தன் னருகே அமரச் செய்து, "மகனே! உமது தந்தை 'உபாத்' தாகி விட்டார்களென்று நீர் கவலைப் படாதீர்! ஒரு பொழுதும் நீர் கை விடப்பட மாட்டீர்! இறுதி வரை நீர் உமது சந்ததிகளுடன் இங்கேயே குடி யிருப்பீராக! ‡ ஒரு பொன்னரிசிக் கொரு வீதம் விற்ற போதிலும் நீரும் உமது சந்ததியாரும் ஒரு பொழுதும் பட்டினியாகக் கிடக்க மாட்டீர்கள். உங்களுக்குரிய இரணம் நினையா பொருட் டால் உங்களுக்குக் கிடைக்கவேசெய்யும். ஆகவே, மகனே! நீர் இதை விட்டு வேறெங்கும் போக வேண்டாம்," என்ப தாய் ஆறுதல் கூறினார்கள். ஆத்மார்த்தமான அந்தரங்க 'இல்மு'கள் சிலதையும் போதித்தார்கள். ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிபைக் கட்டித் தழுவி, காஜா ஆண்டவர்கள் இறுதியாகப் பயண விடைப் பெற்றுக் கொண்டு மேலை நாகூருக்குப் புறப்பட்டார்கள்.

---

‡ காஜா ஆண்டவர்களின் இந்த உபதேசத்தைக் கவனிக்கும் போழ்து, நாகூர் புராணம், பஞ்ச மாற்றிய படலத்தின் "வருகெழு மெறும்பி னீட்டம்......" என்னும் 31ம் கவியினையும், "உற்றவை யனைத்து நாதர்......" என்னும் 32ம் கவியினையும்,

[நாகூர் மௌல்வி ஸையிது றஹ்மத்துல்லாஹ் அலிம் சாஹிப் காதரீ மர்ஹூம் அவர்கள், காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது தந்தையின் சகோதரர் ஸைய்யிது முஹம்மது அவர்களின் சந்ததியில் தோன்றியவர்கள். அன்னார் மேற் கூறியவாறு சொல்லியுள்ளார்கள் என்பதைக் கேள்வி பட்டிருக்கிறேன். அதற்குரிய ஆதாரமிருப்பதாயும், அன்னாரின் 'மௌத்து'க்குப் பிறகு குடும்பத்தில் விவகார மேற்பட்டிருப்பதன் காரணமாய் அதைப் பெறுவது அசாத்திய மென்றும் அக்குடும்பத்திலுள்ளவர்கள் கூறுகின்றனர்.]

[காஜா ஆண்டவர்கள் நாகூருக்குச் சென்ற விஷயமாய் 'மௌலிது - கித்தாபி'ல் கீழ்வருமாறு காணப்படுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மன்னார்குடி விட்டுப் புறப்பட்டு, பல ஊர்களுக்குச் சென்று, மேலே நாகூருக்குப் போனார்கள். ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது (ரலி) ஆண்டவர்களுடைய 'ஜியாரத்'துக்காகவே ஒரு பகல் நாகூருக்குச் சென்றார்கள். அது சமயம் ஸைய்யிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் 'தறுகா'வின் வாயலண்டை நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைச் சந்தித்து, 'தறுகா - ஷரீபி'ன் கதவைத் திறக்கும்படியும், உட்சென்று 'ஜியாரத்'துச் செய்ய வேண்டு மென்றுங் கேட்டார்கள்.

"எண்ணிலா வுறவி யீட்டமிலங்கு பொற் பணமும் வெண்மை வண்ண வாளரியும் ....." என்னும் 33ம் கவியினையும் ஞாபக மூட்டுகிறது.

"நான் தங்களை அறியக்கூட வில்லையே! இனி 'மக்ரிபு' நேரத்தில்தான் கதவு திறப்பது வழக்கம்" என்று ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள். காஜா ஆண்டவர்கள் 'றவுலா – ஷரீபு'க்கு முன்பாகச் சில விநாடிகள் நேரம் கண்களை மூடி, கை கட்டி நின்றார்கள். கதவு படீரென்று தானாகவே திறந்து கொண்டது. காஜா ஆண்டவர்கள் உட்சென்றார்கள். மீண்டும் கதவு தானாகவே மூடிக் கொண்டது ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் அதிசயித்து, வாயலுக்குச் சமீபமாகச் சென்றார்கள்; இருவர் சம்பாஷிக்கும் சப்தத்தைக் கேட்டார்கள். கொஞ்ச நேரத்துக்குப்பின் கதவு திறக்கப் பட்டது. காஜா ஆண்டவர்கள் வெளி வந்து, கதவை இழுத்து மூடி விட்டுப் போய் விட்டார்கள். விளக் கேற்றுவதற்காக, வழக்கம் போல் 'மக்ரிபு' நேரத்தில் கதவைத் திறக்கப் பூட்டு வாயலுள் திறவுகோலை நுழைத்துத் திருப்பினார்கள். திறவுகோல் திரும்பவில்லை; கதவும் திறக்கப்பட வில்லை. எங்ஙனம் விளக் கேற்றுவது? என்பதாய் ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் மனங் குழப்ப மெடுத்தவர்களாய் திகைத்து நின்றார்கள். அவ்வமயம், "யூஸுப் சாஹிபே! ஹகீம் ஷைகு அலாஉத்தீன் எனது தோழர். அன்னாரிடஞ் சென்று, உத்திரவு பெற்றுக் கதவைத் திறப்பீராக!" என்பதாய் 'றவுலா – ஷரீபு'க்குள்ளிருந்து சப்தம் வந்தது.

உத்திரவுப் பிரகாரமே ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் மேலே நாகூருக்குச் சென்றார்கள். இவர்களது வருகையைக் கண்ட ஆண்டவர்கள் புன்னகையுடன் "யூஸுப் சாஹிபே! வாரும். நான் இங்கு தங்கியிருக்குங் காலம் வரையில் ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது (ரலி) அவர்கள் திறவுகோலை என்

னிடம் ஒப்படைத்திருக்கிறுர்கள்,'' என்று கூறினுர்கள். ''சாவியைத் தாரும்'' என்றுக் கேட்டு வாங்கி, திரும்ப அவர்கள் கையில் கொடுத்து, ''சென்று கதவைத் திறப்பீராக!'' என்பதாய் காஜா ஆண்டவர்கள் கூறினுர்கள். ஸையிது முஹம்மது யூஸுப் சாஹிப் (ரலி) அவர்கள் காஜா ஆண்டவர்களுக்கு ஸலாம் பகர்ந்து, விடைப் பெற்றுச் சென்று, 'றவுலா — ஷரீபி'ன் கதவைத் திறந்து வழக்கம் போல் விளக்கேற்றினுர்கள், என்பதே.

27வது அத்தியாயம்.

'அசா'வால் ஆறு பிளந்தது.

[இது ஆண்டவர்கள் 'அசா'வை நீட்டவே ஆறு இரண்டாகப் பிளந்து வழி விட்டதைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மேலே நாகூரிலே சில நாட்கள் தங்கி யிருந்து, அதை விட்டுப் புறப்பட்டு நெடுந்தூரப் பிரயாணத்துக்குப் பின், ஓர் காட்டாறு குறுக்கிட்டது. அவ்வாற்றில் வெள்ளம் கரை புரண்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வெள்ளம் திடுகூறுய் ஏற்பட்டதால் போக்கு வரத்துக்குள்ள சாதனங்களில்லே. அக்கரையில் சில வழிப் போக்கர்கள் ஆற்றைக் கடக்க வகையற்று நின்று கொண்டிருந்தனர். இக்கரையில் ஆண்டவர்கள் சிஷ்யர்கள் கூட்டத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். வெள்ளம் வடிவதாகவு மில்லே.

ஆண்டவர்கள் அவ்வாற்றில் 'வலூ'ச் செய்து இரு 'றக்அத்து' 'நபில்' தொழுது கீழ் வருமாறு தண்ணீரை நோக்கிக் கூறினர்கள். "ஏ 'அல்லாஹ்'வின் படைப்பே! அவனுடைய படைப்புகளை ஏன் தடுத்து வைத்திருக் கிருய்? நீயோ வயிறு நிரம்பி, பசியற்றிருக்கிருய். அவர் களோ வயிறு ஒட்டி, பசித்தவர்களா யிருக்கிருர்கள். நீயோ வேகமுடன் ஓடிக் கொண்டிருக்கிருய் அவர்களோ திகைப்புடன் நின்று கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு வழி விடுவாயாக!" என்பதாகச் சொல்லி, கரத்திலுள்ள 'அசா'வை அவ்வாற்றைச் சுட்டி நீட்டினர்கள்.

அக்ஷணமே ஆறு இரண்டாகப் பிளந்தது. நீரோட் டம் தடை பட்டது. தண்ணீர் சுருண்டெழுந்து இரு புறமும் சுவறு போல் பாதை விட்டு எழும்பி நின்றது. ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு நீலாறு எங்ஙனம் பிளந்து வழி விட்டதோ அங்ஙனமே ஆற்றின் மத்தியில் பாதை உண்டாயிற்று. சீடர்களை அவ்வழியே சீக்கிரம் நடந்து செல்லும்படி உத்திர விட்டார்கள். சிஷ்யர்கள் கூட்டம் ஆற்றைக் கடந்து முன் செல்ல, ஆண்டவர்கள் அவர்களுக்குப் பின்னல் சென்று அக்கரை சேர்ந்தார்கள். அவ்விடத்தில் காத்துக் கொண்டிருந்த வழிப் போக்கர் களையும் போகும்படி ஏவினர்கள். அவர்களும் கரை சேர்ந்ததும், ஆறு முன் போல் குமுறிக் கொண்டு கரை புரண்டோடிற்று. ஆண்டவர்கள் அங்கிருந்து 'புகரு'க் கள் சகிதம் கோலார் போய்ச் சேர்ந்தார்கள்.

—

28வது அத்தியாயம்.

புகை ரதம் இறங்கியது.

[இது ஆண்டவர்கள் தனது பாத ரட்சையை வீசி எறிந்து, ஆகாயத்தில் சென்றபுகை ரதத்தை இழுத்து வரச்செய் ததைக் கூறுகின்றது]

காஜா ஷைகு அலாஉத்தின் (ரலி) ஆண்டவர்கள் ஒரு நாள் 'வலூ'ச் செய்துகொண்டிருக்கும்பொழுது, தமக் கெதிரே ஓர் நிழல் செல்வதைக் கண்டு ஆகாயத்தின் பக்கம் பார்த்தார்கள். ஓர் புகை ரதத்தில் ஒருவர் வெகு உயரத் தில் பறந்து சென்று கொண்டிருந்ததைக் கண்டார்கள். உடனே தாங்கள் பூண்டிருந்த பாதரட்சையைக் கழற்றி ஆகாயத்தில் வீசி எறிந்தார்கள், அப்பாத ரட்சை சிட்டுக் குருவி போல் பறந்து சென்று, புகை ரதம் நகர்ந்து செல்ல விடாமல், அதைக் கீழே இழுத்து வந்தது. அந்த ரதத்திற் பறந்து சென்றவர் ஓர் சாதாரண மிதியடி தன்னை இரதத் துடன் கீழே இறங்கச் செய்ததைப் பற்றி பேராச்சரிய முற்று, புகை ரதத்தை விட்டுங் கீழே குதித்து ஆண்ட வர்கள் முன்னிலையில் கை கட்டி நின்றார்.

அப்போது ஆண்டவர்கள்; "ஏ மனிதனே! நீ இஸ்லா மாகுவதில் என்ன தடை? ஊழியூழி கால மெல்லாம் நரக நெருப்பில் கிடந்து வேதனை யடைவதில் நின்றும் நீ ஈடேற்றம் பெறுவாய். 'கலிமா'ச் சொல்லி இஸ்லாத்தி லாகு!" என்று கூறினார்கள், அம்மனிதன் அதற்கு எவ் வித மறு மொழியும் கூறாமல் சம்மதித்து, ஆண்டவர்களு டைய கரத்தைப் பிடித்து, 'ஷஹாதத்—கலிமா'ச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினார்.

உடனே ஆண்டவர்கள், அவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து, இஸ்லாத்தின் போதனைகளைப் போதித்தார்கள். பிறகு இஜ்ஜத் ஷாஹ் என்ற தனது சீடரிடத்தில் அன்னவரை ஒப்படைத்து, "அவர் செல்லும் இடங்களுக் கெல்லாம் நீரும் உடன் செல்வீராக! அவருக்கு இஸ்லாம் மார்க்கத்தின் சட்ட திட்டங்களை நல்ல விதமாகக் கற்றுக் கொடுப்பீராக!" என்பதாய் உத்திர விட்டு, இருவரையும் புகை ரதத்தில் ஏற்றி ஆசீர்வதித்துப் பயண மனுப்பினார்கள். இருவரும் ஆண்டவர்களிடம் விடைப் பெற்று ஆகாய மார்க்கத்தில் சென்றுவிட்டனர்.

29வது அத்தியாயம்.

* எருது உயிர் பெற்றது.

[இது சிஷ்யர்களால் அறுத்துண்ணப்பட்ட எருதை ஆண்டவர்கள் உயிர்ப்பித்தெழுப்பியதைச் சொல்லுகின்றது.]

ஃபாஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களுடன் சுற்றித் திரிந்த 'புகரு'க்களுக்கு ஒரு தடவை கடுமையான பசி ஏற்பட்டது: பசியைத் தணிப்பதற்கு அவர்களிடம் ஒன்று மில்லாதிருந்தது. பல விடங்களிலும் சுற்றித் தேடினார்கள்; ஒன்றுங் கிடைக்க வில்லை. பசியின் கொடுமை அவர்களை வாட்டியது அது சமயம்

---

* இந்த அத்தியாயம் ஷாஹுல ஹமீது (ரலி) ஆண்டவர்கள், தென்காசியில் இடப முயிர் பெறச் செய்த வரலாற்றையும், "திருக்காரணப் புராண"த்தின் எருதாவி பெறு படலம் 22 முதல் 31-வது வரையுள்ள செய்யுட்களையும் ஞாபக மூட்டுகிறது.

கொஞ்ச தூரத்துக் கப்பால் ஓர் எருது மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்ட 'புகரு'க்கள் அதைப் பிடித்துக் கொண்டு வந்து, அறுத்துச் சமைத்து, பசி தீர புசித்தார்கள்.

மாட்டுக் குரியவன் பல விடங்களிலும் தேடி யலேந்தான்; கிடைக்க வில்லை. கடைசியாக 'புகரு'க்கள் அறுத்துச் சமைத்துச் சாப்பிட்ட சமாச்சாரம் பிரஸ்தாபமானது. அதை மாட்டுக்குச் சொந்தக்காரன் கேள்விப்பட்டு நேரே ஆண்டவர்களிடஞ் சென்று முறையிட்டுக் கொண்டான். ஆண்டவர்கள் 'புகரு'க்களைக் கூப்பிட்டு கண்டித்தார்கள். உடனே அந்த மாட்டினுடைய எலும்புகளைக் கொண்டு வரும்படி ஏவினார்கள்.

'புகரு'க்கள் இறைச்சியை சாப்பிட்டு விட்டு, அதன் எலும்புகளை ஓரிடத்தில் போட்டு வைத்திருந்தனர். அவைகளை அள்ளிக் கொணர்ந்து ஆண்டவர்கள் சமுகத்தில் குவித்தார்கள். ஆண்டவர்கள் அந்த எலும்புக் குவியல் மீது தங்களது 'அசா'வைக் கொண்டு, "அல்லாஹ்' வுடைய உத்திரவு கொண்டு எழுந்திரு," என்றடித்தார்கள். அடி விழுந்த மாத்திரத்தில் அறுத்துத் தின்னப்பட்ட அந்த எருது, முடங்கி யொடுங்கிக் கிடப்பதைப் போல் எழுந்து நின்றது. அதைச் சொந்தக்காரனிடத்தில் ஒப்படைத்து, போகும்படி அனுப்பினார்கள்.

—

30வது அத்தியாயம்.

இராஜபுத்திரர்கள் இஸ்லாமானது.

[இது ஆண்டவர்கள் சூரியனை மூன்று நாட்கள் வெளிவராது செய்து காரிருள் சூழ்ந்ததையும், இராஜபுத்திரர்கள் இஸ்லாமானதையுங் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஒரு நாள் காற்றுக்காகத் தனித்து வெளியே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அக்கம் பக்கத்தில் இராஜபுத்திரர்கள் என்று சொல்லக் கூடிய ஒரு ஜாதியினர் வசித்து வந்தனர். அன்று சூரிய வெப்பம் கொடுமையாக இருந்தது. சூரிய வெளிச்சமும் அன்று கண்களை மழுங்கச் செய்யக் கூடியதாக இருந்தது. அது சமயம் அந்த இராஜபுத்திரர்களுடைய ஒரு குழந்தை பயந்தோடி வந்து ஆண்டவர்களை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டது. அவர்களும் அக்குழந்தையைத் தழுவி அணைத்துக் கொண்டார்கள்.

முஸ்லிம் என்றாலோ இராஜபுத்திரர்களுக்குச் சொல்ல வேண்டுமா? முஸ்லிம்களை விரோதிகளாகவே பாவிக்கும் சுபாவமுடையவர்கள். அப்படிப் பட்டவர்கள், தமது குழந்தை முஸ்லிமிடம் அபயந் தேடிக் கட்டித் தழுவுவதை சகிப்பார்களா? தமது குழந்தை ஆண்டவர்களைத் தாவிப் பற்றிக் கொண்டிருந்ததைக் கண்ட அவர்கள் குதித்துச் சென்று, அக்குழந்தையை அவர்களை விட்டும் வம்பாகப் பிடுங்கிக் கொண்டார்கள். குழந்தையும் வீரிட்டலறிற்று.

இராஜபுத்திரர்களது குரோத மனப்பான்மை, ஆண்டவர்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணிற்று. உடனே

ஆண்டவர்கள் சூரியனின் பக்கம் பார்த்து, "ஏ கதிரவனே! இப்பக்கம் மூன்று நாட்களுக்கு உனது விரிகதிரை வீசா திருப்பாயாக! இருளடையச் செய்வாயாக!" என்பதாய் உத்திர விட்டார்கள். மேகங்கள் திரண்டு கூடின; காரிருள் சூழ்ந்தது; சூரியனும் மறைந்தது. எங்கு நோக்கினும் ஒரே இருள்; எங்கு பார்த்திடினும், அந்த காரம். ஒருவர் முகம் மற்றவர்களுக்குத் தெரியவே இல்லை; ஒருவரோடொருவர் மோதிக் கொண்டனர். 'கியாமம்'– இறுதி நாள் அடுத்து விட்டது போல் தோன்றிற்று. இக்காட்சியைப் பார்க்கும் போது, ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய அற்புதமாகிய 'முஃஜிஸா'வின் காரண மாய், பிர்ஔனுடையக் கூட்டத்தார் எங்ஙனம் காரிரு ளில் கஷ்டப்பட்டார்களோ, அங்ஙனமே இராஜபுத்திரர் களும் கஷ்டப்படுங் காட்சியாகத் தோன்றியது.

பிறகு அவர்கள் தங்களுடைய தவறுக்காக ஆண்ட வர்களிடம் மன்னிப்புத் தேடி அலறினார்கள். தங்களை ரட்சித்து அபய மளிக்கும்படி மன்றாடினார்கள். ஆண்ட வர்கள் மனமிரங்கி, சூரியனைப் பார்த்து வெளியே வரும் படி விரலால் சமிக்ஞை செய்தார்கள். உடனே காரிருள் நீங்கி, கார் மேகங்கள் கலைந்து, கதிரவன் முழுப் பிர காசத்துடன் தோன்றினான். இராஜபுத்திரர்கள் அனை வரும் ஆண்டவர்களுடைய கரத்தைப் பிடித்து, 'தௌபா'ச் செய்து, தூய 'கலிமா'ச் சொல்லி, 'தீனுல்–இஸ்லாத்' திலாகி முஸ்லிமானார்கள்.

31வது அத்தியாயம்.

குஷ்டம் தீர்ந்தது.

[இது ஆண்டவர்கள் இறுதி வரை பாலா பூரிலேயே தங்கி யிருந்ததையும், குஷ்டம் பற்றிய பெண்ணை குணப் படுத்தியதையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் பல ஊர்களைச் சுற்றிக் கொண்டு, இறுதியாக ஐக்கிய மாகாணத்தில், தமது தந்தை ஸையிது மஷ்ஹூருத்தின் அவர்கள் பிறந்த ஊராகிய பாலாபூருக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு, ஸையிது கமாலுத்தீனை யழைத்து, "மகனே! நீர் இவ்விடத்தையே தரிபடும் இடமாக்கிக் கொள்ளும்," என்பதாகக் கூறினார்கள். சிஷ்யர்கள் கூட்டத்தை யழைத்து, "தோழர்களே! நான் இந்த பூமியைத் தெரிந் தெடுத்துள்ளேன். தாங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்", என்பதாய்த் தெரிவித்துக் கொண்டார்கள். 'புகரு'க்கள் பலர் ஆண்டவர்களுடைய உத்திரவு பெற்று நாலா பக்கங்களுக்குச் சென்றனர். ஆண்டவர்கள் ஒரு தனி இடத்தை, தனக் கென்ருக்கி 'திக்ரு' 'பிக்ரு' அளவிலும் 'முஷாஹதா' 'முருகபா'வின் பராக்கிலும் சதா ஆழ்ந்திருந்தார்கள்.

ஒரு நாள் ஒரு மனிதன் ஆண்டவர்களின் முன்னிலையில் கை கட்டிக் காத்து நின்ருர். அப்போது ஆண்டவர்கள், "நீர் யார்? எங்கு வந்தீர்?" என்று வினவினார்கள். அதற்கு அந்த மனிதர், "மன்பதைகளைக் காத்து ரட்சிக்கும் எஜமானே! நான் இவ்வூர் தலைமைக்காரன். எனக்கொரு மகளுண்டு. அவள் குஷ்டம் பற்றி ரோகியாக

வீட்டிலிருந்து வருகிறுள். எல்லா வித வைத்தியங்கள் செய்தும் குணமடைய வில்லை. தேவரீரின் மகத்துவங் கேட்டு, தாங்களே தஞ்ச மென வந்திருக்கிறேன். தேவரீராகிய உங்களின் திருவருளே அருமருந்தென நம்பி வந்துள்ளேன். எஜமானவர்களே! தமியேன் மீது இரக்கம் வைத்து என் மகளின் கன்ம நோயைப் பற்றறத் தீர்த்து ரட்சித்தருள வேண்டும்,'' என்பதாய் மன்ருடி, அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் நின்ருன்.

அவரின் வேண்டுதலைக் கேட்ட ஆண்டவர்கள் மன மிளகித் தன்னிட முள்ள கூஜா தண்ணீரை எடுத்து அதில் ஓதி ஊதி, அம்மனிதனிடங் கொடுத்து, ''இத்தண்ணீரை உமது மகளுக்குப் புகட்டும்; சுக மடைவாள்,'' என்பதாய்க் கூறினர்கள். அவ்வாறே அத்தலைவன் தண்ணீரைப் பெற்றுச் சென்று, தன் மகளுக்குக் குடிப்பாட்டினர். அவள் குடித்துப் பூரண சுகம் பெற்ருள். பிறகு, அவ்வூர் தலைவன் ஆண்டவர்களிடம் வந்து, மகள் சுகம் பெற்ற சமாச்சாரத்தை சந்தோஷத்துடன் தெரிவித்து, அவர்களுக்குக் காணிக்கையாகத் தனக்குச் சொந்தமான இரு கிராமங்களை சன்மான மளித்து, அவைகளை ஏற்றுக் கொள்ளும்படி மன்ருடி நின்ருர். ஆண்டவர்கள் கமாலுத்தீனைக் கூப்பிட்டு, அவைகளை ஒப்புக் கொள்ளும்படி உத்திர விட்டார்கள். அவ்விதமே கமாலுத்தீன் ஒப்புக் கொண்டு அனுபவித்து வந்தார்கள்.

32வது அத்தியாயம்.

'வபாத்து'.

[இது ஆண்டவர்கள் 'வபாத்'தெனும் சிரி யாணமாகி ஆண்டவனளவில் சேர்ந்ததைக் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஸையிது கமாலுத்தீனைக் கூப்பிட்டு, நபிகள் நாயகம் ஸையிதினா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களது 'சுன்னத்'தைப் பின்பற்றி விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி உபதேசம் புரிந்து கட்டாயப் படுத்தினார்கள். அவர்களுக்குச் சந்ததிக ளுண்டாகும்படி 'துஆ'வுஞ் செய்தார்கள்.

ஒரு நாள் ஆண்டவர்கள் ஸையிது கமாலுத்தீனை யழைத்துக்கொண்டு ஆற்றுக்குச் சென்று 'வலூ'ச்செய்து, குளித்தார்கள். பிறகு வீடு திரும்பி வெண்மையான புத்தாடை யணிந்து, நறுமணம்பூசி அறைக்குட் புகுந்தார்கள். உடனே ஸையிது கமாலுத்தீனைக் கூப்பிட்டு, "மகனே! எனக்கு 'மௌத்து' முடுகி விட்டது. எனது அடக்கத்துக்குள்ள ஏற்பாட்டைச் செய்வீராக! நீர் 'தக்வா'வைப் பற்றிப் பிடித்துக்கொள்வீராக! நீர் எப்பொழுதும் தனித்திருப்பீராக! 'திக்ரு' 'பிக்ரு'களில் பராக்கா யிருப்பீராக!" என்று உபதேசித்து 'வஸிய்யத்'தும் கூறினார்கள். பின்பு திரை யிட்டுக் கொண்டு தனித்தார்கள்.

ஆண்டவர்கள் தமது 'மௌத்'தை எதிர்பார்த்தவர்களா யிருக்கிறார்கள் என்ற சமாச்சாரம் சீடர்களிடத்தும் ஊரார்களிடத்தும் காட்டுத்தீப் போல் பரவிற்று.

'புகரு'க்கள் விரைந்தோடி அறையைச் சூழ்ந்து நின்றனர். இல்லம் முழுதும் ஜனத்திரள் கூடி யிருந்தது. சிலர் 'தக்பீர்' சொல்லிக் கொண்டிருந்தனர். ஆண்டவர்கள் 'கலிமா'ச் சொல்லிக் கொண்டே கண்களை மூடி, 'கலிமா' விரலை உயர்த்தினார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பின் திரையை உயர்த்திப் பார்த்தபோது, ஆண்டவர்கள் ஆண்டவனின் பக்கம் 'உசூல'ானவர்களாய் *'வபாத்'தாகி இருந்தார்கள். "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்."

ஸையிது கமாலுத்தீனும் 'புகரு'க்களும் பசு விழந்த கன்று போல் பதைப் பதைத்தனர்; அழுது சலித்தனர்; துக்கசாகரத்தில் மூழ்கினர். ஆண்டவர்களுடைய 'வபாத்து' அக்கம் பக்கத்துக் கிராமங்களுக் கெல்லாம் பரவி, ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்து தரிசித்தனர். பாலாபூரே துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஆண்டவர்கள் 'வபாத்'தான இடத்திலேயே 'கப்ரு' தோண்டினார்கள். ஸையிது கமாலுத்தீனே ஆண்டவர்களைக் குளிப்பாட்டி, 'கபன்' இட்டு, தொழுவித்தார்கள். திரளான ஜனங்கள் கூடி நின்று தொழுதார்கள். பின்பு 'கப்ரு'க்குள் ஆண்டவர்களின் பரிசுத்த உடலை வைத்து அடக்கஞ் செய்தார்கள்.

---

* ஆண்டவர்களின் பாலாபூர் 'வபாத்'தைப் பற்றிய கால முறைகள் அறியப்பட வில்லை. பின் கிடைக்குமாயின், 'இன்ஷா - அல்லாஹ்', மறு பதிப்பில் வெளியிடப்படும்.

33வது அத்தியாயம்.

இஸ்மாயீல் கனவு கண்டது.

[இது ஆண்டவர்களது 'வபாத்'தைப் பற்றி ஸையிது இஸ்மாயீல் கனவு கண்டு, 'கப்ரை'த் தேடிச் செல்வதைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'வபாத்'தான அன்றிரவு, ஸையிது இஸ்மாயீல் துயில் செய்து கொண்டிருக்கும்போது ஓர் கனவு கண்டார்கள். அதாவது: சம்பூர்ண சூரிய கிரகணம் ஏற்பட்டு உலகமே இருளடைந்து விட்டதாக சொர்ப்பனங் கண்டு, பதைத்துப் பதறி விழித்து, 'பஜ்ரு' தொழுது, நேரே 'மிஸ்வாக்' மரத்தை நோக்கி ஓடினார்கள். முன் ஆண்டவர்கள் அறிவித்தபடி, விருட்சத்தின் கொம்பு காய்ந்துபோய் இருப்பதைக்கண்டார்கள். கண்டதும் உள்ளம் வாடி அழுது புலம்பி, எங்குச் சந்திப்பேன்? என்றலறினார்கள். நிட்சயமாக ஆண்டவர்கள் இக லோகத்தைத் துறந்து பரலோகத்துக்குச்சென்றுவிட்டார்கள் என்றறிந்தார்கள். ஆண்டவர்கள் தனக்குச்செய்த 'வஸிய்யத்து' ஞாபகத்துக்கு வந்தது. வந்ததும், "எங்கு 'வபாத்' தானார்கள் என்றறியேனே! எங்குச் சென்று விசாரிப்பேன்? யாரிடத்தில் கேட்பேன்? ஆண்டவர்களுக்கு யான் கொடுத்த வாக்கை நிறைவேற்றாத பாவியானேனே!" என்பதாய்ப் புலம்பி பிரலாபித்தார்கள். எவ்விடத்திலிருந்தாகிலும் சமாச்சாரம் வராதா? எவரும் விஷயந் தெரிவிக்க மாட்டார்களா? என்று பலநாட்கள் எதிர்பார்த்து நின்றார்கள். எங்கிருந்தும் எந்த சமாச்சாரமும் வரவில்லை. இவ்விதம் சில காலங்கள் கழிந்தன.

கழிந்த சில காலத்துக்குப் பின், ஸைபிது இஸ்மாயீல் மனைவி மக்களிடம் விடைப் பெற்று, 'ஷைகு' அவர்களுடைய 'கப்ரை'த்தேடிப் புறப்பட்டார்கள். பல ஊர்கள் சுற்றித் திரிந்து பாலாபூருக்குச் சமீபமாயுள்ள ஓர் கிராமத்தில் வந்து தங்கினார்கள். அன்றிரவை அவ்வூரில் கழிக்க நாடி, காலையில் துயில் விட்டெழுந்ததும் பாலாபூர் அல்லாத வேறு திக்கில் செல்ல எண்ணங் கொண்டு படுத்துறங்கினார்கள். பொழுது விடிந்ததும் ஸையிது இஸ்மாயீலுக்குக் குளிர் காச்சல் ஏற்பட்டது. பயணம் தடைபட்டு, அவ்விடத்திலேயே நான்கு நாட்கள் தங்கும்படி ஏற்பட்டு விட்டது.

34வது அத்தியாயம்.

சகோதரர்கள் சந்தித்தது.

[இது ஸையிது இஸ்மாயீலை சந்திக்கும்படி ஆண்டவர்கள் ஸையிது கமாலுத்தீனுக்கு அறிவித்ததையும், இரு சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட சந்திப்பையும் கூறுகின்றது.]

ஸையிது இஸ்மாயீல் நோய் வாய்ப்பட்ட அன்றிரவு ஸையிது கமாலுத்தீன் ஒரு கனவு கண்டார்கள். அதாவது: "சம்பூர்ண சூரிய கிரகணம் உண்டாகி உலகம் இருளடைந்து விட்டதாய் ஸையிது இஸ்மாயீல் சொர்ப்பனங்கண்டு, நான் 'வபாத்'தானதையறிந்து, என் 'கப்ரை'த் தேடியலைகிறார். இன்ன இடத்தில் ஜுரங் கண்டு படுத்திருக்கிறார். இக்கணமே நேரே சென்று அவரைச் சந்தித்து

அழைத்து வருவீராக!" என்பதாய் ஆண்டவர்கள் கனவில் தோன்றி அறிவிக்கக் கண்டு, பொழுது புலர்ந்ததும் ஸையிது கமாலுத்தீன் ஒரு கடிதம் வரைந்து, அதை ஒரு ஆசாமி வசம் கொடுத்தனுப்பினார்கள். அதைப் பெற்றுச் சென்ற மனிதர் குறிப்பிட்ட இடத்திற்கு அக்கடிதத்தைக் கொண்டு போய் சமர்ப்பித்தார்.

குறிப்பிட்ட இடத்தில் தங்கி இருக்கும் ஸையிது இஸ்மாயீல் ஆவலுடன் அந்த லிகிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்து, தனது சகோதரருடையக் கடிதம் இதுவெனத் தெரிந்து சந்தோஷ மானார்கள். தான் கண்ட கனவின் விபரம் அதில் எழுதப் பட்டிருப்பதைப் பார்த்து ஆச்சரிய முற்றார்கள். மேலும் அக்கடிதத்தில், "என் அன்புக் குரிய சகோதரரே! நீர் உண்மையில் உடற் பிறப்பாக இருப்பீரேல் உமது பெயரென்ன? உமது தந்தையார்? நீர் எங்குப் பிறந்தீர்? சுணக்க மின்றி வரைவீராக!" என்பதாய் சந்தேகத்தை நிவர்த்திச் செய்து கொள்ள ஸையிது கமாலுத்தீன் எழுதிக் கேட்டிருந்தார்கள்.

அதற்கு பதிலாக, "என் பிரியமுள்ள உடற் பிறப்பான சகோதரரே! என் பெயர் ஸையிது இஸ்மாயீல். என் தந்தையின் திரு நாமம் ஸையிது முஹம்மது தாஹிர் பல்கீ (ரலி). நான் பிறந்தது பல்கு இராஜ்யம்." என்பதாய்க் கடித மொன்றெழுதி அந்த மனிதரிடமே கொடுத்தனுப்பினார்கள். அந்த பதிலை பெற்றுக் கொண்ட ஸையிது கமாலுத்தீன் படித்துப் பார்த்து சந்தோஷமடைந்து, தனது சகோதரரைச் சந்திக்க அந்த சமயமே புறப்பட்டு வந்தார்கள். சகோதரரின் வருகையை ஆவலுடன் எதிர் நோக்கி நின்றார் ஸையிது இஸ்மாயீல். ஸையிது கமாலுத்தீன் வந்ததும், இருவரும் ஒருவரோடொருவர் கட்டித் தழுவிக் கலக்கந் தீர்ந்தார்கள். ஸையிது கமாலுத்தீன், தங்களது குருநாதர் அவர்கள் பாலாபூரிலேயே

'வபாத்'தான விஷயம் பற்றி ஸையிது இஸ்மாயீலிடம் அறிவித்தார்கள். தாம் வேறு இடங்களுக்குச் சென்று தேடியலேயாதபடி தனக்கு ஜுரமேற்பட்டுப் பிரயாணம் தடைபட்டதை யுணர்ந்த ஸையிது இஸ்மாயீல் இறைவனுக்கு அடிபணிந்து நன்றி செலுத்தினர். பிறகு இருவரும் ஆண்டவர்களது 'கப்ரை' நாடிச் சென்றனர்.

35வது அத்தியாயம்.

'கப்ரு'விலிருந்து உத்திரவு பிறந்தது.

[இது இரு சகோதரர்களுடைய முறைப் பாட்டுக்கும் ஆண்டவர்கள் உத்திர வளித்த வரலாற்றைச் சொல்லுகின்றது.]

ஸையிது இஸ்மாயீல், காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது 'கப்ரு–ஷரீபு'க்குச் சென்று, 'ஜியாரத்'தெனும் தரிசனம் புரிந்தார்கள். பிறகு, ஸையிது கமாலுத்தீனை விளித்து ஸையிது இஸ்மாயீல் கூறுகிருர்கள்: "என் பிரியமுள்ள சகோதர! நமது 'ஷைகு' அவர்கள் 'மிஸ்வாக்' கை ஊன்றினதும், அது மரமானதும் தாங்கள் அறிந்ததே. அந்த இடத்தைச் சுட்டிக் காண்பித்து, நான் எங்குச் சென்று 'மௌத்'தானலும் என் ஜடலத்தைக் கொண்டு வந்து, அந்த மரத்தடியில் தான் அடக்கஞ் செய்ய வேண்டும் என்பதாய் 'ஷைகு' அவர்கள் தங்களது ஜீவிய காலத்திலேயே எனக்கு உத்திரவு செய்திருக்கிருர்கள். ஆகவே பரிசுத்த தேகத்தை நான் எடுத்துச் செல்ல அனுமதி யளிப்பீர்களாக!" என்பதாய் விண்ணப்பித்துக்

கொண்டார்கள். அதற்கு ஸையிது கமாலுத்தீன், "அன்புள்ள என் சகோதர! நீர் சொல்வது நிரம்ப சரி. 'மிஸ்வாக்' மரமானது உண்மைதான். ஆரம்ப முதல் இறுதி வரையில் நான் 'ஷைகு' அவர்கள் கூடவே இருந்து வந்திருக்கிறேன். என்னிடத்தில் எத்தனையோ விஷயங்களைக் கூறி யிருக்கிறார்கள். ஆனால், நீர் பகரும் இந்த ஒரு விஷயத்தைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தைக் கூட சொன்னது கிடையாதே! ஆகையால் 'கப்ரு ஷரீபை'த் தோண்டி, பரிசுத்த தேகத்தை எடுத்துச் செல்ல நான் ஒரு பொழுதும் சம்மதிக்க மாட்டேன்" என்று மறுத்து விட்டார்கள். இது விஷயம் பற்றி இரு சகோதரர்களுக்கிடையே வாக்கு வாதங்கள் ஏற்பட்டன. அதனால் இருவருக் கிடையே எத்தகைய முடிவும் ஏற்பட வில்லை.

பிறகு ஒரு மத்தியஸ்தரிடஞ் சென்றாகிலும் நமது விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வோம் என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். உடனே அவ்வூர் அதிகாரி யிடஞ் சென்று தங்களது முறைப்பாட்டைத் தெரிவித்துக் கொண்டனர். அவ்வதிகாரி இருவருடைய வாய்மொழிகளையுங் கேட்டு, "அந்த மஹான் விஷயத்தில் தீர்ப்புக் கூற நான் கிஞ்சிற்றேனும் அருகனல்லன். ஆனால், நான் ஒன்று கூறுகிறேன்; அது சம்மதமானால் செய்யுங்கள். மஹான் அவர்களுடைய 'றவுலா – ஷரீபி'ன் சந்நிதானத்துக்குச் செல்லுங்கள். உங்கள் நாட்டங்களை தெரிவியுங்கள். அவர்கள் எந்த வழியிலாகிலும் உங்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப் போதுமானவர்கள். அவர்கள் இடும் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்," என்பதாய் ஆலோசனைக் கூறினார்.

அவ்வதிகாரி கூறியதைக் கேட்ட இருவரும், இதுவே சிறந்த யோசனை என்பதாய் சம்மதித்தார்கள். ஆண்ட

வர்களுடைய 'றவுலா – ஷரீபு'க்கு இருவரும் சென்றார்கள். ஜனங்களும் திரண்டு அவர்களுக்குப் பின் சென்றனர். ஸையிது கமாலுத்தீன் 'றவுலா – ஷரீபு'க்கு முன்னால் 'அதபு'டன் நின்று, "அஸ்ஸலாமு அலைக்கும் யா ஸையிதீ! ஸையிது இஸ்மாயீல் தங்களைக் கொண்டு போக நாடுகிறார்; தங்களது உத்திரவை எதிர்பார்க்கிறேன்," என்பதாய்த் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டார்கள். "வ அலைக்குமுஸ்ஸலாம் யா வலதீ! நீர் கவலைப்படாதீர். உம்முடைய இடத்தில் நீர் தரிபட்டிரும். அவருடைய நாட்டத்துக்கு நான் தயாராக இருக்கிறேன்; தடை செய்யாதீர்," என்பதாய் எல்லோரும் கேட்கும்படி 'கப்ரு'க்குள்ளிருந்து சப்தம் வந்தது. பிறகு ஸையிது இஸ்மாயீல் 'றவுலா – ஷரீபு'க்கு முன்பாக கைகட்டி, பேணுதலாக நின்று, "அஸ்ஸலாமு அலைக்கும் யா ஸையிதீ! தங்களின் 'வஸிய்யத்'தை நிறைவேற்ற நாடுகிறேன். உத்திரவளியுங்கள்," என்பதாய் முறையிட்டுக் கொண்டார்கள். "வ அலைக்குமுஸ்ஸலாம் யா வலதீ! உமக்கு ஏவப்பட்ட கருமத்தில் நீர் ஸ்திரமாக இரும்," என்ற பதில் அவருக்கும் வந்தது. கூடியிருந்த ஜனங்கள் அனைவரும் கேட்டு பேராச்சரிய முற்றனர். "ஆண்டவனுடைய பாதையில் உயிர் நீத்தவர்களை மரணித்தவர்கள் என்று கூறுதீர்கள்; அவர்கள் ஜீவனுள்ளவர்கள். ஆண்டவன் பக்கமிருந்து அவர்களுக்கு இரணம் அளிக்கப் படுகின்றது," என்பதாய் 'அல்லாஹுத் – தஆலா' குர்ஆன் – ஷரீபில் கூறிய தேவ வாக்குப் பொய்யாகுமோ? என்று கூறி, ஆண்டவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர். ஸையிது இஸ்மாயீல் ஆண்டவர்களின் பரிசுத்த உடலை எடுத்துச் செல்ல பிரயத்தனஞ் செய்தார்கள்.

36வது அத்தியாயம்

‘கப்ரை’த் தோண்டியது.

[இது ஆண்டவர்களது ‘கப்ரை’த் தோண்டி, பரிசுத்த தேகத்தை எடுத்துச் சென்றதைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களுடைய ‘கப்ரை’த் தோண்டி, அவர்களது பரிசுத்த தேகத்தை எடுத்துச் செல்லப் போகிறார்கள், என்ற சமாச்சாரம் நாலு பக்கங்களிலும் பரவியது. அதிக தூரத்திலிருந்தெல்லாம் ஆண்டவர்களை தரிசிக்கவும் அதிசயத்தைப் பார்க்கவும் ஜனங்கள் திரள் திரளாக பாலாபூர் வந்து கூடினார்கள். எல்லோரும் சூழ்ந்து நின்று ‘கப்ரை’த் தோண்டினார்கள். இத்துணை காலமாகியும் ஜடலம் அன்று வைக்கப்பட்டதைப் போல் காணப்பட்டது. ‘கபன்’ புடவையில் கூட மண் பிடிக்காமல் புத்தப் புதிதாகவே இருந்தது. முகத்தில் வியர்வை பூத்திருந்தது. அம்பர் வாடையுங் கஸ்தூரி மணமும் ஒருசேர கமழ்ந்து கொண்டிருந்தது.

இந்த அற்புதத்தைக் கண்ட ஜனங்கள் பேராச்சரியமடைந்தனர். இயற்கைவாதிகளுங் குதர்க்கவாதிகளுங்கூட அதிசயப்பட்டனர். ‘ஔலியா’க்கள் ஜீவனுள்ளவர்கள்; அவர்களுக்கு மரண மென்பதே கிடையாது. ஓர் இல்லத்திலிருந்து மறு இல்லத்துக் கேகுவது போல், இவ்வுலகை விட்டு மறைவது தான் அவர்களுக்கு ‘மௌத்’தாகும். அவர்கள் மறைந்திடினும் பேசும் சக்தியையும் கேட்கும் தத்துவத்தையும் ஆண்டவன் அன்னவர்களுக்கு அளித்துள்ளான் எனும் உண்மையை நிரூபிக்கும் காட்சியாகக்

காணப்பட்டது. அங்கு வந்து கூடிய எல்லோரும் ஆண்டவர்களைத் தரிசித்த பின் அந்தப் பரிசுத்த தேகம் ஓர் பெட்டியில் வைக்கப்பட்டு, 'புகரு'க்கள் தோள்கள் மீது சுமந்து சென்றனர். ஸையிது கமாலுத்தீன் தனது கூட்டத்தாருடன் கொஞ்ச தூரம் வரையில் சென்று, வழியனுப்பி வைத்தார்கள்.

37வது அத்தியாயம்.

குருடும் பைத்தியமும் நீங்கியது.

[இது ஆண்டவர்களது கால் விரலிலிருந்து இரத்தம் பீரிட்டடித்து இராஜன் குருடானதும், இராணி பைத்தியங் கொண்டதும், பிறகு இருவரும் சுகம் பெற்றதுமான வரலாற்றைக் கூறுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது பரிசுத்த ஜடலம் வைக்கப்பட்ட பெட்டியை 'புகரு'க்கள் சுமந்து கொண்டு ஆறு, மலை, மடு, வனந்திரம் முதலியவற்றைக் கடந்து, தஞ்சாவூர் எல்லையைச் சேர்ந்தனர். எல்லைப்புறத்துச் சேவகர்கள் அப்பெட்டியை எடுத்துச் செல்ல அனுமதியளிக்க வில்லை. ஏதோ புதையல் பொருட்களைத் திருட்டுத் தனமாகக் கொண்டு போவதாய்க் கருதினார்கள். அந்தப் பெட்டியைப் பிரித்துக் காண்பிக்காத வரையில் அனுமதி கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டார்கள். "இந்தப் பெட்டியில் ஓர் மகானின் பரிசுத்த தேக மிருக்கிறது. அடக்கஞ் செய்வதற்காக அதிவீரராம பட்டணத்துக்கு எடுத்துச் செல்லுகிறோம்; தடை

செய்ய வேண்டாம்,'' என்று 'புகரு'க்கள் கேட்டுக்கொண்டார்கள். சேவகர்களுக்கு மேலும் அவர்கட் பேரில் சந்தேகம் அதிகரித்தது; கண்காணிப்பும் பலமாக இருந்தது. ஓர் கொள்ளைக் கூட்டத்தார் ஒரு பிரேதத்தைப் பெட்டிக்குள் ஒளித்து வைத்துக் கொண்டு நமது எல்லைக்குள் புகுந்து செல்ல முற்படுகிறார்கள் என்ற சமாச்சாரத்தை அவ்வூர் அரசனுக் கறிவித்தார்கள்.

அரசன் தனது அமைச்சர்களுள் ஒருவரை எல்லைப் புறத்துக் கனுப்பி, விசாரணைச் செய்யும்படி ஆக்ஞாபித்தான். உடனே பெட்டிக்குள் ளிருப்பதைத் திறந்து காட்டும்படி மந்திரி வற்புறுத்தவே, இருதரப்பாருக்கும் வாக்கு வாத மூண்டது. இறுதியாக இரு பக்கத்து ஆசாமிகளும் வாட்களை உருவிக் கொண்டு போர் புரிய ஆயத்தமாகி விட்டனர். இவ்விஷயம் அரசனுக் கெட்டியது. அக்கணமே அரசன் அங்கு அரசி சகிதம் பரிவாரத்துடன் புறப்பட்டு வந்து, போர் புரிவதை நிறுத்தி சமாதானங் கூறினான்.

ஸையிது இஸ்மாயீலிடம் ஆதி யோடந்தமாக விஷயங்களை அரசன் கேட்டுத் தெரிந்து கொண்டான். "ஓ முஸ்லிம்களே! உங்களில் இறந்த 'ஔலியா'க்கள் ஜீவனுள்ளவர்கள்; ஆண்டவன் பக்க மிருந்து அவர்களுக்கு இரணம் அளிக்கப் படுகிறது என்பதாய் உங்கள் 'மௌல்வி'கள் பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். நாகூர் மீரான் சுல்தான் ஷாஹூல் ஹமீது ஆண்டவர்கள் புரிந்த பல அற்புதாதி காரணங்களைக் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்த மஹான் கல்லறைக் குள்ளிருந்தும் உத்திரவு செய்ததாகக் கூறுகிறீர்கள். நீங்கள் கல்லறையில் நின்றும் சப்தத்தைக் கேட்டது உண்மையாயின், பெட்டியைத் திறக்க ஏன் தயங்குகிறீர்கள்? 'ஔலியா'க்

களுடைய சரீரம் ஒரு பொழுதும் கெடாது. எங்ஙனம் நித்திய உலகில் ஜீவனோடிருப்பார்களோ அங்ஙனமே அநித்திய உலகிலும் ஜீவனோடிருப்பார்கள்,'' என்பதாய் பல மேற்கோள்களுடன் ஆதார பூர்வமாக *அரசன் பேசினான்.

அதற்கு ஒருவாறு ஸைய்யிது இஸ்மாயீல் முதல் மற்ற 'புகறு'க்களும் சம்மதித்து, பெட்டியைத் திறந்தார்கள். பெட்டிக்குள் கற்பூர வாடையும் ரோஜா மணமும் கமகம வென்று வீசிற்று. ஆண்டவர்களின் 'கபன்' புதிதாகவும் வெண்மையாகவு மிருந்தது. அவர்கள் உடம்பின் வாசனை நாசிகளைத் துளைத்துச் சென்றது. அனைவரும் மயக்க மெடுத்து, திகைத்து நின்றனர். பிறகு எல்லோருந் தெளிவு பெற்று, பேராச்சரியத்துடன் பார்த்து நின்றனர். 'கபனை'த் திறக்கும்படி அரசன் பணிவுடன் வேண்டி, கால்மாட்டின் பக்கத்தில் நின்றான். அரசன் கட்டளைப்படி கட்டவிழ்க்கப்பட்டு, 'கபன்' நீக்கப்பட்டதும், ஆண்டவர்களின் முகம் ஜோதிப் பிரகாசத்தால் இலங்கிக் கொண்டிருந்தது. சோதிப்பதற்காக அரசன் சட்டெனக் குனிந்து, ஆண்டவர்களது வலது கால் பெரு விரலின் ரோமத்தைப் பிடுங்கினான். சடேரென்று இரத்தம் பீரிட்டு அரசனது முகத்தில் அடித்தது. அக்ஷணமே அரசன் பார்வையிழந்து குருடனானான்; பக்கத்திலிருந்த அரசி சித்தங் கலங்கி பைத்தியங் கொண்டாள்.

அப்போது அரசன், ''ஐயகோ! என் செய்வேன்! மதி கேட்டால் மோசம் போனனே! மஹாத்மா என்றறிந்தும் மதியீனத்தால் ரோமத்தைப் பிடுங்கினேனே! எஜமானே! அடியேனை மன்னித்து ரட்சிக்கவேண்டும். தங்களையன்றித்

---

* தஞ்சை யரசன் அக்காலை எவன்? எப்பெயருடையான்? என்றறியப்படவில்லை.

தஞ்சம் புக யாருமில்லை. தாங்களே எங்களைக் காப்பாற்றுவீர்களாக!'' என்பதாய்த் தலையிலும் முகத்திலும் அடித்துக் கொண்டு பிரலாபித்தான். அரசனது பிரலாபத்தையும் அரசியினது அலங்கோலத்தையுங் கண்டு அனைவரும் துக்கித்தனர்.

ஸையிது இஸ்மாயீல் அரசனுக்கு ஆறுதல்களைக் கூறி தேற்றினார்கள். யார் என்ன சொல்லியும் அரசன் சமாதான மடையவில்லை. கடைசியாக அரசன் 'புகரு'க்களை நோக்கி, "பகீர்களே! இந்த மஹாத்மாவை எடுத்துச் செல்லுங்கள். இவர்கள் அச்சந் தீர்ந்தவர்கள்; உண்மையானவர்கள், இவர்கள் கிருபா கடாட்சத்தால் நான் பார்வைப் பெற்று, எனது மனைவி சித்த சுவாதீன மடைந்தால், இவர்களது சமாதிக்கு மேல் ஓர் மண்டப மெழுப்பி, கட்டிடம் கட்டுவேன்; நிலங்கள் மானிய மளிப்பேன் என்பதாய் நான் நேர்ச்சை செய்துள்ளேன்; பெட்டியை எடுத்துச் சென்று அடக்கம் செய்வீர்களாக!'' என்பதாய்க் கூறினன். அரசன் சொல்லி வாய் மூடுமுன் இராஜனுடைய கண்கள் வெளிச்சமாயின; முன்போல் பார்வைப் பெற்றான். மனைவியும் சித்தந் தெளிந்து சுகம் பெற்றாள். அவர்களுக்கேற்பட்ட ஆனந்தத்துக் களவில்லை. அனைவரும் சந்தோஷமடைந்தனர்.

38வது அத்தியாயம்.

அதிவீரராமபட்டணத்தில் அடக்கியது.

[இது ஆண்டவர்களை அதிவீரராமபட்டணத்தில் அடக்கினதையும், தஞ்சாவூர் அரசன் 'தறுகா' கட்டினதையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது பரிசுத்த யாக்கை வைக்கப்பட்ட பெட்டியை அரசனது உத்திரவு பெற்று 'புகரு'க்கள் தோள் மீது சுமந்து சென்றனர். அரசன் தனது பரிவாரங்களுடனும் மந்திரி பிரதானிகளுடனும் கொஞ்ச தூரம் வரையில் சென்று வழி யனுப்பி வைத்தான். தனது அமைச்சர்களுள் ஒருவரையும் அவருக்குள்ள சிப்பந்திகளையும் கூடவே அனுப்பி, கட்டிடங் கட்ட ஆக்ஞை யிட்டான்.

'புகரு'க்கள் பெட்டியைச் சுமந்து கொண்டு அதிவீரராமபட்டணம் வந்து சேர்ந்தார்கள். ஆண்டவர்கள் முன் குறிப்பிட்ட இடத்தில் — 'மிஸ்வாக்கு' மரத்தடியில் — 'கப்ரு' தோண்டினார்கள். வாசனை 'கப்ரி'ல் நின்றும் வெளியாகி வீசிக் கொண்டிருந்தது. அந்த 'கப்ரு'க்குள் 'முபாரக்'காகிய ஆண்டவர்களின் பரிசுத்த ஜடலத்தை வைத்து * அடக்கம் செய்தார்கள். அரசனுடைய ஏவற் பிரகாரம் மந்திரி 'கப்ரு-ஷரீபு'க்கு மேலே உயர்ந்த ஓர் மண்டப மெழுப்பி, ஒரு கட்டிடமும் ஒரு 'மினரு'வும் கட்டி முடித்தான். அவர்களது 'றவுலா-ஷரீபை'ச் சேர்ந்தாற் போல் தொழுவதற்காக ஓர் 'மஸ்ஜிது'ம் நிர்மாணித்துக் கொடுத்தான். மகலம் கோட்டையையும் அதைச்

* சபர் மாதம் பிறை 10-ல் 'உருஸ்' நடை பெறுகிறது.

சேர்ந்த பூமிகளையும் காணிக்கையாக விட்டான். அரசன் உத்திரவுபடி அனைத்தும் செய்து முடித்து விட்டு, ஸைபிது இஸ்மாயீலிடம் விடைப் பெற்றுக் கொண்டு, மந்திரி தஞ்சாவூருக்குப் பிரயாணமானான்.

39வது அத்தியாயம்.

'தறுகா'வுக்கு யானை வந்த வரலாறு.

[இது தஞ்சாவூர் அரசனுக்கு இலங்கையிலிருந்து யானை வந்த பொழுது கடலில் ஓடி வந்த மரக்கலத்துக்கு அபாய மேற்படவே ஆண்டவர்கள் பொருட்டால் 'ஆபத்' தின்றிக் கரை சேர்ந்ததையும், 'தறுகா' வுக்கு யானை விடப் பட்டதையும் கூறு கின்றது.]

தஞ்சாவூர் அரசனுக்கு யானைகள் வேண்டியதாக இருந்தன. அப்போது மரக்கலத்தில் மந்திரி ஒருவனையும் சில ஆட்களையும் யானைகள் வாங்கும்படி தஞ்சை யரசன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். மரக்கலம் இலங்கைச் சென்றது. மந்திரி பதினாறு யானைகளை வாங்கி, கப்பலில் ஏற்றித் தென்னிந்திய கரையை நோக்கிப் பிரயாணப் பட்டான். சமுத்திர மத்தியில் காற்றும் புயலும் வேகமாக இருந்தது. கடலில் கொந்தளிப்புக் கண்டது. மரக்கலம் தாழ்ந்து விடக் கூடிய நிலைமையிலிருந்தது. அது சமயம் மந்திரிக்கு ஆண்டவர்களது ஞாபகம் வந்தது. உடனே, "ஆண்டவர்களே! கப்பலுக்கும் எங்களுக்கும்

எவ்வித 'ஆபத்து'மின்றிக் கரை சேர்ப்பீர்களே யானல், இதிலுள்ள பெரியதோர் யானையைக் காணிக்கையாகத் தங்கள் 'தறுகா'வில் கொண்டு வந்து விடுகிறேன். எங்களைக் காப்பாற்றி ரட்சியுங்கள்," என்பதாய் வேண்டுதல் செய்து கொண்டான். அதன் நிமித்தமாக, காற்றின் வேகங் குறைந்து புயல் நின்றது; கடலின் கொந்தளிப்பும் அடங்கியது. மரக்கலம் சிந்தா யாத்திரையாய்த் துறை முகம் வந்து சேர்ந்தது.

மந்திரி பதினறு யானைகளையும் அரசன் சமூகத்திற்கு ஓட்டிச் சென்று, கடலில் கப்பலுக்கேற்பட்ட அபாயத்தையும், தாம் நேர்ச்சை செய்து கொண்ட விபரத்தையும் சவிஸ்தாரமாகக் கூறினன். அதைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி யடைந்தவனய், அதிவீரராமபட்டணத்துக்கு மந்திரியை யனுப்பி, காணிக்கையைச் செலுத்தி வரும்படி ஏவினன். உடனே ஓர் பெரிய யானையுடன் மந்திரி அதி வீரராமபட்டணம் சென்று 'தறுகா'வுக்குப் போய், 'றவுலா – ஷரீபு'க்கு முன்னல் யானையை நிறுத்தி, ஸையிது இஸ்மாயீலிடம் நடந்தவற்றை எடுத்தோதினன். பிறகு மந்திரி, "யானை எங்கள் அரசனுக்குத் தேவை. நான் அதைத் திரும்ப ஓட்டிச் செல்லுகிறேன். அதற்குரிய கிரயம் ரூபாய் முன்னூறும் இதோ இருக்கிறது. ஒப்புக் கொண்டு, யானையை ஓட்டிச் செல்ல அனுமதி யளியுங்கள்," என்று கூறி, பணத்தைக் கொடுத்தான். ஸையிது இஸ்மாயீல் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள்.

பிறகு யானையை ஓட்டிச் செல்லும்படி மந்திரி மாவுத்தனுக்கு உத்திர விட்டான். மாவுத்தன் யானையை ஓட்டிச் செல்ல முயன்ருன். யானையோ அந்த இடத்தை விட்டும் ஓரடிக் கூட எடுத்து வைக்க வில்லை. யானைப் பாகன் தன்னலான தந்திர மெல்லாம் செய்து பார்த்தான்;

யானை நகரவே இல்லை. "ஆண்டவர்கள் இந்த விலையைப் பெற்றுக் கொள்ள பொருத்தப்பட வில்லை போலும்!" என்பதாக மந்திரி கூறி, யானையை 'தறுகா'விலேயே விட்டுச் சென்றுவிட்டான். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அந்த யானையை ஸையிது இஸ்மாயில் அவர்கள் ரூபாய் ஆயிரத்துக்கு விற்றூர்கள்.

* ஸையிது இஸ்மாயீல் அவர்கள் அதிவீரராமபட்டணத்தில் துல் – கயிதா மாதம் பிறை பத்தில் 'வபாத்'தாகி அடங்கலானூர்கள். † ஸையிது கமாலுத்தீன் அவர்கள் பாலாபூரில் 'வபாத்'தானூர்கள். 'ரலியல்லாஹுஅன் ஹுமா'.

---

* ஸையிது இஸ்மாயீல் அவர்களின் 'வபாத்து' துல்–கயிதா மீ பிறை பத்து என்று கிடைத்த ஆதார மட்டுக்கும் குறிக்கப் பட்டது. ஹிஜ்ரி ஆண்டுக்கு ஆதாரமில்லை.

† ஸையிது கமாலுத்தீன் அவர்கள் பாலாபூரில் 'வபாத்'தான கால முறைகள் அறியப்பட வில்லை. இவ்விரு விஷயங்களும் பின் கிடைக்குமாயின், (இ. அ) மறு பதிப்பில் வெளி யிடப்படும்.

காஜா ஆண்டவர்கள் 'வபாத்'தாகுந் தருணத்தில் ஸையிது கமாலுத்தீனைக் கூப்பிட்டு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது 'சுன்னத்'தைப் பின்பற்றி விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி உபதேசம் புரிந்து கட்டாயப் படுத்தினூர்கள் என்று 32-வது அத்தியாயத்தில் கூறியபடி, இது பரியந்தம் ஸையிது கமாலுத்தீன் அவர்கட்கு விவாகம் ஏற்பட்டதாகத் தெரிவதற்குப் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. அன்றி, ஆண்டவர்கள் அத் தருணத்தில் அவர்களுக்குச் சந்ததி யுண்டாகும்படி 'துஆ'வுஞ் செய்தார்கள் என்று மேற்கண்ட 32-வது 'வபாத்து' அத்தியாயத் திற் குறித்திருக்கிறபடியால், ஆண்டவர்களின் அருள் வாக்குப் பொய்க்காத வகைக்கு, ஸையிது கமாலுத்தீன் அவர்கள் ஓர் விவாக மாயினுஞ் செய்து சந்ததிகள் உண்டா யிருக்க வேண்டும் என்று அனுமானிக்க வேண்டியதா யிருக்கிறது. இவைகட் கெல்லாம் போதிய ஆதாரம் கிடைக்குமாயின், (இ. அ) மறு பதிப்பில் தெளிவாய் வெளி யிடப்படும்.

40வது அத்தியாயம்.

மண்டபம் நகர்ந்தது.

[இது நகர்த்த முடியா திருந்த கல் மண்டபத்தை ஆண்டவர்கள் நகரச் செய்ததால், அக்கல் மண்டபமே அவர்களது 'றவுலா'வின் 'குப்பா'வாக அமைக்கப்பட்ட வரலாற்றைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் அதிவீரராமபட்டணத்தில் அடக்கஞ் செய்யப்பட்ட பின், யாருங் காணுத விதமாய் அதை விட்டும் எழுந்தருளி, உலக சஞ்சாரஞ் செய்து வருங் காலத்து, மதுரையைச் சேர்ந்த கோரிப்பாளையத்துக்குச் சென்ருர்கள். அவ்வூர் வழியே அவர்கள் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒத்தைக் கல்லில் ஓர் மண்டபத்தைக் கல்தச்சர்கள் செய்து கொண்டிருந்ததைக் கண்டு, "இது என்ன? யாருக்காகச் செய்கிறீர்கள்?" என்று வினவினுர்கள். மதுரையில் ஆட்சி புரியும் *அரசன் ஓர் மாளிகை கட்டுகிருன். அதன் மத்தியில் ஓர் மண்டபம் நிர்மாணிக்கப்படப் போகிறது. அதற்காகவே ஒரே கல்லில் மண்டபம் செய்கிரும்," என்பதாய்க் கல்வெட்டுக்காரர்கள் கூறினர். அதைக் கேட்ட ஆண்டவர்கள், "இது அரசனுக் குரியதன்று; எனக் குரியது" எனக் கூறி விட்டுப் போய் விட்டார்கள்.

மண்டப வேலையும் பூர்த்தி யானது; அதை எடுத்துச் செல்ல பல ஆட்கள் முயன்றனர். ஆனுல், அவர்களால்

---

* மதுரையை ஆட்சி புரிந்த அரசன் அக்காலத்தவனுகப் பாண்டிய வம்மிசத்துத் திருமலை நாயக்கனுகவே இருத்தல் வேண்டும்.

முடியாது போயிற்று. எத்துணையோ ஆள் பேர்கள் கூடி ஆலோசனைச் செய்து அக்கல் மண்டபத்தை நகர்த்தப் பிர யத்தனப் பட்டும், ஒரு அங்குலங் கூட அது நகர வில்லை. இவ்விஷயம் அரசனுக் கறிவிக்கப்படவே, அவனும் அமைச்சர் முதலானவர்களும் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்து, அதை எடுத்தேகுவதற்குள்ள வழிகளைப் பற்றி யோசனை கள் செய்தனர். எவ்வழியிலும் கல் மண்டபத்தை நகர்த்த அறவே முடியாது போயிற்று. அரசன் விசாரணைச் செய்ய ஆரம்பித்தான். அவ்வமயந்தான் கல் தச்சர்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியின் ஞாபகம் வந்தது.

"ஓ அரசே! நாங்கள் இந்த மண்டபத்தைச் செய்து கொண்டிருந்த சமயம், இவ்வழியே சென்று கொண்டிருந்த முஸ்லிம் பெரியார் ஒருவர், இது என்ன? யாருக்காகச் செய்யப்படுகிறது? என விசாரித்தார். விபரத்தைக் கூறினோம். இக்கல் அரசனுக் குரியதல்ல; எனக் குரிய கல் என்று கூறிச் சென்றார். அப்பெரியார் ஓர் மஹா னாகவே இருக்க வேண்டும். ஒரு கால் அன்னாரைக் கொண்டு இம்மண்டபக் கல் நகரவுங் கூடும்" என்பதாய் அந்தக் கல்வெட்டுக்காரர்கள் தெரிவித்துக் கொண்டனர். இதைக் கேட்ட வேந்தன், அன்னாரைத் தேடி அழைத்து வரும்படி கட்டளை யிட்டான். கடைசியாக ஆண்டவர் கள் அவ்விடத்துக்கு மிக மரியாதையுடன் அழைத்து வரப் பட்டார்கள். மண்டபக் கல்லை மாளிகைக்கு எடுத்துச் செல்ல உதவி புரியும்படி ஆண்டவர்களிடம் வேந்தன் வேண்டி நின்றான். அவர்களும் அதற்கிணங்கி, எல்லோ ருடனும் தாமும் தமது கரத்தை அக்கல் மீது வைத்தார் கள். அது இடத்தை விட்டுப் பெயர்ந்து நகர ஆரம் பித்தது. அரசனும் ஆங்குக் கூடி யிருந்தவர்களும் பேராச்சரியப் பட்டனர். இப்பெரியார் மஹானாகவே இருத்தல் வேண்டும். இவர்கள் பிரியம் போல் இக்கல்

மண்டபத்தை இவர்களே பயன் படுத்திக் கொள்ளட்டும் என்று கருதி, "மஹாத்மாவே! இக்கல் எனக் குரிய தன்று; தங்களுக் குரித்தானதே; தாங்களே தங்கள் நோக்கம்போல் பிரயோசனப் படுத்திக்கொள்வீர்களாக!" என்பதாய் வணக்கத்துடன் கூறி, அரசன் பணிந்து சென்றான்.

சில காலத்துக்குப் பிறகு ஆண்டவர்கள் கோரிப் பாளையத்திலேயே 'வபாத்'தாகி அடங்கினார்கள். அவர் களது 'றவுலா – ஷரீபு'க்கு மேல் அந்த ஒத்தைக் கல் மண்டபமே 'குப்பா'வாக அமைக்கப் பட்டது. அந்த 'தறுகா' கட்டிடமும் மதுரை மன்னனால் நிர்மாணிக்கப் பட்டு, அவனாலேயே அநேக பூமிகளும் மான்யமாக விடப் பட்டிருக்கின்றன.

41வது அத்தியாயம்.

சந்நியாசி சுகம் பெற்றது.

[இது ஆண்டவர்கள் குஷ்டம் பற்றிய சந்நியாசியைச் சுகம் பெறச் செய்ததைக் கூறுகின்றது.]

இலங்கையைச் சேர்ந்த வலித்துறைக்கு வெகு தூரத்தில் சந்நியாசி ஒருவனிருந்தான். அவனது ஒரு கரம் குஷ்டம் பற்றி இருந்தது. அக்கொடிய நோயைப் போக்கிக் கொள்வதற்குக் காடு மலைகளுக்கெல்லாம் சென்று, தன்னைப் போலொத்த சந்நியாசிகளைக் கண்டு பரிகாரந்தேடினான். சுகமடைவதாக இல்லை. ஊரூராகச் சென்று

வைத்தியர்களிடத்திலும் மருந்துக் கலந்தான். கிடைத்தும் குணமில்லை யெனக் கண்டு மனச்சோர்வடைந்தான். இறுதியாக, பெரியார்களுடைய சமாதிகளுக்காகிலுஞ் சென்று முறை யிட்டுக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

பதினொரு ஸ்தலங்களில் ஒன்றாகிய வலித்துறையில் அடங்கி விளங்கும் காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது அற்புதாதி காரணங்களைக் கேள்வியுற்று மனத்துள் சந்தோஷமானான். நேரே வலித்துறைக்குப் புறப்பட்டு 'தறுகா'வுக்குச் சென்று, 'கப்ரு–ஷரீபு'க்கு முன்பாக அடக்க ஒடுக்கத்துடன் கை கட்டி நின்று, வணக்கத்துடன் தனது குறைகளை முறையிட்டுக் கொண்டான். சில காலம் அங்கேயே தங்கி யிருந்து ஆண்டவர்களிடம் மன்றாடினான். ஆண்டவர்கள் அவன்பால் மனமிரங்கி அவனது குஷ்டத்தைப் போக்கினார்கள். சந்நியாசி பூரண சுகம் பெற்று மகிழ்ச்சியுடன் ஊருக்குத் திரும்பினான்.

42வது அத்தியாயம்.

தென்னந் தோப்பு பாழானது.

[இது ஆண்டவர்களுக்குச் செய்த நேர்ச்சையை நிறைவேற்றாத காரணத்தால் தென்னந்தோப்பு பாழானதைச் சொல்லுகின்றது.]

ஓர் பணக்காரனுக்குச் சில தென்னந் தோப்புக்கள் இலங்கையிலிருந்தன. அவை வெகு காலம் வரை

யில் சரியாகக் காய்த்துப் பலன் கொடுக்கா மலிருந்து வந்தன. அவைகள் பூத்துக் காய்த்துப் பலன் கொடுக்குமேயானால், இன்னின்ன தோட்டத்தின் மரங்களை காஜா ஆண்டவர்களுக்குக் காணிக்கையாக விட்டு விடுவதாய் நேர்ச்சை செய்து கொண்டான். பிறகு, அவனது நாட்டமும் நிறைவேறியது. அவன் தனது வாக்கை நிறைவேற்றாமல், நமது நாட்டந்தான் நிறைவேறி விட்டதே! நேர்ச்சையை ஏன் நிவைவேற்ற வேண்டும்! என்ற எண்ணங் கொண்டு, இறுமாப்புடன் அலட்சியமாக இருந்து விட்டான்.

வருடா வருடம் தென்னை மரங்கள் நலல பலனைக் கொடுத்து வந்தன. ஒரு வருடம் தோட்டங்களி லுள்ள மரங்க ளெல்லாம் செழிப்பாகப் பாளையிட்டு, பூத்துக் குரும்பைகள் பிடித்துக் குலுங்கின. இவ்வருடம் தாம் எதிர்பார்ப்பதற்கு மேல் பலன் கிடைக்குமென இறுமாப்புக் கொண்டிருந்தான். ஒரு நாள் கோடை யிடி முழுறி அவனது தென்னந் தோப்பில் விழுந்தது. அதன் காரணமாக அவனுடைய தோட்டத்திலிருந்த பெரும்பாலான மரங்கள் பட்டுப் போயின. மீதமுள்ள மரங்களும் வாடி வதங்கி நின்றன. அவனது எண்ணங்க ளெல்லாம் பாழாயின. இது ஆண்டவர்களுடைய கோபப் பார்வையே என்பதாய் அந்த மனிதன் உணர்ந்தான். உடனே அவன் 'தறுகா'வுக்குச் சென்று, தனது குற்றத்துக்கு மன்னிப்புத் தேடி, தனது நேர்ச்சையையும் நிறைவேற்றி வைத்தான்.

43வது அத்தியாயம்.

ஆற்றில் விழுந்த கத்தி வீட்டிலிருந்தது.

[இது ஆண்டவர்கள், ஆற்றில் விழுந்த கத்தியை வீட்டில் சேர்த்ததைக் கூறுகின்றது.]

ஓர் மனிதன் இலங்கையில் ஓரிடத்திலிருந்து தனது வீட்டுக்கு ஒரு ஓடத்தில் ஆற்றின் வழியாகப் போய்க் கொண்டிருந்தான். ஓடத்திலிருந்தபடியே ஏதோ ஒரு வஸ்துவை அறுப்பதற்காக, தனது சட்டைப் பைக்குள்ளிருந்து கத்தியை எடுத்தான். அது நழுகி ஆற்றில் விழுந்துவிட்டது. உடனவன் பதைத்துத் துடித்து, அருமையான கத்தியை இழந்தேனே! என்றலறினன். அந்தக் கத்தி அபூர்வ வேலைப்பாடுள்ளதால், அதிகப் பிரீதியுடன் பத்திரமாக அதை பாது காத்து வந்தான். ஆற்றில் விழுந்த கத்தியைத் திரும்ப எடுப்பது அசாத்திய மென்றறிருந்தான். அதனுல் அவன் உள்ளம் வாடினன்.

ஆனல், அந்த மனிதன் காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் பால் அதிகப் பற்றுள்ளவன். உடனே ஆண்டவர்களை மனதில் தியானித்து, "எஜமான் ஆண்டவர்களே! தாங்கள் தான் ஆற்றில் விழுந்த கத்தியை என்னிடம் சேர்க்க வேண்டும். இது தங்களுக்கு அசாத்தியமான கருமமன்று," என்பதாய் முறையிட்டுக் கொண்டான். ஓடம் துறை போய்ச் சேர்ந்ததும் மனவாட்டத்துடன் வீட்டுக்குச் சென்றான். உள்ளே நுழைந்ததும் மனக் கவலையெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது. ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான் ஆற்றில் விழுந்த கத்தி

வீட்டின் மேஜை மீதிருக்கக் கண்டு, பேராச்சரிய முற்று ஆண்டவர்களைப் போற்றிப் புகழ்ந்தான்.

44வது அத்தியாயம்.

பெட்டி சமைந்தது.

[இது ஆண்டவர்களுடைய 'கபுர்' மீது வைப்பதற்காகச் செய்த பெட்டி சிறிய தாகப் போனதும், அது 'கபுர்' மீது வைக் கப்படவே நீண்டு சரியாகச் சமைந்ததையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் மீது பக்தி பூண்ட வலித்துறை மனித னொருவன் யாத் திரைச் சென்றிருந்தான். ஆண்டவர்களது 'கருமாத்து' களையும் மகத்துவங்களையும் கேட்டு, பெருமைக் கொண் டான். அவர்களது 'கபுர் – ஷரீபு' மீது கற்பூரப் பெட்டி யொன்று வைப்பதாக நேர்ச்சை செய்து கொண்டான்.

அந்த மனிதன் தனது எண்ணப் பிரகாரமே பலகை கள் வாங்கி அழகியதோர் பெட்டி கூட்டும்படி ஏற்பாடு செய்தான். கூட்டி முடிந்ததும் அப்பெட்டி 'கபுரு'க்குச் சற்றுச் சிறியதாகவே காணப்பட்டது. அதனால் அம்மனி தன் கவலைக் கொண்டான். உடனே அந்த மனிதன், "காரணக் கடலே! தங்களது அற்புத காரணத்தைக் கொண்டு தாங்கள் தான் இப்பெட்டியைத் தங்கள் 'கபுர்– ஷரீபு'க்குச் சரியானதாக ஆக்கித் தர வேண்டும்," என்ப தாய் நிர்ணயஞ் செய்து கொண்டான். பிறகு, அந்த

மனிதன் வலித்துறைக்கு வந்ததும் 'தறுகா'வுக்குச் சென்று, ஆண்டவர்கள் 'கபுர் - ஷரீபு' மீது அந்தப் பெட்டியை வைத்தான். அவனுக்குண்டான மகிழ்ச்சியைக் கூறுவதற்கில்லை. அளவு பிடித்து, சொல்லிச் சமைத்தது போல், கூடுதல் குறைவின்றி சரியாக அப்பெட்டி நீண்டு சமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கினான்.

45வது அத்தியாயம்.

* பார்ப்பாரூருக்கு வந்தது.

[இது ஆண்டவர்கள் பார்ப்பாரூருக்கு வந்ததையும், அவ்வூர் சிறப்பைப் பற்றியும் கூறுகின்றது.]

ஸையிதினா காஜா ஷைகு அலாஉத்தீன் ஹஸனீ சிஷ்தீ (ரலி) ஆண்டவர்கள் பல ஸ்தலங்களில் அடக்கமாகி, அற்புதமாய் அவ்விடங்களை விட்டெழும்பி, பல ஊர்களையும் சுற்றிக்கொண்டு, இறுதியாகப் பார்ப்பாரூருக்கு வந்தார்கள். அவ்வமயம் தற்போது ஆண்டவர்கள் அடங்கி யிருக்கும் இடம் ஓர் பூந்தோட்டமாக இருந்தது. ஓடம்போக்கி ஆற்றுக்கு வடபுறந்தான் பார்ப்பாரூர் என்று வழங்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் அது ஒரு சிறு ஊராக இருந்தது. முஸ்லிம் தனவந்தர்களும், வர்த்தகர்களும், மரக்கலத்தை யுடையவர்களும் க்ஷேமமாக

---

* தற்போது பாப்பாவூர் என்று மருவி வழங்குகிறது. இந்தக் கள் பாப்பாசோவில் என்று சொல்லுகிறார்கள்

வாழ்ந்து வந்தார்கள். முஸ்லிம் வட்டாரங்களாகிய 'முஹல்லா'க்களும், தொழும் 'ஜாமிஉ-மஸ்ஜிது' ஒன்றும் இருந்தன. குத்புல்—அக்த்தாபு ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) ஆண்டவர்கள் வந்து விருந்துண்டதும், தாழுந் தருவாயிலிருந்த மரக்கலத்தைக் காப்பாற்றி வரவழைத்துக் கொடுத்ததும் பழைய பார்ப் பாரூரில் தான். பொன்னி மரைக்காயர் என்ற பிரமுகர் இராஜபோகத்துடனிருந்து வந்ததும் அவ்வூரில் தான். அவரின் மனைவியாகிய தர்யா பீவீ என்ற பெண்ணின் காலத்திற்குப் பிறகு தான் அவ்வூர் மண் மாரியால் அழிந்து பாழ்பட்டது. அது சமயந்தான் காஜா ஆண்டவர்கள் அவ்வூருக்கு வந்தார்கள். அவர்களது மகிமையை அப் பொழுது அவ்வூர் ஜனங்கள் அறிந்தார்களில்லை.

40வது அத்தியாயம்.

மண் மாரி பெய்தது.

[இது கங்காணிகள் ஓர் பெண்ணை விடுதி யில் அடைத்து வைத்திருந்ததையும், பிறகு அவள் விடுவிக்கப்பட்டு ஆண்டவர்களை அடைத்து வைத்திருந்ததையும், அதனால் அவ்வூர் மண் மாரியால் அழிந்ததையும் சொல்லுகின்றது.]

அக்காலத்தில் பார்ப்பாரூரி லிருந்தவர்கள் தூர தேயக் கீழ்ப் பிரதேசங்களுடனும் இலங்கையுடனும் வியா பார சம்பந்த முடையவர்களா யிருந்து வந்தார்கள். அத் தேசங்களுக்குக் கூலியாட்கள் அதிகமாகச் சென்றுகொண் டிருந்த காரணத்தால், பார்ப்பாரூரில் கூலியாட்கள் தங்கும்

விடுதிகள் பல இருந்தன. உட்கூலியாகிய 'கமிஷனு'க்கு ஆட்கள் சேகரஞ் சைய்து கொடுக்கும் கங்காணிகளின் அக்கிரமச் செயல்கள், அம்மம்ம! சொல்லத்தர மன்று. எத்தனையோ பிள்ளைகள் தாய் தந்தைகளை விட்டுப் பிரிக்கப்பட்டனர்! எத்தனையோ புருஷர்கள் மனைவி மக்களை விட்டு அகற்றப்பட்டனர்! எத்தனையோ பெண்கள் கணவர்களையும் பாலகர்களையும் விட்டு அப்புறப் படுத்தப் பட்டனர்! அந்தப் பாதகர்களின் பாதகச் செயல்களால் பல ஏழைக் குடும்பங்கள் அழிந்தன. இத்தகைய அக்கிரமங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தான் காஜா ஆண்டவர்கள் பார்ப்பாரூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

இளம் பிராயத்தை யுடைய ஓர் ஏழை மாது பிழைப்பை நாடி பார்ப்பாரூருக்கு வேலை தேடி வந்தாள். அவள் ஒரு குழந்தையை ஈன்று சில தினங்கள் தான் ஆயின. வயிற்றுக் கொடுமையால் மகவைக் குடிசையில் அயர்ந்து தூங்கச் செய்து விட்டு, விழிப்பதற்குள் ஏதாகிலும் கூலி வேலை செய்து சம்பாதித்துக் கொண்டு போகலா மென்ற நாட்டத்துடன் வந்தாள். இதை யறிந்த கங்காணிகள் அவளுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி அழைத்துச் சென்று, விடுதிக்குள் தள்ளி அடைத்து விட்டனர். அம்மாது, பால் சுரப்பால் ஒரு புறத்தில் வேதனையும், மகவைப் பிரிந்த சோகத்தால் மறு புறத்தில் அவஸ்தையும் பட்டுக் கொண்டிருந்தாள். தனது பரிதாப நிலையைக் கூறி யழுதவளாய், தன்னை விடுதலைச் செய்யும்படி பரிந்து வேண்டினுள். அப்பாதகர்களாகிய கங்காணிகளின் கல் மனங்கள் கரைய வில்லை; அவளின் முறைப்பாட்டை அவர்கள் செவி மடுக்கவே இல்லை. கடைசியாக அந்த மாது தெய்வமே துணை என்ற நம்பிக்கையுடன், தனது துன்பத்தைக் கூறி அலறினுள். மேலும்

தெய்வத்தினிடம் முறையிட்டுத் தன்னைக் காப்பாற்றும் படியும்அழுது வேண்டினாள்.

"அனாதையின் கண்ணீர் வீணாகுமோ?" "ஏழையின் கண்ணீர் கூரிய வாளன்றோ?" "அரசன் அன்று கேட்டால் ஆண்டவன் நின்று கேட்க மாட்டானோ?" என்று முன்னோர்கள் சொல்லி வைத்த அருள் வாக்குப் பொய்க்காத வாறு, காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் அந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஒரு பெண்ணின் பரிதாபக் கூப்பாட்டை ஆண்டவர்கள் கேட்டார்கள். அது இக்கட்டில் சிக்கிய ஒருவளின் குரலாக இருந்தது. 'ஆபத்'தில் அகப்பட்டவளை விடுவிப்பதற்காகவே ஆண்டவர்கள் விஜயமானார்கள். அந்த மங்கையின் பரிதாபக் காட்சியை ஆண்டவர்கள் கண்ணுற்று மனமிரங்கினார்கள். அவளை விடுவித்து வீட்டுக் கனுப்பும்படி அக்கங்காணிகளிடம் அவர்கள் பரிந்து பேசினார்கள். அந்தக் கொடும் பாவிகள் அதையும் கேட்டார்களில்லை. அந்தப் பாவிகள் தங்களுக்கிடையே ஓர் முடிவுக்கு வந்தனர். அவளோ பெண் பிள்ளை. அவளைப் போகச் செய்து விட்டாலும், அவளுக்குப் பகரமாக இந்த மனிதரை யாகிலும் கப்பல் வருமளவும் அடைத்து வைத்திருந்து, கப்பல் வந்ததும் மற்ற கூலியாட்களுடன் சேர்த்தனுப்பி விடலாம் என்ற எண்ணங் கொண்டனர். உடனே அப்பாதகர்கள், "ஓய் பரிந்து பேசுபவரே! நீர் சொல்வது போல் அவளை விடுவித்தனுப்பி விடுகிறோம். அவள் திரும்பி வருமளவும் அவளுக்குப் பிணையாக அந்த விடத்தில் நீர் இருப்பீரா?" என்பதாய் ஆண்டவர்களைக் கேட்டனர்.

"கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" என்ற ஆன்றோர் வாக்குப்படி, ஆண்டவர்களது மகிமை

யறியாத அந்தக் கெடுவார் தமக்குத் தாமே படுகுழி தோண்டிக் கொண்டனர். காஜா ஆண்டகை யவர்கள் அந்தக் கங்காணிகளின் நிபந்தனைக்கு உடன் பட்டு, அந்த மாதை விடுவித்து, தாம் விடுதிக்குட் சென்று உட்கார்ந்து கொண்டார்கள். ஆண்டவர்கள் விடுதிக்குட் புகுந்த சற்று நேரத்துக்குள் மேகங்கள் கூடின; எங்கும் இருள் சூழ்ந்தது. பூமி அதிர்ந்து கட்டிடங்கள் தகர்ந்தன. மண் மாரி வருஷித்து அவ்வூர் அழிந்தது. அக்கிரமக்காரர் களும் அழிந் தொழிந்தனர். பலர் எண் திசையும் சிதறி யோடி உயிர் தப்பினர். இவ்வாறு பழைய பார்ப்பாரூர், ஆண்டவர்களது கோபப் பார்வையால் பாழாயிற்று. அதற்குரிய சின்னங்கள் இன்றும் ஆங்குக் காணப் படுகின்றன.

47வது அத்தியாயம்.

அதிகாரி மகன் சுக மடைந்தது.

[இது குஷ்டம் பற்றி யிருந்த கோவில் அதிகாரி யுடைய மகனை ஆண்டவர்கள் குணப் படுத்திய வரலாற்றைக் கூறு கின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் அடங்கி யிருக்கும் பார்ப்பாரூர் தறுகா குளத்துக்குக் கிழக்கே, தற்போது ஒரு பாழடைந்த கோவில் காணப் படுகிறது. இது ஒரு காலத்தில் புண்ணிய க்ஷேத்திரமாகக் கைலாச நாதர் கோவில் என்ற பெயரால் ஹிந்துக்க ளிடையே விளங்கியது. இந்தக் கோவிலுக்கு க்ஷேத்திர

யாத்திரையாகச் சென்ருல், காசிக்குச் செல்வது போல் வீசம் பங்கு நன்மை யுண்டு என்ற ஐதீகம் ஹிந்துக்க ளிடையே உண்டு. அவர்களுக் கிடையே, "காசிக்கு வீசம் கைலாசம்" என்ற பழமொழியும் வழங்கப் பட்ட துண்டு. அக்காலத்தில் தூரந் தொலை யிலிருந்து யாத்ரிகர்கள் அக்கோவிலுக்குத் திரள் திரளாக வந்து கொண் டிருந்தனர். உற்சவங்களும் வெகு விமரிசையாக நடை பெற்று வந்தன. தற்கால பார்ப்பாரூர் அக்கோவிலைச் சேர்ந்த பூந்தோட்டமாக இருந்தது.

அன்று, கைலாச நாதர் கோவில் அதிகாரிக்கு ஒரு மகனிருந்தான். அவனுக்கு நற்குண மங்கை யொருவளை அக்குடும்பத்தினர் கல்யாணஞ் செய்து வைத்தனர். விவாக பந்தம் ஏற்பட்ட சொற்ப காலத்துக் கப்புறம் புருஷனுக்குத் தீண்டா வியாதி யாகிய குஷ்ட நோய் தொட்டது. ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து அறவே இல்லாது போக்க வேண்டு மென்ற நோக்கத்துடனே பாண்டித்திய முடைய பண்டிதர்களைக் கொண்டு அவன் குடும்பத்தினர் பரிகாரஞ் செய்தனர். வைத்தியர்களால் குணமாக வில்லை. கோவில்களுக்குச் சென்று தெய்வங்களு க்கு நேர்ச்சை செய்து கொண்டும் பிணி நீங்கியபாடில்லை. வர வர வியாதி திரேக முழுதும் பரவி. யாரும் கிட்டச் செல்லாத விதமாகத் தடுத்து விட்டது இக்கோர நோய் மற்றவர்களையும் தொடாது, புருஷனையும் மனைவியையும் குடும்பத்தை விட்டகற்றி, ஒரு தனி இடத்தில் வைத்து விட்டனர். அவன் குடும்பத்தினர், தோஷியைக் கல் யாணம் பண்ணியப் பிறகுதான் தன் மகனுக்கு இத்தகைய கொடிய நோய் ஏற்பட்ட தென்று அவதூராகப் பேசினர். மூதேவி பெண்ணுகை வீட்டுக்கு வந்தது முதல் சனியன் பிடித்துக் கொண்டதாய்ப் பலர் குத்தலாக இடித்துங் கூறினர். இந்த நோவினையைக் கேட்டு அந்த மங்கையின்

மனம் புண் பட்டது. அவர்களின் சொல்லம்பு இவளின் ஹிருதயத்தை ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருந்தது. எனினும், விதியை நினைத்து இறைவன் பக்கம் பரஞ் சாட்டி, பொறுமையுடன் புருஷனுக்கு ஊழியஞ் செய்து வந்தாள் அம்மாது சிரோன்மணி.

பழைய பார்ப்பாரூர் ஆண்டவனது கோபப் பார்வையாகிய 'கஹர'ால் மண் மாரி பெய்து பாழான பின் காஜா ஆண்டவர்கள் கங்காணியின் விடுதியி லிருந்த இடத்தை விட்டும் கைலாச நாதர் கோவிலைச் சேர்ந்த பூந்தோட்டத்துக்கு வந்து ஓர் இடத்தில் விடுதி யிட்டுத் தங்கினார்கள். அக்கோவில் பூசாரி, சுவாமிக்கு பூஜை பண்ணுவதற்காக வழக்கம் போல் புஷ்பங் கொய்ய தோட்டத்துக்குச் சென்றார். முஸ்லிம் சந்நியாசி ஒருவர் கண்களை மூடி நிஷ்டையி லிருப்பதைக் கண்டு ஆத்திர மடைந்தார். அந்த பூசாரி உடனே ஆண்டவர்களை நோக்கி, "எங்கள் சுவாமிக்கு பூஜை செய்வதற்காக வேண்டி புஷ்பச் செடிகள் இங்கு பயிர் செய்வதை நீர் அறிய வில்லையா? அன்னிய மதஸ்தர்கள் இங்கு நுழையக் கூடா தென்பது உமக்குத் தெரியாதா? உமது வருகையால் இவ்விடம் தீட்டாகி விட்டதே! இனி ஒரு வினாடி கூட இங்குத் தங்கலாகாது; இக்ஷணமே வெளிப்பட வேண்டும்," என்பதாய்க் கடிந்து கூறி விரட்டினார். ஆண்டவர்கள் தங்களது பராக்கில் நின்றுந் திரும்ப வில்லை. ஆண்டவர்களது சிஷ்யர்பூசாரியை நோக்கி, "நீர் அங்ஙனம் கடிந்து பேசாதீர். அவர்களோ மஹாத்மா; அவர்களது மகிமையை நீர் அறிய மாட்டீர். இவ்விடத்திலே தங்கி யிருக்கவும் இதை விட்டுச் செல்லவும் அவர்களுக்குத் தெரியும்," என்று பதிலுரைத்தார். இதைக் கேட்ட கோவில் பூசாரி கோபத்துடன் வெளிச் சென்று, சமாச்சாரத்தைக் கோவில் அதிகாரிக்குத் தெரியப் படுத்தினார்.

கோவிலதிகாரி பூசாரி சொல்லியவற்றைக் கேட்டு, "அவர் மஹாத்மாவா யிருந்தால் என் மகனுடைய பிணியை நீக்கட்டும் பார்ப்போம்" என்று சொல்லி யனுப்பினன். இவ்விஷயம் ஆண்டவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. ஆண்டவர்களும் சம்மதித்து, அம்மனிதனை யழைத்து வரும்படி ஏவினார்கள். அவரின் மனைவி, நோய் வாய்ப் பட்டிருக்கும் தன் புருஷனை அழைத்து வந்து ஆண்டவர்கள் சமுகத்தில் நிறுத்தி, அவர்கள் திருவடியில் நெடு மரம் போல் விழுந்து வணங்கினாள். தனது கணவனின் பிணியை நீக்கி முன் போல் சுக ஜீவியாய் வாழ மன்றாடினாள். ஆண்டவர்கள் அம்மாது மீது மனமிரங்கி, தங்கள் கால் பெரு விரலால் மண்ணைக் கிளறினார்கள். அவ்விடத்தில் ஊற்றுக் கண் உண்டாகி, தண்ணீர் கொப்பளித்தோட ஆரம்பித்தது. அத்தண்ணீரை ஒரு பாத்திரத்தில் அள்ளி சில 'அஸ்மா'க்களை ஓதி யூதி அதை நோயாளிக்குப் புகட்டக் கொடுத்தார்கள். அந்நீரில் கொஞ்சத்தை திரேகத்தில் தடவச் செய்தார்கள். அக்ஷணமே சூரியனைக் கண்ட பனியைப் போல், அக்கன்ம நோய் காணமல் பறந்தோடியது. அவரின் திரேகம் பொன்னிறமாகப் பிரகாசித்தது. அனைவரும் ஆண்டவர்களது மகத்துவத்தைக் கண்டு பேராச்சரிய முற்று, அவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர். பிறகு அந்த நோயாளியின் குடும்பத்தினர் ஆண்டவர்களுக்குக் காணிக்கையாகத் திரவியங்களைக் கொண்டு வந்து கொட்டினர். ஆண்டவர்கள் அவைகளைக் கடைக்கண்ணாலும் திரும்பிப் பார்க்காது வேண்டாமென மறுத்து விட்டார்கள். அப்போது அவர்கள், "எஜமானவர்களே! தாங்கள் கருணையுடன் புரிந்த பேருபகாரத்துக்கு நாங்கள் யாது கைமா றளிப்போம்? எங்கள் சன்மானங்களைத் தாங்கள் தயை கூர்ந்து அங்கீகரித்து ஆசிர்வதிப்பீர்களாக! இவை வேண்டா

மென்றால், வேறு என்ன தான் வேண்டும்? தயவு செய்து கூறுங்கள்; அளிக்கக் காத்திருக்கின்றோம்,'' என்பதாய் வற்புறுத்தி வேண்டி நின்றார்கள். அதற்கு ஆண்டவர்கள் "நான் தற்போது தங்கி யிருக்கும் இவ்விடத்தையே எனக்கு என்றும் குடியாக விருக்க அளித்தால் போதும்'' என்றார்கள். அங்ஙனமே கோவிலதிகாரி அந்தப் பூந்தோட்டத்தைச் சன்மானமாக ஆண்டவர்களுக் களித்து விட்டார். ஊற்றுக்கண் உண்டான அவ்விடத்தில் தான் தற்போதுள்ள குளம் பிற்காலத்தில் வெட்டப் பட்டிருக்கிறது. அன்று முதல் ஆண்டவர்களது மகிமை பல விடங்களுக்குப் பரவி, நாலு பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து தரிசிக்க ஆரம்பித்தார்கள்.

48வது அத்தியாயம்.

கள்வர்கள் குருடானது.

[இது ஆண்டவர்கள், கள்ளர்கள் கையில் அகப்பட விருந்த கன்னிப் பெண்களைக் காப்பாற்றியதையும், கள்ளர்கள் குருடாகிப் பின்பு பார்வை யடைந்ததையுஞ் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்களது கிருபையால் குஷ்டந் தீர்ந்த கோவிலதிகாரியின் மகனது மனைவி, குடும்பத்தாரை வெறுத்து ஆண்டவர்களுக்கு ஊழியம் புரிவதிலேயே பராக்காகிக் காலத்தைக் கழித்து வந்தாள். ஒரு நாள் அம்மாது தனது தோழிப் பெண்களுடன்

ஆண்டவர்களை தரிசிக்க வந்து கொண்டிருந்தாள். இடையே சில கள்வர்கள் ஆபரணங்களைக் கொள்ளையடிக்கவும் மான பங்கம் செய்யவும் அவர்களை மறித்து வம்பித்து அலங் கோலப்படுத்தினர். அப்போது அந்தப் பெண்கள் அலறிக் கொண்டு பல திக்குகளின் பக்கம் பயந்தோடியும் வம்பர்கள் அவர்களை விட வில்லை. அப் பெண்கள் தங்களைக் காப்பாற்றும் பொருட்டு ஆண்டவர் களைக் கூப்பிட் டலறினர்கள். அவ்வளவிலே திருடர்கள் அனைவரும் பார்வையிழந்து குருடர்களானர்கள். பெண் களெல்லோரும் ஒன்று சேர்ந்து ஆண்டவர்களது சமுகத் துக்கு வந்து, தங்களுக் கேற்பட்ட 'ஆபத்து'க்களையும் அயோக்கியர்கள் குருடர்களாகித் தட்டித் தடுமாறி கொண்டு அலைவதையும் சவிஸ்தாரமாய்க் கூறினர்.

திருடர்களோ, தங்களது தகாத செயல்களை நினைத்து வருந்தி, ஓவென்றலறிக் கொண்டு காட்டில் வழி தெரியாது அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். இவர்களின் கூச்சலையும் பரிதாபத்தையுங் கண்ட வழிப் போக்கர்கள் அத்திருடர்களை ஆண்டவர்கள் சந்நிதானத்தில் கொண்டு வந்து நிறுத்தினர். ஆண்டவர்கள் முன்னிலையில் பட்ட மரம் போல் விழுந்து, தங்களை மன்னித்தருள வேண்டும் என்பதாய் மன்ருடினர்கள். ஆண்டவர்கள் அக்கள்ளர் களின் பரிதாப நிலையையும் வேண்டுதலையும் பார்த்து மன மிரங்கியவர்களாய், இனி அத்தகைய தீச் செயல்கள் புரிகிறதில்லை யென்றும், வழிப்பறிச் செய்கிற தில்லை யென்றும் சத்திய வாக்கு வாங்கிக் கொண்டு, அவர்களது கண்களை முன் போல் பார்வை பெறச் செய்தார்கள்.

—

49வது அத்தியாயம்.

மாது மதம் மாறியது.

[இது குளத்தில் குதித்த மாது அற்புதமாய் ஆண்டவர்கள் சமுகஞ் சென்றதையும், அம்மாது இஸ்லாத்தைத் தழுவியதையும் கூறுகின்றது.]

ரோகவிலதிகாரியின் மருமகளும் ரோகம் பற்றிச் சொஸ்தமானவனின் மனைவியுமான அந்த மாது சிரோன்மணி, ஒவ்வொரு நாளும் ஆண்டவர்களிடம் வந்து, அவர்களுக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்து போவது வழக்கமாக இருந்து வந்தது. இது அப்பெண்ணின் புருஷனுக்குப் பொருத்தக் கேடாக இருந்தது. தனது கணவன் நோய்வாய்ப் பட்டிருந்த காலங்களில் புருஷனது குடும்பத்தினர் தன்னை இழிவாகப் பேசியதையும் அந்த அம்மை மறந்து விட வில்லை. ஆண்டவர்களது மகிமையையும் கீர்த்திப் பிரதாபத்தையும் கண்ணுற்ற அப்பெண்மணி அவர்களை விட்டுப்பிரிய இஷ்டப்படவு மில்லை. ஆண்டவர்களுடைய வணக்க முறைகளும் அப்பெண்ணரசியின் ஹிருதயத்தைக் கவர்ந்து கொண்டது.

தற்போது, பத்தினியார் கோவில் என்றழைக்கப்படும் இடம் அக்காலத்தில் விருட்சாதிகள்டர்ந்த விசாலமான தோப்பாக இருந்தது. அதில் பெரியதோர் தடாகமும் இருந்தது. ஒரு நாள் அந்த அம்மை ஆண்டவர்களுக்கு விறகு பொறுக்குவதற்காக அந்தப் பக்கஞ் சென்றாள். அவள் செல்வதைக் கண்ட கணவனும் ஒளிந்து சென்று, மனைவியைத் தாவிப் பிடித்து வீடு கொண்டு போய்ச் சேர்க்க முயன்றான். அதற்கு மனைவியும் தப்பித்துக் கொண்டு ஆண்டவர்கள் இருப்பிடத்துக்கு ஓட முயன்

ளுள். புருஷனும் துரத்திச் சென்றுன். கடைசியாக அவன் எட்டிப் பிடிக்கவே, அவள் சமாளித்துக் கொண்டு ஆண்டவர்களை விளித்தவளாய், பக்கத்திலிருந்த குளத்தில் குதித்து விட்டாள். அவனும் குளத்திலிறங்கித் தேடினுன்; அகப்படவில்லை. அவள் தாழ்ந்து இறந்து விட்டதாகக் கருதி, பிரேதத்தைத் தேடியெடுக்க ஆட்களை யழைத்துக் கொண்டு போக வீட்டுக்கு விரைந்து சென்றுன். வழியில் அவன் கண்ட அதிசயத்துக் களவில்லை.

குளத்தில் குதித்த மனைவி ஆண்டவர்கள் சந்நிதானத்தி லமர்ந்து ஊழியம் புரிவதைப் பார்த்து பேராச்சரியப் பட்டான். தான் காண்பது கனவோ, நினைவோ என்று சந்தேகங் கொண்டான். கண்ணைக் கசக்கிக் கூர்ந்து நோக்கினுன். காணப்படுபவள் உண்மையிலேயே தன் மனைவி தான் என்றுணர்ந்தான். நேரே ஆண்டவர்கள் சந்நிதானத்துக்குச் சென்று, மனைவியைத் தன்னுடன் சேர்த்தனுப்பி வைக்குமாறு முறையிட்டுக் கொண்டான். ஆண்டவர்கள் அப்பெண்ணுக்கு அறிவுகளைக் கூறி, கணவனுடன் இல்லத்துக் கேகி, குடும்பத்தாருடன் ஒத்து வாழும்படி போதனைச் செய்தார்கள்.

அதைக் கேட்ட அந்த மாது, ''ஆண்டவர்களே! அடிமையை ஆதரித்து ரட்சிக்க வேண்டும். இவ்வுலக வாழ்க்கையில் எனக்குக் கிஞ்சிற்றேனும் விருப்ப மில்லை. தேவரீர் தங்களுடைய திருவடியில் ஊழியம் புரிந்து ஈடேற்றம் பெறுவதையே எனது மோட்ச சாதனமாகக் காண்கிறேன். தேவரீர் அனுதையை ஆதரித்து, தங்கள் சிஷ்யர்களுள் ஒருவராய் ஏற்றுக் கொள்வீர்களாக!'' என்பதாய் கூறி, ஆண்டவர்கள் இடத்தில் தூய 'கலிமா'ச் சொல்லி 'தீனுல் – இஸ்லாத்'தைத் தழுவினுள். அந்த

அம்மையாருக்கு ஆண்டவர்கள் ***உம்மு - ஹபீபா** என்று இஸ்லாமிய பெயர் சொல்லி யழைத்தார்கள்.

பிறகு உம்மு ஹபீபா அவர்கள் ஆண்டவர்களிடம் தீட்சை யெனும் 'பைஅத்து'ப் பெற்று, ஞான வழியில் தேர்ச்சியாகி இஸ்லாமிய அனுஷ்டானங்களைப் புரிந்து வந்தார்கள். பிறகு அந்த அம்மையார் பரிபூரணம் பெற்ற 'காமிலா'கி ஆண்டவர்களுடைய ஊழியராகவே யிருந்து, ஆண்டவர்களுடைய நிரியாணத்துக்குப் பின், † முஹர்ரம் மாதம் பிறை 27-ல் 'வபாத்'தானார்கள். "இன்னா லில்லா ஹி வ இன்னா இலைஹி ருஜிஊன்."

ஆண்டவர்களுடைய 'றவுலா – ஷரீபு'க்குச் சற்று வடமேற்கே இருக்கும் அறையில் தான் **உம்மு ஹபீபா** (ரலி) அவர்கள் அடங்கி யிருக்கிறார்கள். அவர்களால் பல அற்புத 'கருமாத்து'கள் நிகழ்ந்திருக்கின்றன; நிகழ்ந்தும் வருகின்றன. நோய்வாய்ப் பட்டவர், பிணியாளர், பில்லி சூனியஞ் செய்யப்பட்டோர், பின்னும் பலவாறு வருந்துவோர் **உம்மு ஹபீபா** (ரலி) அவர்களிடம் பிரார்த்தித்து வந்து சுகம் பெற்றுச் செல்லுகின்றார்கள்.

---

* பிற்காலத்தில் தமிழ் நாட்டு வழக்கப்படி **ஹபீபு அம்மாள்** என்று அப்பெயர் மருவி விளங்குகிறது.

† ஹிஜ்ரி வருடம் அறியப்பட வில்லை. தெரிய வருமாயின் (இ. அ.) மறு பதிப்பில் வெளி வரும்.

50வது அத்தியாயம்.

உப்பு மண்ணானது.

[இது வர்த்தகர்கள் உப்பு மூட்டைகள் கொண்டு போகும் போது ஆண்டவர்கள் வினவியதற்கு மண் மூட்டைகள் என்று அவர்கள் சொல்லவே அவை மண்ணாக மாறினதையும், பிறகு உப்பாகப்போன தையும் சொல்லுகின்றது.]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் ஒரு நாள் ஓடம்போக்கி ஆற்றின் மதவு மீது சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அதுசமயம் வர்த்தகர்கள் கூட்டமாக மாடுகள் மீது பொதிகளை ஏற்றி ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். ஆண்டவர்கள், அவர்களை விளித்து, "அவை என்ன பொதி?" என்று வினவினார் கள். அதற்கவர்கள், "மண் பொதி" என்று வேடிக்கை யாகக் கூறிச் சென்றனர். பிறகு அந்த வர்த்தகர்கள் மண்டிக்குச் சென்று சில மூட்டைகளை அவிழ்த்துக்கொட் டினர். அவைகள் மண்ணாகவே சொரிந்தன. உப்புக் கொண்டு வர மண்ணாகக் கொட்டுகின்றனவே! என்று திகைத்து, எல்லா மூட்டைகளையும் அவிழ்த்துப் பார்த்த னர்; அனைத்தும் மண்ணாகவே இருந்தன "ஆ! கை சேதமே! நஷ்டவாளியானோமே! மஹானின் மகத்துவ மறி யாது, மண்ணென்று கூறி மதி மோசம் போனோமே!" என்பதாய் வழியில் நடந்த விருத்தாந்தத்தைக் கூறித் தலைகளில் மண்ணை வாரி இறைத்துக்கொண்டனர். பிறகு, அந்த வர்த்தகர்கள் ஒருங்கு திரண்டு ஆண்டவர்களிடஞ் சென்று மன்னிப்புத் தேடினர். ஆண்டவர்களும் அவர்

களை மன்னித்து "திரும்பிச் செல்லுங்கள்; உப்பைக் காண்பீர்கள்," என்று கூறினார்கள். மீண்டும் போய் பார்த்த பொழுது, மண் மூட்டைகள் உப்பு மூட்டைகளாகவும், மண் குவியல் உப்புக் குவியலாகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்து, ஆண்டவர்களை வாழ்த்தினர்.

51வது அத்தியாயம்.

இறுதி 'வபாத்து'.

[இது ஆண்டவர்கள் இறுதியாக 'வபாத்' தானதைக் கூறுகின்றது.]

குத்புல் அக்த்தாபு ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது நாகூரீ (ரலி) ஆண்டவர்கள் 'வபாத்' தானதற்குப் பிறகு ஸையிதினா காஜா ஷைகு அலாஉத்தீன் ஹஸனீ சுஷிஷ்தீ (ரலி) ஆண்டவர்களே அந்த ஸ்தானத்தில் 'குத்பு – ஜமானு'க இருந்து ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். ஆண்டவர்கள் ஜீவிய காலத்தில் எண்ணற்ற அற்புதங்களைச் செய்து கொண்டு புகழுடன் பார்ப்பாரூரின் கண் வாழ்ந்து வந்தார்கள். * தஞ்சாவூர் அரசனுக்கு அன்னாரின் குரு செய்த சூனியத்தைப் போக்கி, சுகம் பெறச் செய்திருக்கிறார்கள். இன்னும் இது போல் எத்துணையோ அற்புதாதி காரணங்கள் செய்துள்ளார்கள். ஆண்டவர்களது கீர்த்திப் பிரதாபத்தைக் கேட்ட

---

* காஜா ஆண்டவர்களால் தஞ்சை யாசனுக்குச் சூனியந் தீர்க்கப்பட்டதாக 53-வது அத்தியாயத்தில் வாப்பாக்கண்டு புலவர் பாடியுள்ளதில் காணப்படுகிறது. அன்றி, குருச் சூனிய நிவர்த்திக்குத் தனிமையில் ஓர் சரிதைக் கிடைக்க வில்லை. பின் கிடைக்குமாயின் மறு பதிப்பில் வெளி வரும்.

ஜனங்கள் வெகு தொலை தூரங்களி லிருந்து வந்து, தங்கள் நாட்டங்களைப் பெற்றேகிக் கொண்டிருந்தனர். இங்ஙனம் ஆண்டவர்கள் வாழ்ந்து வருங் காலையில் அவர் களின் அந்திய காலம் நெருங்கியது.

ஆண்டவனது திருச் சமுகந்தவிர காணப்படக் கூடிய வையனைத்தும் மறையக் கூடியவை என்பது இயற்கை நியதியாகு மல்லவா? வழிப் பிராணிகள் தங்கிக் களைப் பாறுதலுக் கொப்பாகவே இவ்வுலகம் ஒரு தங்கு மடம் போலிருக்கிறதே! இதில் சாஸ்வதமாய் என்றும் குடி யிருப்ப தென்பது முடியாத காரிய மன்றோ! ஆண்டவனை யடுத்த 'ஒளலியா'க்களுக்கு, சகலவித சக்திகளிருந்த போதிலும் கற்பனைக்குத் தலை சாய்த்துத் தானே ஆக வேண்டும்? இது இங்ஙனமாக;

ஸையிதுஷ்-ஷுஹதா ஸையிதினா இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கர்பலாவுக்குப் புறப்படுமுன், தமக்கேற் படப்போகும் முடிவை அறிந்திருந்தார்களல்லவா? விதி என்பது தெய்வ நாட்டமே. விதிவசம் நடப்பதற்குத் தலைசாய்த்து விடுவதே இஸ்லாத்தின் மஹோன்னத நிலைமை யாகும். இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள், ''நாயனுடைய நாட்டமே நடை பெறுக'' என்னும் இஸ்லா மிய உணர்ச்சியில் பரிபூரணம் பெற்றவர்களா யிருந்தார் களல்லவா? அங்ஙனமே தெய்வத் தோழர்கள் விதிப் பய னாகிய 'கலா — கதரை' விருப்புடனே வரவேற்பார்கள். ''குறிப்பிட்ட நேரம் அடுத்திடின் சற்றேனும் பிற்படுத்த வும் முற்படுத்தப்படவு மாட்டா'' என்ற தெய்வ உண் மையை 'ஒளலியா'க்கள் தெரிந்தே யுள்ளார்கள். 'அல்லா ஹுத்-தஆலா, அவர்களைத் தன் பக்கம் அழைத்துக்கொள் ளும்போது, அவர்களது உள்ளங்கள் ஆண்டவனிடமிருந்து சக்தியை யடைவதில் என்ன அதிசயமிருக்கின்றது? அவர்

களுடைய பூத உடல் பூமிக்குள் ளிருப்பின், உள்ளம் மெய்ப் பொருளின் சாகித்தியத்தில் இருக்கிறது. அவர்களின் உடலை 'நபி'மார்களினதும் சத்திய சீலர்களினதும் உடல்களுடன் 'கியாமத்'தாகிய இறுதி நாளில் இறைவன் எழுப்புவான். இத்தகுதிகளை யறிந்த காஜா ஷைகு அலா உத்தீன் (ரலி) ஆண்டவர்கள் தங்களுடைய 'வபாத்து' நேரம் அடுத்ததும் சந்தோஷத்துடன் வரவேற்று, 'கிப்லா' வின் பக்கம் முகந் திருப்பி, கண்களை மூடி, 'அல்லாஹுத்–தஆலா'வின் பக்கம் சேர்ந்தார்கள். "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ருஜிஊன்."

ஆண்டவர்களுடைய 'வபாத்து' விஷயம் காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. பல ஊர்களி லிருந்தும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டு வந்தனர். இறுதியாக ஆண்டவர்களை அனைவரும் தரிசித்துக் கொண்டனர். ஆண்டவர்களோடு கூட இருந்து ஊழியஞ் செய்து வந்த * **கலீபா தஸ்தகீர் சாஹிப்** அவர்களே, ஆண்டவர்களைக் குளிப்பாட்டிக் 'கபன்' யிட்டுத் தொழுவித்தார்கள். வந்திருந்த முஸ்லிம்கள் அனைவரும் வரிசையாக நின்று, பெருங் கூட்டமாகத் தொழுதார்கள். ஆண்டவர்கள் விடுதி யிட்டுத் தங்கி யிருந்த இடத்திலேயே 'கப்ரு' தோண்டப்பட்டு அவர்களது பரிசுத்த திரேகம் †ஹிஜ்ரி 1026-ம் வருடம் முஹர்ரம் மாதம் பிறை இருபது வியாழக் கிழமை யன்று அடக்கப்பட்டது. ஆண்டவர்களுக்குப்

---

* கலீபா தஸ்தகிர் சாஹிப் (ரலி) அவர்கள் ஆண்டவர்களுடைய 'கலீபா'க்களுள் ஒருவர். இவர்களது 'வபாத்து' வருடம் தெரியவில்லை. இவர்களுக்கு ரபீஉல்- அவ்வல் மாதம் பிறை 1-ல் 'உரூஸ்' நடைபெறுகிறது.

† நாகூர் மௌல்வி அல்–ஹாஜ் குலாம் தஸ்தகீர் நாஜு சாஹிப் அவர்கள், காஜா ஆண்டவர்களது 'வபாத்து' வருடம் ஹிஜ்ரி 1026 என்பதாக "கவீதா உல்விய்யா"வில் கூறியுள்ளார்கள்.

பிறகு கலீபா தஸ்தகீர் சாஹிப் (ரலி) அவர்களும் 'வபாத்'தானார்கள்.

52வது அத்தியாயம்.

'தறுகா' கட்டியது.

[இது 'தறுகா'வும் அதைச் சுற்றிலுமுள்ள 'வாலே'களும் 'மஸ்ஜிது'ம் கட்டப்பட்டதைச் சொல்லுகின்றது.]

காஜா ஷைய்கு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'வபாத்'தாகிப் பல வருடங்கள் வரை கீத்துக் கொட்டகையே போடப்பட்டிருந்தது. பலவூர் ஜனங்கள் ஜாதி மத பேதமின்றி வேண்டுதல்களுக்காக அங்கு வந்து தங்குவது வழக்கமாக இருந்தது. ஒரு விடுத்தம் சிலர் ஆண்டவர்கள் பேரால் 'கத்தம்' 'பாத்திஹா' ஓதி விருந்தளிப்பதற்காக ஆடுகள் அறுத்து சமையல் செய்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட அன்னியர்கள் பலர் முஸ்லிம்களைத் துன்புறுத்தி அடித்துத் துரத்தி விட்டனர். இவ்விதமான சில்லரைக் கலகங்கள் அடிக்கடி நிகழ்ந்த வண்ணமாகவே இருந்தன. முஸ்லிம்கள் ஆங்கு வந்து கூடுவது அவர்களுக்குப் பெருத்தக் கேடாகவே இருந்தது.

இவ்விஷயத்தைத் தெரிந்த நாகபட்டணம் பிரமுகர் **செ. முஹம்மது கௌது மரைக்காயர்** உடைய சகோதரர் **அப்துல்லா சாஹிப் மரைக்காயர்** உடைய மனதில் 'தறுகா' கட்டிடங் கட்டும் எண்ண முண்டாயிற்று.

அதற்காகுமான சாமான்கள் சேகரிக்கப் பட்டன. எவருடைய எதிர்ப்பையும் பொருட் படுத்தாமல், 'தறுகா' கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டு முடிவடைந்தது. அன்று முதல் ஜனங்களின் வரத்துப் போக்கு மிகப் பெருக ஆரம்பித்தது. அன்று முதல் இன்று வரை அன்னாரது சந்ததியினரே 'தறுகா'வின் தர்மகர்த்தாவாக இருந்து வருகின்றனர்.

நேர்ச்சை செய்து கொண்டு, பார்ப்பாரூரில் ஜனங்கள் 'முருது'க்கு வந்து மாதக் கணக்கிலும் வருடக் கணக்கிலுந் தங்க ஆரம்பித்துவிட்டதால் இடவசதி யில்லாதிருந்தது; முஸ்லிம்கள் தொழுவதற்கும் கஷ்டமாக இருந்தது. அந்த சமயம் பார்ப்பாரூரிலேயே குடிபதியா யிருந்து வந்த சேக்கா மரைக்காயர் என்கிற ஷைகு அஹ்மது மரைக்காயரின் தந்தை நெய்னா முஹம்மது மரைக்காயர் அவர்கள் குளம் வெட்டி, தொழுவதற்கு ஒரு பள்ளியும், 'மிஹ்ருபு'க்குப் பின் புறத்தில் ஒரு சிறு 'வாலே'யும் கட்டினார்கள். அவை க்ஷீணதசை யடைந்து விட்ட படியால், நாகபட்டணம் பிரமுகர் ஆனரபில் கான்பஹதூர் ஸர் அக.கு. அஹ்மது தம்பி மரைக்காயர் அவர்களால் நவீன முறையில் மேற்படி 'மஸ்ஜிது'ம் 'வாலேயும் புதுப்பிக்கப் பட்டுக் கட்டப் பட்டிருக்கின்றன.

'தறுகா'வுக்குத் தென் புறத்தில் 'சேக்கா மரைக்காயர் வாலே' என்பதாக நீண்டதொரு தாழ்வார மிருந்தது. அதைக் கட்டினதும் மேற்கண்ட நெய்னா முஹம்மது மரைக்காயர் தான். தற்காலம் இந்த வாலே அவ்விடத்தில் காணப்படவில்லே. அக்காலம் முதல் இக்காலம் வரை அக்குடும்பத்தார் பார்ப்பாரூரிலேயே இருந்து வருகின்றனர்.

'தறுகா'வுக்கு மேற்கே 'இலந்தை மரத்து வாலே' யென்று நாகபட்டணம் பிரமுகர் மாப்பிள்ளே மரைக்

காயர் என்கிற மு. காதிறு முஹிய்யித்தீன் சாஹிப் மரைக்காயர் அவர்களால் பண்டகசாலையைப் போல் அறையறையாக ஓர் கட்டிடங் கட்டப் பட்டது அது சீர்கேடடைந்த பின், மேற்படி குடும்பத்திலுள்ள மு. லெப்பை பிள்ளை மரைக்காயர் அவர்கள் அதை சீர் திருத்தஞ் செய்து கட்டினார்கள்.

'தறுகா'வுக்குக் கிழக்கே 'குளத்து வாலை' மஞ்சக் கொல்லை பிரமுகர் ம. அல்லா பிச்சை ருவுத்தர் அவர்களால் கட்டப்பட்டது.

'தறுகா'வுக்கு வடமேற்கே 'தறுகா' ஆபீஸும் அதைச் சேர்ந்த 'முதலி வாலை'யும் நாகபட்டணம் பிரபல வெற்றிலை வர்த்தகர் மு. துரைசாமி முதலியார் அவர்களால் கட்டப்பட்டன.

குளத்துக்குத் தெற்கே யுள்ள தோட்டமும் பங்களாவும் நாகபட்டணம் கா. உதுமான் லெப்பை மரைக்காயர் அவர்களால் பிற்காலத்தில் உண்டாக்கப் பட்டன.

ஆண்டவர்களது 'றவுலா – ஷரீபு'க்கு வடபுறமுள்ள துரட்டோடு கட்டிடமும் தென் புறமுள்ள முற்ற வெளியும் கலீபா தஸ்தகீர் சாஹிபுடைய 'றவுலா' கட்டிடமும் பார்ப்பாரூருக்கு மின்சார விளக்குகளும் கூத்தாநல்லூர் பிரமுகர் S. S. அப்துர்ரஹ்மான் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டன.

'இலந்தை மரத்து வாலை'க்குத் தென்புறமுள்ள இரு வாலைகள் வழுத்தூர் பிரமுகர் கா. இ. பகீர் முஹிய்யித்தீன் ருவுத்தர் அவர்களாலும், அதற்கடுத்த இரு வாலைகள் அத்திக்கடை பிரமுகர் V. M. செய்யிது கனி ருவுத்தர் அவர்களாலும், இதற்கடுத்த இரு வாலைகள் கூத்தாநல்லூர் பிரமுகர் ஆ. மு. ஹாஜீ முஹம்மது யூஸுப் அவர்களாலும் கட்டப் பட்டன.

53வது அத்தியாயம்.

மரித்த மகவு உயிர் பெற்றது.

[இது ஆண்டவர்கள் கிருபையால் ஓர் புலவருக்குப் பிள்ளை பிறந்ததையும், அது மரித்து மீண்டும் உயிர் பெற்றதையும் கூறுகின்றது.]

இராமனுதபுரத்தைச் சேர்ந்த கீழக்கரையில் வாப்பாக்கண்டு என்ற முஸ்லிம் தனவந்தர் ஒருவரிருந்தார். அவர் புலமை வாய்ந்தவராகவு மிருந்தார். எல்லா விதப் பேறுகளும் அவருக்கிருந்தும் மக்கட் பேறு மட்டியில்லை. தனக்குப் பிறகு, தன் பெயர்ச் சொல்லப் புத்திர பாக்கிய மில்லாத குறை அவருக்குப் பெருங் குறையாக விருந்தது. அவர் வர்த்தகத்தை முன்னிட்டு சில காலம் நாகபட்டணத்தில் தங்கி யிருந்தார். ஆண்டவர்களது மகிமையைக் கேள்விப்பட்ட வாப்பாக்கண்டு புலவர், குடும்ப சகிதம் பார்ப்பாரூருக்குச் சென்று 'முருது'க்காகத் தங்கி விட்டார். அதே வருடத்தில் அவர் மனைவியர் கர்ப்பவதியாகி, பார்ப்பாரூரின் கண் ஓர் ஆண் மகவை ஈன்றூர். புலவருக்கும் அவர் குடும்பத்தாருக்கு முண்டான மகிழ்ச்சிக்கோ அளவில்லா திருந்தது. தனது நாட்டம் நிறைவேறிய சில மாதங்களுக்குப் பிறகு, கீழக்கரைக்குச் செல்ல நாட்டங் கொண்டார். ஒரு நாள் தனது நேர்ச்சையின் காணிக்கைகளை நிறைவேற்றி, அனைவருக்கும் விருந்தளித்தார்.

ஆண்டவர்களைப் புகழ்ந்து பாடல் பாட எண்ணங் கொண்டார். ஆண்டவர்கள் சந்நிதானத்தில் தமது அருமை மகனை மடி மீது வைத்துக் கொண்டு, கீழ் வருமாறு பாட ஆரம்பித்தார்.

* பல்லவி.

கந்தங்கமழ் பாதமலர் தாருமையா — ஏழை
எந்தன் துயர் தீரமுகம் பாருமையா (கந்தங்)

அனுபல்லவி.

இந்துங்கர் வந்துதவ மூந்திருபார்ப் பாரூரில்வாழ்
சுந்தரமிகுந் த்செய்கு அலாவுதீன் வலியேதிரு (கந்தங்)

சரணம்.

தஞ்சைநகர் ராஜன்குரு செய்பிணியால் — துயர்
மிஞ்சிமன தஞ்சிமிகக் கெஞ்சி யதால்
அஞ்சலஞ்சல் எனவும் நெஞ்சில்களி கூர்ந்திடவே
பஞ்சாய்ப் பறக்கச் செய்த சங்கைவலி யெங்கள் திரு
(கந்தங்)

மங்கையர்கள் கூடிவழிப் போகயிலே — கள்ளர்
பங்கம் செய்ய நாடிவந்த காலையிலே
அங்கம்தடு மாறியழு தோடிதங்கள் பாலில்வர
வங்கர்தன் விழிமறைத்த சங்கைவலி உங்கள் திரு (கந்தங்)

கும்பல்கும்ப லாகசில வர்த்தகர்கள் — மாட்டில்
உப்புப்பொதி யேற்றிவரக் கண்டதனை
செப்புமொழி யென்னென்றப்போழ் தப்புமொழி
யால்மண்ணென்றார்
அப்படியே செய்தவெங்கள் மெய்ப்புகழ் வலியேதிரு
(கந்தங்)

மண்டலம் துதிக்கும் மக ராஜரும்நீர் — இந்த
மாதவத்தின் காரணப்பிர காசரும் நீர்

---

* இக்கவி, புகழ்ப் பதமாக இருப்பதால், இதற்கு இராகம் தாளம் இன்னவையென்று முன் ஆதாரத்திற் காணப்பட விலலை. இசை வாணர்கள் தங்களின் இன்னிசைகளில் ஏதாகிலு மொன்றில் ஒத்து வருமாயின், அதனோ டிணைத்துப் பாடிக் களிப்பது நல மென விழைகிறோம்.

இன்றுவாப்பாக் கண்டுதுதிக் கின்றபுகழ்க் *கண்டவலி
அண்டர்கள் புகழும்செய்கு அலாவுதீன் வலியேதிரு
(கந்தங்)

என்பதாய் ஆண்டவர்கள் மீது புகழாகப் பாடி முடித்தார். ஆவலோடு தன் மகனை மார்போடு வாரி யணைத்தார். மகன் மரித்து நெட்டிப் போல் விரைத்திருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தார். தனது ஆசையில் மண் விழுந்ததே என்று துக்கித்தார். சந்தோஷ ஆரவாரங்க ளெல்லாம் பஞ்சாய்ப் பறந்தன. அனைவரும் துக்க சாகரத்தில் மூழ்கி யிருந்தனர். புலவருக்கு அநேகர் ஆறுதல் தேறுதல் கூறினர்.

இந்நிலையில் புலவருக்கோர் உதிப்பு உண்டாயிற்று. தமது பாடலில் ஆண்டவர்களுடைய மகத்துவத்தில் ஏதும் குற்றமாகக் கூறி விட்டோமோ? அதன் காரணமாய் ஒரு கால் அறம் விழுந்து குழந்தை மரித்து விட்டதோ என்ற எண்ணம் மிகைத்தது. புலவர் தமது பாடலில் சொற் குற்றம் ஏதுமுண்டோ? என ஆராய்ந்தார். "புகழ்க் கண்ட வலி" என்பதற்கு மாற்றமாய், "புகழ்க் கொன்ற வலி" என்று ஒருகால் தவறுதலாகப் பாடி விட்டோமோ? அதன் காரணமாய் அறம் விழுந்து, குழந்தை மரித்து விட்டதோ? என்பதாய் சந்தேகங் கொண்டார்.

---

* புலவர் பாடிய காஜா ஆண்டவர்களின் புகழ்க் கவிதை 5-வது அடியில் 3-வது வரி கடைசியில், "புகழ்க் கொன்ற" வென்று புலவர் தவறுதலாகப் பாடியது போல் எழுதி அச்சிடின், இப் பாடலை மனனஞ் செய்து பாடி வருவார் யாவர் வாக்கிலும் 'கொன்ற' வென்றே பிறக்குமாகையால், அது மங்கல மல்ல வென விலக்கிப் பின்னர் புலவர் திருத்திப் பாடிய சரித்திர வாலாறுபடி மேற்படிக் கவியிலும் "புகழ்க் கண்ட" வென்று திருத்தி யமைத்தோம். விபரம் கவியை யொட்டிய சரிதைக் கூறுவதே போது மென்று எண்ணுகிறோம்.

மீண்டும் அப்பாடலை ஆரம்ப முதல், வாப்பாக் கண்டு புலவர் மன ஓர்மையோடு பாட ஆரம்பித்து, "இன்று வாப்பாக் கண்டு துதிக்கின்ற புகழ்க் கண்ட வலி" என்பதாய்த் திருத்திக் கூறினர். துயிலிலிருந்து விழிப்பது போல் பாலகன் உயிர் பெற்று உசும்பியது. புலவர் ஆனந்த சாகரத்திலாழ்ந்தார். குடும்பத்தினரும் கூடி யிருந்தவர்களும் சந்தோஷ மடைந்தனர். அனைவரும் ஆண்டவர்களுடைய 'கருமாத்' தெனும் அற்புதத்தைக் கண்டு வாயாரப் புகழ்ந்தனர். பிறகு வாப்பாக் கண்டு புலவர் குடும்ப சகிதம் கீழக்கரைக்குச் சென்று சந்தோஷமாய் வாழ்ந்திருந்தார்.

54வது அத்தியாயம்.

கணக்குத் தீர்த்தது.

[இது ஆண்டவர்கள் கொடுக்க வேண்டிய 'பாக்கி'யைத் தனது 'வபாத்து'க்குப் பின் மருந்து வியாபாரிக்குக் கொடுத்துக் கணக்குத் தீர்த்ததைச் சொல்லுகின்றது]

காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் 'வபாத்'தாகிப் பல்லாண்டுகளுக்குப் பிறகு, வட நாட்டிலுள்ள மருந்து வியாபாரி யொருவர் ஆண்டவர்களைத் தேடிப் புறப்பட்டுப் பார்ப்பாரூரை நாடி வந்து கொண்டிருந்தார். அவ்வர்த்தகர் வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னமே, 'றவுலா – ஷரீபை'ச் சுத்தஞ் செய்து விளக்கேற்றி 'கிதுமத்து'ச் செய்து கொண்டிருக்கும் ஊழியருக்கு ஆண்டவர்கள் கனவில் காட்சி யளித்துக் கீழ் வருமாறு

கூறினார்கள். "என்னைத் தேடி தூரத்திலிருந்து மருந்து கடை வர்த்தகர் ஒருவர் இங்கு வருவார். அவர் மூன்று நாட்கள் இங்குத் தங்குவார். அவரை நல்ல விதமாக உபசரித்து, அவருக்கு விருந்தளிக்க வேண்டியது. என்னை விசாரிப்பார். வெளியூருக்குச் சென்றிருப்பதாய்ச் சொல்ல வேண்டியது. நான் அவருக்குக் கொடுக்க வேண்டிய கணக்கு பாக்கி ரூபாய் முப்பதே சொச்சமும், அவருடைய விருந்து செலவுக்காக ரூபாய் முப்பதும் என் அறையின் ஓர் மூலையில் இருக்கிறது. அதை எடுத்து என் கடனைத் தீர்க்க வேண்டியது. நான் வராததைக் கண்டு, நான் சென்றிருக்கும் இடத்தை வற்புறுத்திக் கேட்பாரே யானால், நான் 'மௌத்'தாகி விட்டாதாகக் கூற வேண்டியது," என்பதாய் ஆக்ஞாபித்துள்ளார்கள். 'காதிம்'ஆகிய ஊழியர் இப்படிக் கனவு கண்டு விழித்தெழுந்து 'றவுலா-ஷரீபு'க்குட் சென்று பார்த்தார். ஒரு மூலையில் அறுபதே சொச்ச ரூபாய் இருப்பதைக் கண்டார். அதை எடுத்து வைத்துக் கொண்டு, வர்த்தகரின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த வர்த்தகர் நாகூருக்குச் சென்று, ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) ஆண்டவர்களை 'ஜியாரத்'தெனும் தரிசனஞ் செய்து கொண்டு, காஜா ஆண்டவர்களைத் தேடி பார்ப்பாரூருக்கு வந்து சேர்ந்தார். ஆண்டவர்கள் உத்திரவுப்படி அந்த வியாபாரி வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார். "தாங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?" என்று 'தறுகா' ஊழியர் வினவினார். அதற்கந்த வர்த்தகர், "நான் வட நாட்டிலுள்ள மருந்து வியாபாரி. ஹகீம் ஷைகு அலாஉத்தீன் என்ற பெரியாரைத் தேடி வந்திருக்கிறேன். அன்னார் என் கடையில் வாடிக்கையாய் மருந்து வாங்கக் கூடிய ஒரு 'ஹகீம்'. நீண்ட காலமாகக் கொடுக்கல் வாங்கல் உண்டு. இது

வரையில் அறுபதாயிரம் ரூபாய்க்குக் கொள்முதல் செய் திருக்கிருர்கள். தற்போது முப்பதே சொச்ச ரூபாய் தான் பாக்கி. சில மாதங்களுக்கு முன் இறுதியாகக் கடைக்கு வந்தார்கள். நான் நாகூருக்கு 'ஜியாரத்து'க்கு வரப் போவதாக அவர்களிடம் சொன்னேன். அந்தச் சமயம் அவர்களிருக்கும் பார்ப்பாரூருக்கு வந்து சந்தித்துக் கொண்டு போவதாகவும் கூறினேன். அவ்விதமே நாகூருக் குப் போய் என் காரியாதிகளை முடித்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறேன். நான் அவர்களை சந்திக்க வேண்டும். அவர்கள் எங்கே?'' என்று விசாரித்தார். ஊழியர், ஏவற் பிரகாரம் அவரிடம் முப்பதே சொச்ச ரூபாயைக் கொடுத்து, அவர்கள் வெளியூருக்குச் சென்றிருக்கிருர்கள், எனக் கூறினர். வியாபாரி மூன்று நாட்கள் வரை ஆண்டவர்களை எதிர்பார்த்துத் தங்கி யிருந்தார். அன் ஞட்களில் நல்ல விதமாக அவர் உபசரிக்கப் பட்டார். ஆண்டவர்கள் வராததைக் கண்டு வருந்தினர். ''இவ் வளவு தூரம் வந்தும் அவர்களைக் காண வில்லையே! அவர் கள் போயிருக்கும் இடத்தைச் சொல்லுங்கள்; நான் சென்று சந்தித்துக் கொள்கிறேன்,'' என்று ஊழியரிடம் மன்ருடினர். ''நான் அவர்களைக் காணுது செல்ல மாட் டேன்'' என்று சபதஞ் செய்தார்.

அதற்கந்த ஊழியர் எவ்வளவோ மறைத்துக் கூறியும் உண்மையை யுரைக்காதிருக்க முடிய வில்லை. இறுதியாக ஆண்டவர்களது 'கப்ரு – ஷரீபை'ச் சுட்டுக் காட்டி, ''இதோ அடக்கமாகி யிருப்பவர்கள் தான் ஹகீம் ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள்; இவர்கள் இவ்விடத் தில் அடக்கமாகிப் பல வருடங்களாகின்றன. அவர்கள் உங்கள் வருகையைப் பற்றி முன்னதாக கனவில் எமக் கறிவித்து, தங்களுக்குக் கொடுக்கும்படி ரூபாயும் அளித் துள்ளார்கள். கடல் போல் விரிந்த அவர்களது மகிமையை

என்னென் றுரைப்பேன்!" என்பதாய் விபரித்துக் கூறினார். ஆண்டவர்கள் கனவில் தோன்றி, மூன்று நாள் உபசரிப்புக்குரூபாய் முப்பதளித்ததையும் ஊழியர் சொல்லிக் காண்பித்தார். இவ்விருத்தாந்தங்களைக் கேட்ட வர்த்தகர் பிரக்ஞையற்று ஆண்டவர்களுடைய 'கப்ரு'க்கு முன்னால்விழுந்து அழுது புரண்டார்.

"ஆ! கை சேதமே! என்னைப்போல் துரதிர்ஷ்டசாலி எவனு மிருக்க மாட்டான். இத்துணை வருட காலம் நான் அவர்களுடன் பழகியும் மகத்துவத்தை யறியாது போனேனே! இம்மையிலும் மறுமையிலும் அவர்களைக் கொண்டு பேறுகளை அடையாது போய் விட்டேனே! இனி நான் எங்குக் காண்பேன்? இத்தகைய மஹானின் சிநேகம் இனி எனக்கெப்பொழுது கிடைக்கும்?" என்பதாய்ப் புலம்பி யழுதார். பிறகு, அவர் தனது அதிகமான பொருளைச் செலவு செய்து, ஆண்டவர்கள் பேரால் 'கத்தம்' 'பாத்திஹா' ஓதி, அனைவருக்கும் சிறப்பாக விருந்தளித்த பின்னர், மாபெரும் துக்கத்துடனும் துயரத்துடனும் கண்ணீரும் கம்பலையுமாய் ஆண்டவர்கள் சந்நிதானத்தில் நின்று உத்திரவு பெற்று ஊருக்குப் பிரயாணமானார்.

—

55வது அத்தியாயம்.

பல இடங்களில் அடங்கியது பற்றிய விபரம்.

[இது ஆண்டவர்கள் ஓரிடத்தில் 'வபாத்' தாகி அடங்கி, பிறகு அதை விட்டெழுந் தருளி பல்வேறு இடங்களில் அடக்கமாகி யுள்ளார்கள். இது சாத்தியமா? எனும் விஷயம் பற்றிப் பேசுகின்றது.]

ஸைய்யிதினா காஜா ஷைகு அல்ாஉத்தீன் ஹஸனீ க்ஷிஷ்தீ (ரலி) ஆண்டவர்கள் பல்கு ராஜ்யத்தில் பிறந்து அறப், அஜம் இரு நாடுகளையும் சுற்றிப் பார்த்துள்ளார்கள். இந்தியா, இலங்கை முதலிய தேசங்களில் பல விடங்களுக்குச் சென்று, அவ்விடங்களில் தனக்குப் பிரியமான ஸ்தலங்களில் சமாதியாகி யுள்ளார்கள். ஆங்காங்கே அநேக அற்புதாதி காரணங்களைச் செய்து காண்பித்துள்ளார்கள். ஆயிரக் கணக்கானவர்களை இஸ்லாத்தைத் தழுவச் செய்துள்ளார்கள். ஆண்டவர்கள் சென்றவிடங்களி லெல்லாம் 'இஷாஅத்தே-இஸ்லாம்' புரிந்துள்ளார்கள். புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய 'நௌ-முஸ்லிம்'கள், ஆண்டவர்களை இறுதி வரையில் தங்களுடனிருக்கும்படி வற்புறுத்தி யுள்ளார்கள். தாம் சென்று விட்டால் எங்கு அவர்களது நம்பிக்கை பலமாகிய 'ஈமானி'ல் பலவீன மேற்பட்டு விடுமோ, எங்கு அவர்கள் 'இஸ்லாத்'தை விட்டுப் புரண்டு விடுவார்களோ என்ற எண்ணத்தால் அவர்கள் விருப்பப்படியே அந்தந்த ஊரில் தங்கி 'வபாத்'தாகி அடங்கலானார்கள். உதாரணமாக ஸைய்யிதினா ஷாஹுல் ஹமீது பாதுஷாஹ் (ரலி) ஆண்டவர்கள் பர்மாவிலுள்ள தனுஸரிம் என்ற ஊரில், அவ்வூர் ஜனங்களின்

விருப்பப்படியே 'வபாத்'தாகி அடக்கப்பட்டு, பிறகு அற்புதமாய் யாருங் காணுத விதம் அதை விட்டுப் புறப்பட்டு இறுதியாக, * நாகூர் வந்து 28 வருட காலமிருந்து, ஹி. 978 ஆல் அடங்கியுள்ளார்களோ அது போலவே யாம். ஆண்டவன் அத்தகையவர்களுக்கு இத்தகைய சக்தியைக் கொடுத்துள்ளான்.

"நிச்சயமாக 'ஒளலியா'க்களுக்கு மரணமென்பதில்லை; எனினும் அவர்கள் ஒரு வீட்டிலிருந்து மறு வீட்டுக்குச் செல்லுகிறுர்கள்," என்பது நாயக வாக்கியம், இதுவே அவர்கள் விஷயத்தில் 'மௌத்'தாகும். யாக்கையை விட்டு ஆத்மா புறப்படும் போது இந்த வெளி சரீரத்தை விட்டு விடுகிறது. பிறகு அந்த ஆத்மா, வேறு விதமான சரீரத்தை தயார் செய்து கொள்கிறது. முஸ்லிம் தத்துவ ஞானியும் மெய்ஞ்ஞான சொரூபியுமான ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவீ (ரஹ்) அவர்கள் அத்தகைய சரீரத்தை 'நஸ்மா' என்றழைக்கிறுர்கள். ஸர் ஆலிவர் லாட்ஜு கூறுவது போல், அந்த 'நஸ்மா'வை, ஆத்மீக சூட்சும சரீரம் என்று சொல்வதும் பொருந்தும். ஆகவே இறப்பு என்பது அழிவுக்குரியதன்று; சில படித்தரங்களைக் கொண்ட ஜடத்துவ மாறுதலாகும்; ஒரு நிலையினின்றும் மறு நிலைக்கு முன்னேறிச் செல்வதாகும். ஏனெனில், ஆத்மா அழிவில்லாதது; இறப்பும் பிறப்பு மற்ற நிலையிலுள்ளது.

ஹுஜ்ஜத்துல் – இஸ்லாம் இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் **கீமியாயெ ஸஆதத்** என்ற கிரந்த பீடிகையில் குறிப்பிடும் "மனுஷ்யன் அநாதியல்ல வென்கினும் சந்தேகமின்றி முடிவற்ற நித்தியனுக விருக்கின்றுன்" எனும்

---

* இறுதியாக நாகூரில் அடங்கிய வரலாறு பற்றிய விபரத்தை 'என்சைக்லோபேடியா ஆப் பிரிட்டானிகா' என்ற மாபெரும் கிரந்தத்திலும் காணலாம்.

வாக்கியத்தி லிருந்து, மரணத்தோடு மனிதனின் வாழ்க்கை முடிவடைந்து விடவில்லை என்ற உண்மை வெளியாகிறது. நிரியாணத்தி னின்று ஓர் புதிய வாழ்க்கை உதயமாகி, அது என்றுமழியா நித்தியமாய் நின்று நிலவத்தொடங்குகிறது. ஜட உலகத்தைப் பற்றி நிற்கும் பூததேகத்தின் சுக போக இன்பங்களின் வாயல் அடைபட, சகல நுகர்ச்சிகளையும் அந்தரங்கத்திலிருந்து அனுபவித்து வந்த **அந்த மனுஷ்யன்** என்ற சுயம் பொருள் சூட்சுமமாய்க் கிரியைப் புரிய சக்தி பெறுகிறது. பிணி, மூப்பு, தளர்ச்சி, இயலாமை முதலிய தங்கட சங்கட மின்றி மறதி யற்ற முழு மனிதப் பண்பும் அவனில் அமைந்து காணப்படுகிறது. இவ்வுலகில் சஞ்சரித்து வந்தது போலவே எல்லா விதமான புலன்களும் வதியத் தக்க யோக்கியதை யுடையனவாய் ஆகும் போது தேகமும் அவற்றைத் தொடர்ந்தே நிற்கும். ஆகவே, ஆன்மா என்பது யாது? அதைப் பற்றி நிற்கும் தேகம் எத்தன்மை யானது? ஆன்மாவுக்கும் ஸ்தூலத்துக்கு முள்ள சம்பந்த மென்ன? என்பதை வேத விசாரணைக் கொண்டறிந்தோர் ஒருகாலும் சந்தேகங் கொள்ளார்.

"உயிரும் உடலும் ஒரே பொருளின் இரு வித குணங்கள்" என்பதாய் அமரிக்க தத்துவ ஞானி ஸ்பினோஜா கூறுகிறார். "அல்லாஹ்வின் சிருஷ்டிகளுள் எனது ஜோதியே முதன்மையானது" என்றும், "நான் அல்லாஹ்வின் ஜோதியில் நின்று முள்ளவன்; சகல வஸ்துக்களும் எனது ஜோதியில் நின்று முள்ளவை" என்றும் எம் பெருமானார் நபி கரீம் (ஸல்) அவர்கள் அருளி யுள்ளார்கள். எனவே, ஒளிவாகிய 'நூர்' எனும் ஒரே அஸ்திவாரத்திலான உயிர், உடல் என்ற இவ்விரு வஸ்துக்களும் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டு மறைவதும் வெளிப் படுவதும் ஆன்ம சக்தி மிக்கப் பெரியாரிடத்து அதிசயிக்கத்

தக்க கரும மன்று. 'ஒளலியா'க்க ளிடத்தில் ஸ்தூலத் திற்கும் சூட்சுமத்திற்கும் மத்தியில் பிரமாதமான வித்தி யாசம் ஒன்று மில்லை. சூட்சுமத்துள் ஸ்தூலம் அடங்கு வது அன்னாரிடத்தில் ஓர் பெரிய கரும மன்று. ஆகையால் தான், 'ஒளலியா'க்கள் ஆண்டவனுடைய குழந்தைகள். அவர்கள் நேரில் காண்பது போல் மறைவிலும் சகல விஷயங்களையும் அறிந்தவர்கள். ஆண்டவனில் நின்றும் எல்லா வித தத்துவமும் அவர்களுக்கு உண்டாகி இருக் கிறது," என்ற கருத்துப்பட மௌலானா ரூமீ (ரஹ்) அவர்கள் மஸ்னவீ – ஷரீபில் கூறி யுள்ளார்கள்.

இப்பூ மண்டலத்தின் தென் கோடி முனையி லிருந்து வட கோடி முனைக்கு ஒரு க்ஷணப் பொழுதில் செல்ல வல்ல எத்துணையோ சித்துப் புருடர்களின் விருத்தாந்தங் களைச் சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். ஸ்தூலம் சூட்சுமத்துள் ஐக்கியப் பட்டு மறைதல் கூடும் என்பதை தற்காலத்திய விஞ்ஞானிகளும் ஒக்துக் கொண்டுள்ளனர். மின்சார சிகிச்சையால் ஒருவரது உடம்பில் போதுமான அளவுக்கு மின்சாரத்தைச் செலுத்தி விட்டால், கட்புலன் களுக்குப் புலப்படாமல் மறைந்து காணப் படுவான் என்ப தாய் விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்களும் கூறுகின்றனர். மனித உடம்பில் இயற்கையாகவே மின்சார சக்தி அமைந் திருக்கிறது என்ற உண்மையை மனோதத்துவ சாஸ்திரி களும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். தெண்டிப்பின் மீது அந்த மின்சார சக்தியை விருத்தியாம்சத்தில் கொண்டு வந்து, தமது நோக்கம் போல் நடத்த அச்சக் தியை தம் வயப்படுத்திக் கொண்ட 'அல்லாஹ்'வின் தோழர்களாகிய 'ஒளலியா'க்கள், தாம் சிருஷ்டிகளின் பார்வையில் நின்று மறைய நாடும் போது மரண மென்ற போர்வைக்குள் புகுந்து கொள்வதும், அடக்கப்பட்ட பின்

ஸ்தூலத்தை சூட்சுமத்துள் ளடக்கி *'கப்ரு'களி லிருந்து வெளியே புறப்படுவதும் அன்னவர்களுக்கு எளிதாகும்.

ஆகவே, காஜா ஷைகு அலாஉத்தீன் (ரலி) ஆண்டவர்கள் சமய சந்தர்ப்பங்களை உத்தேசித்தும், இறைவனது உத்திரவு கொண்டும் பதினொரு ஸ்தலங்களில் அடங்கியுள்ளார்கள். கடைசியாக நாகபட்டணத்தைச் சார்ந்த **பார்ப்பாரூரில்** தான் இறுதி 'வபாத்'தாய் நிலைத்தார்கள் என்று விளங்குவதில் சந்தேக மில்லை. அவர்கள் அடங்கி விளங்கும் ஒவ்வொரு இடத்திலும் நிகழ்ந்த 'கருமாத்து'கள் அனந்தம். இன்றும் அநேக அற்புதாதி காரணங்கள் நிகழ்ந்து வருகின்றன. சேகரஞ் செய்து வைக்கப் படாததால் அவை யனைத்தும் கிடைப்பதரிதாகி விட்டது. தெரிந்த வரையில் எழுதப் பெற்றிருக்கிறது.

---

* ஒரு முறை 'வபாத்'தெனும் நிரியாணமாகி அடக்கப்பட்டப் பிறகு, திரும்பவும் இத்தரணிக்கு உயிர் பெற்றுத் திரும்ப முடியுமா எனும் விஷயம் பற்றி, **ஔலியாக்களின் அகமியம்** என்ற நூலைப் பார்க்கவும்.

பார்ப்பாரூர்ப் பிரார்த்தனைப் பதிற்றொன்று.

நாகூர் தறுகாப் புலவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருமான

வா. கு. முகம்மது ஆரிபு நாவலர்

அவர்களால் இயற்றி யளிக்கப் பெற்றது.

இறைவன் வணக்கம்.

நேரிசை வெண்பா.

உணர்ந்தவ ருள்ளத் துறைஞான தீப
மணவாளன் றன்னை வணங்கி — யிணக்கமுறும்
பார்ப்பாரூர்ப் பற்றிப் பதிற்றொன்றுற் பாடுமெமைக்
காப்பாற் றுபனவனே காண்.

நூல்.

(கட்டளைக் கலித்துறை.)

குலமோங்கு நங்நபி நாயகர்க் கொற்றசெங் கோற்
குலத்திற்
கலமோங்கு மாழிக டலெனக் காசிக் கடைதர நற்
றலமோங்கும் பாலாப்பூர் தன்னிலடங்கித் தரையனைக்கு
நலமோங்குஞ் செய்கலா வுத்தீனென் றேதுநங்நாயகரே. (1)

வல்லவன் மாவருண் மேவும் பல்கீநகர் மாண்பினிய
பல்லவர் வாழப் பிறந்து பலதிசைப் பண்படுத்தி
யெல்ல வராமதி வீரரர் மன்பதி யேந்திவரு
நல்லவர் செய்கலா வுத்தீனென் றேதுநங்நாயகரே. (2)

வையந் துதிக்க விளையும்பற் காரண வண்மையதைக்
கையு மெய்யு மெனக் காட்டி யவனியோர் காத்தருளி
யுய்ய வருட்சுரந் தாண்டு மீ ரோடினையோர்ந்தவ நோ
நைய வருட்புரி வீர்செய்க லாவுத்தீ னுயகரே. (3)

வாட்ட முறும் பல நோய்களுக் குற்ற மருந்தென நற்
றேட்ட முடன் வருவார்க் கருட் பாத தெரிசனையைக்
காட்டி யணைக்குங் கீழக்கரை காவல காத்தடியே
னுட்ட முறைவருள் வீர்செய்க லாவுத்தீ னுயகரே. (4)

கஞ்சம லர்பத மேவிடி லெந்துயர் காற்றினிடைப்
பஞ்சென வேபறந் தோடும் பிறவொரு பாதை யென்று
நெஞ்சை விடாமநு மேர்வடி தன்னை நினைத்ததனு
லஞ்ச லென வருள்வீர் செய்கலாவுத்தீ னண்ணல்ரே. (5)

ஓடம் படு துளை யன்ன துயர்க்கட லுள்ளமிழ்ந்து
சாடவி டாமலெம் மெய்க்குல மாமனை சம்பத்துக்கள்
தோடம் படா தென்றுங் காத்தருள் வீரெனத்
தொட்டுக்கவி
பாட வருங் கோரிப் பாளைய லாவுத்தீன் பாக்கியரே. (6)

நலித்துறை மேவா துடலுயிர் காக்கவு நற்கட்டனைக்
கலித்துறை யாலறை கூஉயருள் வேண்டினேங்
காத்தருள்வீர்
சொலித்துறை யெண்ணில டங்காத வற்புத
சோபனத்தீர்
வலித்துறை மேய செய் கேயலா வுத்தினெம்
வள்ளலரே. (7)

பச்சமுற வுமதார் மரைக் காலடி பான்மை யெமை
யுச்சமுற கலையாய் விலுணர் வர யூக்கிடு மென்
றச்ச மறப்பணி கொண்டெமை யென்றென்று
மாண்டுநித
நச்சி யருட் பல **வத்துறை** லாவுத்தினு யகரே. (8)

அள்ளிக் கொடும்பல செல்வ பொருளெவை யாயிடினுங்
கள்ளிக் கொடும்படி நீழலுமானக் கரைந்திடு மா
லுள்ளக் கறைதுலை யும்பொரு டீந்தரு ளுண்மையுறும்
பள்ளிவா சற்றுறை செய்கலா வுத்தினெம்
பான்மையரே. (9)

அலுத்துப் பலவினை யாலவ லம்பட வானதினு
லுலுத்த புறக் கொடும் பாவிகள் வம்பிடு மூசலினை
சிலுத்துச் சிதையநுஞ் சீரடி யொன்று சிறக்கவருட்
கலுத்துறை செய்கலா வுத்தினென் ருேதிடுங்
காரணரே. (10)

(அறுசீர்க் கழிநெடிலாசிரியம்.)

காரணங்க ளெத்தனை யோகட லுலக மடைமாறு
கருத்தி லுன்னி
பூரணர் யாவருமே போற்றியடி பணிந்திறைஞ்ச
புதுக்கி வாழு
மாரணங் கொள் ளொருபத்தார் மறைந்துநிலை
பார்ப்பாரு ராரத் தேண்டி
சீரணங்க வந்துற்ற செய்கலா வுத்தி னெஞ்
செம்மலே ரே. (11)

7B
5-71